# இயேசுவே வாரும்

காலேப் யோசுவா
செல்: 9444701953, 9444709980
மின்னஞ்சல் : brocalebjoshua@gmail.com
வலைத்தளம்: www.yesuvaevaarum.com
முகநூல்: www.facebook.com/yesuvaevaarum

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்.வெளி.22.20

32,ஜெமிஎத்திராஜ் நகர்,
எரையமங்கலம் ரோடு,
மப்பேடு, பேரம்பாக்கம் (வழி)
திருவள்ளூர் மாவட்டம் - 631402

## 1. தேவன் மனுஷனை அவருடைய மகிமைக்கென்று சிருஷ்டித்தார், உருவாக்கினார், படைத்தார் (ஏசா.43:7) God created, formed, made man for His glory

## 2. கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தை அறிவிப்பதில் டிவி, வாட்ஸ்ஆப், யூடியூப், பேஸ்புக், டுவிட்டர் போன்ற செய்தி பாரிமாற்றி செயலிகள் வேதவாக்கியங்களின் அடிப்படையில் ஏற்றுகொள்ளக்கூடியது இல்லை.

1. நான் சத்தியத்தின்படி நேசிக்கிற எனக்கு பிரியமானவர்களே: கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க நாம் அனைவரும் பூரணபுருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் பூரணப்படும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், கர்த்தரால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய காலேப் யோசுவா எழுதுகிறதாவது : சத்தியத்தை நீங்கள் அறிவீர்கள். நிச்சயமாக நீங்கள் அறிந்து கொள்ள வேண்டிய சத்தியம் உங்களை ஏற்ற வேளையில் விடுதலையாக்கும். ஒருவரும் உங்களுக்கு போதிக்க வேண்டியதில்லை; நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருப்பதால், அந்த அபிஷேகம் சகலத்தையும் குறித்து உங்களுக்கு போதிக்கிறது. அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்கு போதித்தப்படியே அவரில் நிலைத்திருப்பீர்களாக. வேதவாக்கியங்களில் / போதனைகளில் நிலைத்திருப்பீர்களாக.

2. அநாதி தேவன் மனுஷனை சிருஷ்டித்ததின் நோக்கத்தை அறியும் அறிவை பற்றிக்கொண்டிருக்க மனதில்லாத, போதிக்கப்படாத ஆண்களும் பெண்களும் ஒருவர் மேல் ஒருவர் விரகதாபத்தினாலே (Lust) பொங்கி, தங்கள் இருதயத்தில் உண்டான கேடான சிந்தனைகளுக்கு தங்களை ஒப்புக்கொடுத்து, பாவமுள்ள தன்மையிலிருந்து உண்டாகும் பாவமுள்ள இச்சைகளினால் தகாதவைகளை செய்யும் மனுஷருடைய ஜென்ம சுபாவத்திற்குரிய, சரீரத்திற்குரிய சில ஆசை இச்சைகளை குறித்து இங்கு நாம் தியானிப்போம். இது குறித்து ஏற்கெனவே செப்டம்பர் 2002 ல் விபசாரம் (adultery) வேசித்தனம் (fornication) வேசிமார்கம் (harlotery) என்ற தலைப்பில் 11 பக்கங்களைக் கொண்ட ஒரு தெளிவான நிருப மடலை எழுதியிருந்தேன். இந்நாட்களில், நமது நாட்டின் உச்ச நீதிமன்றத்திற்கடுத்த தீர்ப்புகளை அறியவந்தபோது, மீண்டும் இதுகுறித்து சுமார் 17 ஆண்டுகளுக்குப்பின் இந்த நிருபத்தை எழுத எனக்குள் வாசம் செய்யும் தேவனுடைய ஆவியினால் தூண்டப்பட்டேன். எழுதினேன். இது இப்பொழுது உங்கள் கரத்தில் உள்ளது. பிரயோஜனப்படுத்திக்கொள்வது, நிராகரிப்பது, உதாசினப்படுத்துவது உங்களுக்கடுத்த காரியம்.

3. நான் இந்த நிருபத்தை எழுத ஆரம்பிக்கும் முன் உங்களோடு நமது உச்ச நீதிமன்றதிற்கடுத்த ஒரு காரியத்தை பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். அதாவது நமது உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதிகள் குறித்து, மிக்க மனசஞ்சலத்துடன் இதை உங்களுடன் பகிர்ந்துகொள்கிறேன். நமது மத்திய அரசின் முன்னாள் சட்ட அமைச்சர் திரு.சாந்தி பூஷன் அவர்கள், நமது உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதிகள் குறித்து மிக்க உறுதியாக கூறி, அதற்காக தான் சிறைவாசம் அனுபவிக்கவும் தயார் என்று கூறி, கீழ்கண்டவாறு கூறுகிறார். அதாவது நமது 16 உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிகளில் எட்டு பேர் நிச்சயமாக நேர்மை இழந்தவர்கள். (Definitely Corrupt) 6 பேர் நிச்சயமாக நேர்மையானவர்கள் (Definitely Honest) மற்ற இரண்டு பேர் குறித்து அவர்கள் நேர்மையானவர்களா அல்லது நேர்மையற்றவர்களா என நிச்சயமாக கூறமுடியாது என்கிறார். இது செப்டம்பர் 17-ஆம் தேதி 2010 ஆம் ஆண்டு அதாவது சுமார் எட்டு ஆண்டுகளுக்கு முன் பத்திரிக்கைகளில் வெளிவந்த ஒரு கடினமான செய்தியாகும். சட்ட அமைச்சரே உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதிகளின்


Friday 17th Sep. 2010.

Eight of sixteen CJIs were corrupt: Ex-law minister

தரம் குறித்து விமர்சிப்பது மிக்க கஷ்டமாக நமக்கு தோன்றுகிறது. இதிலிருந்து உச்சநீதிமன்றத்தின் நீதிபதிகள், நீதியை அநீதியாகவும், அநீதியை நீதியாகவும் தீர்ப்புக்கூற ஏதுவாயிருக்கிறது என்பதை நாம் அறியலாம். தீமையை நன்மையென்றும், நன்மையை தீமையென்றும் சொல்லி, கசப்பை தித்திப்பும், தித்திப்பை கசப்பு என்றும் சொல்லி

சத்தியமானது புரட்டப்பட்டு வருகிறது. இவர்களுக்கு ஐயோ என்று ஏசாயா 5:20 ல் கூறுகிறான். எனது வாலிப பிராயத்தில் கால்நடை மருத்துவ படிப்பில் வெற்றி காண முடியாததினால் நான் மத்திய இரயில்வே வேலையில் அமர்ந்தேன். எனக்கும் அதிகாரிகளுக்கும் இடையில் அடிக்கடி பிரச்சனைகள், இதனால் அவர்கள் என்னை துன்புறுத்தி வந்தனர். இதனால் ஒரு காலகட்டத்தில் நான் என்னுடைய மேல் அதிகாரிக்கு "Due to your unawareness of Establishment Rules and Regulations, You have put me into lot of difficulties" என எழுதினேன். இந்த வார்த்தை இன்று வரை என் மனதில் பதிந்துள்ளது. என்னால் மறக்க முடியவில்லை. அவர்கள் இதை Serious Misconduct என்றார்கள். நானோ, நான் எழுதியத்திற்கு இத்தனை ஆதாரங்கள் உள்ளன. இந்த நடவடிக்கைகளை என் மீது எந்த சட்டத்தின்கீழ் எடுத்தீர்கள்? நீங்கள் சட்டத்திற்கு கீழ்படியவில்லை. அதிகார துஷ்பிரயோகம் செய்தீர்கள். அதன் வாயிலாக நான் துன்புறுத்தப்பட்டேன். நீங்கள் சட்டத்தின்படி என்மீது நடவடிக்கை எடுத்திருந்தால், அதை நிருபியுங்கள். நிருபிக்காமல் ஒரு கீழ்மட்டத்தில் உள்ள பணியாளி, மேல் மட்டத்தில் உள்ள ஒரு அதிகாரிக்கு இப்படி எழுதுவது Serious Misconduct என்றீர்கள். முடிவு : என்மீது ஒன்றன்பின் ஒன்றாக 8 குற்றப்பத்திரிக்கைகள். உதாரணத்திற்கு ஒன்று : நான் Construction Department ல் வேலை செய்தேன். வாரத்தில் ஒரு நாள் விடுமுறை. அந்த நாளில் எனது பணி ஸ்தலத்தை விட்டு நான் வெளியே செல்ல வேண்டுமென்றால், அனுமதி பெற்று தான் செல்ல வேண்டும். நான் அனுமதி கேட்டால் கொடுப்பது இல்லை. ஆதலால் நான் அனுமதி இல்லாமலே வெளியே சென்று வந்தேன். மறுநாள் எனக்கு குற்றப்பத்திரிக்கை. இன்று எவ்வாறு எனது கரத்தில் பரிசுத்த வேதாகமத்தை கொண்டு, அனைத்து உபதேசங்களையும் நிதானிக்கிறேனோ, அதேபோன்று அந்நாட்களில் Railway Establishment Rules and Regulations மற்றும் அநேக சட்டதிட்ட புத்தகங்களை என் கரத்தில் கொண்டுதான், அதிகாரிகளின் நடவடிக்கைகளை எதிர்பேன். முடிவாக நான் இரயில்வே பணியிலிருந்து Dismiss பண்ணப்பட்டேன். மும்பை, உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தேன். நீதிபதி நான் மேல்அதிகாரிகளுக்கு அடங்கி பணி செய்வதற்கு தகுதியற்றவன் என்றுகூறி இரயில்வே நடவடிக்கைகள் சரியே என்று தீர்ப்பு கூறி, Dismisal from Service ஐ Removal from Service என மாற்றினார்கள். உயர்நீதிமன்றத்திலே மேல்முறையீடு செய்தேன். அது தள்ளுபடி செய்யப்பட்டது. இது எனது பார்வையில் அன்று முதல் இன்று வரை ஒரு அநீதியான தீர்ப்பாகத்தான் தெரிகிறது. Dismisal – நான் இனிமேல் எந்த அரசு பணியிலும் சேர முடியாது. Removal – அரசு பணிகளில் வாய்ப்பு கிடைத்தால் இனி செய்யலாம் என்பதாகும். இன்றும் நிறைய அரசு அலுவகங்களில் அதிகாரிகள் தங்களது சுய சட்டதிட்டங்களையே பின்பற்றுகிறார்கள். ஜனங்கள் மீது அடாவடிதனமான நடவடிக்கைகள் எடுக்கிறார்கள். ஜனங்கள் அதற்கு அடங்கி போக வேண்டிய நிலையில் தான் இருக்கிறார்கள். ஆக நீதிமன்றங்களின் தீர்ப்பு சரியோ, தவறோ நாட்டு பிரஜைகளாகிய நாம் அதை கனம் பண்ணவேண்டியவர்களாக தள்ளப்படுகிறோம். ஒரே சம்பவம் குறித்து தீர்ப்புகள் சரியானதோ அல்லது தவறானதோ இன்று ஒருவிதமாகவும், சில ஆண்டுகள் கழித்து அதற்கடுத்த காரியத்தில் மாறுபாடான, மாற்றம் கொண்ட தீர்ப்பாகவும் இருக்கிறது. ஆனால் வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை என்று இயேசு கூறுகிறார். (லூக்.21:33) எனக்கோ தேவனுக்கு செவிக்கொடுக்கிறதைப் பார்கிலும் மனுஷருக்கு செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்காது. (அப்.4:19) ஆதலால் தான் இதுகுறித்து தாவீதின் குமாரனும், எருசலேமின் ராஜாவுமாகிய பிரசங்கி : சூரியனுக்கு கீழே செய்யப்படுகின்ற காரியங்களை எல்லாம் கவனித்துப்பார்த்தேன் : இதே எல்லாம் மாயையும், மனதிற்கு சஞ்சலமுமாயிருக்கிறது என்கிறான். (பிரச.1:14) பின்னும் சூரியனுக்கு கீழே நான் நியாய ஸ்தலத்தைக்கண்டேன், அங்கே அநியாயம் இருந்தது ; நீதி ஸ்தலத்தையும் கண்டேன். அங்கே அநீதி இருந்தது என்கிறான். (பிரச.3:16) முன்பு நடந்ததே இப்பொழுதும் நடக்கிறது; இனி நடக்கப்போகிறதும் முன்னமே நடந்ததுதான். (பிரச.3:15) கவனியுங்கள், உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது. (1யோ.5:19) ஆதலால்தான் நம்மத்தியில் இத்தகைய காட்சிகள்

4. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக / மீட்பராக எற்றுக்கொள்ளாதவர்கள், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஜலத்தினாலும், ஆவியினாலும் மறுபடியும் பிறவாதவர்கள் மாம்சத்திற்குட்பட்டிருப்பார்கள். இவர்களுடைய ஜென்மசுபாவத்திற்குரிய அவயவங்களில் பாவ இச்சைகள் கிரியை செய்யும். ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்: அவைகள் அவனுக்கு பைத்தியமாக தோன்றும். அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால் அவைகளை அறியவும் மாட்டான். (1கொரி.2:14) இச்சியாதிருப்பயாக என்று நியாப்பிரமாணம் சொல்லாதிருந்தால், இச்சையானது பாவம் என்று நமக்கு தெரியாது. (ரோ.7:7) பொல்லாங்கானவைகளை இச்சையாதே. (1கொரி.10:6) மோசம் போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகாதே. மனுஷரை கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும், சேதமுமான இச்சைகளை விட்டு விலகு. லௌகிக இச்சைகளை நாடாதே. (தீத்.2:12) இச்சைகளுக்கும் இன்பங்களுக்கும் அடிமையாயிராதே. உங்கள் அவயவங்களில் போர் செய்கிற இச்சைகளை நாடாதே. ஆத்துமாவுக்கு விரோதமாக போர்செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகு.(1பேது.2:11) பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு விலகி ஓடு.(2தீமோ.2:22) ஓடு ஓடு, விலகி ஓடு. உன்னுடைய இருதயத்திலே ஒரு பெண்ணின் அழகை இச்சியாதே. (நீதி.6:25) பிறனுடைய மனைவியை இச்சியாதே. (யாத்.20:17) ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரம் செய்தாயிற்று. (மத்.5:28) துர்இச்சைகளுக்கு இடமாக உன் உடலை பேணாதே. (ரோ.13:14) துர்இச்சைகளை உண்டு பண்ணும் உன் அவயவங்களை அழித்துப்போடு. (கொலோ.3:5) நியாயப்பிரமாணத்தினால் இப்படிப்பட்ட இச்சைகள் யாவும் பாவம் என்று அறியவந்தேன். இப்பொழுது கவனியுங்கள், அவனவன் தன்தன் சுயஇச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பம் தரித்து, பாவத்தை பிறப்பிக்கிறது. பாவம் பூணரப்படும் போது மரணத்தை பிறப்பிக்கிறது. (யாக்.1:14,15) பாவத்தின் சம்பளம் மணரம் (ரோ.6:23) ஆக

மாம்சத்திற்கேற்ற இச்சைகளின் படி நடக்கிறவர்கள் மரணத்திற்கு பாத்திரவான்களாயிருக்கிறார்கள். நம்முடைய மாம்சசரீரம் உணர்ச்சிகளின், இச்சைகளின் பிறப்பிடமாக இருக்கிறது. உணர்ச்சிகள், இச்சைகள் தான் ஒருவனை பாவம் செய்ய தூண்டுகிறது.

**5. நம்முடைய சரீரத்தில் நாம் தேவனுக்கு எதிர்த்து நிற்கும் பாவத்திற்குரிய சில லௌகிக இச்சைகளைக் குறித்து சற்று தியானிக்கலாம்.**

(அ) ஆணோடு பெண் அல்ல, பெண்னோடு ஆண் அல்ல, மாறாக ஆணோடு ஆண், பெண்னோடு பெண் துர்இச்சைகளுக்கு இடமாக தங்கள் சரீரதத்தை பாவிக்கும் மதிகேடான, அவமானத்தை மனுகுலத்தின் மீது கொண்டுவரும் அவலட்சனமான ஓரினசேர்க்கை.

(ஆ) திருமணம் ஆகாத நிலையில், சேர்ந்து கூடி வாழாத நிலையில், ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் அகந்தையான வீண் வார்த்தைகளை பேசி மாயையில் இழுப்புண்டு, மாம்ச இச்சைகளினாலும், காமவிகாரங்களினாலும் நீதிமார்க்கத்தை விட்டு விலகி, கேட்டுக்கு அடிமையாகும் வேசித்தனம்.

(இ) செம்மையான நீதிமார்க்கத்தை விட்டு விலகி, வழிதப்பி நடந்து, ஒரு ஆண், பெண் விவாகமின்றி கூடி சேர்ந்து வாழ்ந்து, விவாக மஞ்சத்தை அசுசிப்படுத்தும் நெறி தவறிய கனவீனமான இல்லற வாழ்க்கை. மற்றும்

(ஈ) திருமணம் ஆன ஆண், பெண் இல்லற வாழ்க்கையில் : கணவன் மற்றொரு பெண்ணுடனும், மனைவி மற்றொரு ஆணுடனும் தங்கள் மாம்சஇச்சைகளினால் பொங்கி, காம வெறிக்கொண்டு, கணவன் மனைவிக்கு விரோதமாகவும், மனைவி கணவனுக்கு விரோதமாகவும் நடப்பிக்கும் தகாத பாலியல் உறவாகிய விபசாரம்.

இவைகள் யாவும் அசுத்த இச்சையோடே மாம்சத்திற்கேற்றபடி நடந்து தங்கள் சிந்தனையினால் வீணர்களானவர்களுடைய செயலாகும். ஆதலால் தேவன் அவர்களை, அவர்கள் இருதயத்தின் கடினத்திற்கு ஒப்புக்கொடுத்துவிட்டார். ஆனால் கிறிஸ்துவை தரித்துக்கொண்டவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். (கலா.5:24) கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உலகம் எனக்கு சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்கு சிலுவையிலறையுண்டுயிருக்கிறேன். ஆமென். (கலா.6:14)

6. இவ்வாறாக மனுஷருடைய அக்கிரமம் பூமியிலே, நாளுக்குநாள் அன்று முதல் இன்று வரை பெருகிக் கொண்டே வருகிறது. அவர்களது இருதயத்தின் நினைவுகள், தோற்றம் எல்லாம், நித்தமும் பொல்லானதாகயிருக்கிறது. மனுஷனை தன்னுடைய மகிமைக்கென்று சிருஷ்டித்த தேவனுக்கு முன்பாக உலகமானது குறை உள்ளதாகயிருக்கிறது. (The whole World is guilty before God) இதுகுறித்து ரோ.3:19 ல் தியானிக்கலாம். இது நிமித்தமாக பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காக கர்த்தர் மனஸ்தாபப்பட்டார். அது அன்று அவர் இருதயத்திற்கு விசனமாயிருந்தது. (ஆதி.6:6) இன்று கூட விசனமாயிருக்கிறது. ஆதலால் இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின் படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது என்கிறார். ஆமென். கர்த்தராகிய இயேசுவே, வாரும்.

**7. மனுஷன் யார் ?** தேவன் ஒரு ஆவி. God is a spirit (யோ.4:24) இந்த ஆவியாகிய தேவன், தான் தேவன் என்று அறியப்படும் பொருட்டு, தனக்கென்று ஒரு மகிமையின் சரீரத்தை உடையவரானார். அதுதான் வார்த்தை. (Logos) ஆதியிலே வார்த்தையிருந்தது. அந்த வார்த்தையே தேவன். தேவன் வார்த்தையில் தேவன் என்று அறியப்படலானார். தேவன் தம்முடைய சாயலாகவும் (Image) ரூபத்தின் படியேயும் (Likeness) மனுஷனை சிருஷ்டித்தார். மனுஷன் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட படியினால் தேவனோடு உறவாடும் தன்னை கொண்டவனாக இருந்தான். சாயல் என்றால் என்ன? அது பிரதி பிம்பம். கண்ணாடியில் ஒருவன் தன்னை பார்ப்பது போன்று. கண்ணாடி அந்த மனுஷனுடைய சாயலை பிரதிபலிக்கும். ஆக மனிதன் தேவ சாயலில் தன்னை பிரதிபலிக்கிறான். ரூபம் என்பது அந்த சாயலைப்போன்ற ஒற்றுமையுடையது. அதாவது மனுஷனுடைய ஆவிக்குரிய சரீரம் தேவசாயல். அவனுடைய ஜென்ம சரீரம் தேவனுடைய ரூபம். இப்பொழுது தேவனாகிய கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவசுவாசத்தை அவன் நாசியில் ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான். (ஆதி.2:7) அதாவது கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே தேவனுடைய ரூபத்தைப்போன்று உருவாக்கி ஜீவசுவாசத்தை அவன் நாசியில் ஊத அவன் ஜீவாத்துமாவானான். ஆக மனுஷன் தன் ஆவியின் சுபாவத்தை வெளிப்படுத்த, மாம்ச சரீரத்தில் ஜீவாத்துமாவானான். இன்னும் சற்று விளக்கமாக கூறப்போனால் தேவனுடைய சாயலாக ஆவிக்குரிய சரீரத்தில் சிருஷ்டிக்கப்பட்ட மனுஷனுக்கு மாம்சமும், இரத்தமும் கிடையாது. அது தியாபெனி சரீரம் (லூக்.24:39) ஆவிக்குரிய சரீரத்தில் இருந்த மனுஷனுக்கு தேவன் மண்ணினாலே பூமிக்குரிய மேனியை கொடுத்து அதாவது ஜென்ம சரீரதத்தை பூமியின் மண்ணினாலே கொடுத்து, தம்முடைய ஜீவ சுவாசத்தை அவன் நாசியில் ஊத, அவன் ஜீவாத்துமாவானான். தேவனுடைய ஆவியின் சுபாவத்தை வெளிப்படுத்த ஜீவாத்துமாவானான். அதே வேளையில் தேவன் தாம் கொடுத்த ஜீவசுவாசத்தை திரும்ப பெற்றுக்கொள்ளும்போது, பழையபடியும் தான் எடுக்கப்பட்ட மண்ணுக்கே திரும்புகிறான். (சங்.104:9)

8. இப்பொழுது தேவனாகிய கர்த்தர். கிழக்கே ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை உண்டாக்கி, தாம் உருவாக்கின மனுஷனை அதிலே வைத்தார். (ஆதி.2:7) இது தேவனுடைய வனமாகிய ஏதேன் என்று அழைக்கப்பட்டது. (எசே.31:9) இதன்பின் தேவனாகிய கர்த்தர், பார்வைக்கு அழகும், புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்களையும், தோட்டத்தின் நடுவிலே ஜீவவிருட்சத்தையும், நன்மை தீமை அறியதக்க விருட்சத்தையும் பூமியிலிருந்து

முளைக்கப்பண்ணினார். (ஆதி.2:19) தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக்கொண்டுவந்து, அதை பண்படுத்தவும், காக்கவும் வைத்தார். தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி : நீ தோட்டத்தில் உள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்க வேண்டாம், நீ அதை புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார். (ஆதி.2:15-17) இந்த வேளை வரை ஏவாள் ஆதாமின் சரீரத்திலிருந்து எடுக்கப்படவில்லை. அவன் தன் மனைவியாகிய ஏவாளை தன் சரீரத்தில் கொண்டவனாகவேயிருந்தான். ஆதாம் ஆணும் பெண்ணுமாக ஒரே சரீரத்தில் அந்த வேளையில் இருந்தான். இப்பொழுது தேவனாகிய கர்த்தர் மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார். (ஆதி.2:18) தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார். அவன் நித்திரையடைந்தான். அவர் அவன் விலாஎலும்புகளில் ஒன்றை எடுத்தார். இங்கு கவனியுங்கள். ஆதாமின் விலா எலும்புகளில் ஒன்று மட்டுமே என்று கூறப்பட்டுள்ளது. சிலர் இது இடது விலா எலும்புகளில் ஒன்று என்றும், சிலர் வலது விலா எலும்புகளில் ஒன்று என்றும் கூறி தேவனுடைய வார்த்தையை குறைத்தும் கூட்டியும் தங்களை மேதாவிகள் என காண்பித்துக் கொள்கிறார்கள். இது தவறு. அவனது விலா எலும்புகளில் ஒன்றை எடுத்தார். பின் அந்த இடத்தை சதையினால் அடைத்தார் என்றே கூறப்பட்டுள்ளது. இப்பொழுது கவனியுங்ள். போர்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான். உடனே இரத்தமும், தண்ணீரும் புறப்பட்டது. (யோ.13:34) இரத்தமும், தண்ணீரும் குழந்தை பிறப்பில் ஒரு பெண்ணிலிருந்து வெளிவருவதாகும். ஆதியில் ஆதாம் விலாவிலிருந்து ஏவாள் புறப்பட்டாள். இங்கு கிறிஸ்துவின் மனைவி உலகதோற்றம் முதல் அவருக்குள் இருந்தவள் கல்வாரியில் வெளிப்பட்டாள். இங்கும் விலாவில் குத்தினான் என்றே கூறப்பட்டுள்ளது. அது இடது புறமா அல்லது வலது புறமா என்று கூறப்படவில்லை. ஆனாலும் மத்.25:34 யை பார்க்கும் போது தமது வலது பக்கத்தில் நிற்பவர்களை பார்த்து, வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே என்கிறார். இதிலிருந்து வலது விலாவாக இருக்கலாமோ என்று யூகிக்க நேர்கிறது. ஆனால் உறுதியாக சொல்வதற்கு எங்கும் வசன ஆதாரங்கள் இல்லை. அதன்பின் தேவனாகிய கர்த்தர், மனுஷனில் இருந்த எடுத்த விலா எலும்பை மனுஷியாகிய உருவாக்கினார். அவளை அவனிடத்தில் கொண்டுவந்தார். ஆதாம் இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாயிருக்கிறாள், மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி எனப்படுவாள் என்றான். (ஆதி.2:21-23) நம்முடைய விசுவாசம் என்ன? நாம் உலகத்தோற்றத்திற்கு முன்னே கிறிஸ்துவுக்குள் தெரிந்துகொள்ளப்பட்டோம். (எபே.1:4) அதாவது நாம் பிறப்பதிற்கு முன்னே கிறிஸ்துவுக்குள் அவரது மணவாட்டியாகயிருந்தோம். ஆதாமுக்குள் அவனுடைய மணவாட்டி ஏவாள் இருந்தது போன்று. காலம் நிறைவேறின போது, கிறிஸ்துவின் மணவாட்டி கல்வாரியில் அவரது விலாவிலிருந்து வெளியே எடுக்கப்பட்டாள். மீண்டுமாக எடுத்துக்கொள்ளப்படுதலில் அவரோடு இணைவாள். இது கிறிஸ்துவினுடைய மணவாட்டிக்குரிய சுதந்தரம். திரித்துவ ஸ்தாபன சபையாருக்கும், உலகத்தாருக்கும் உரிய சுதந்தரமில்லை.

9. இப்பொழுது ஆதாம் தன் மனைவியை பெற்றான். ஆனாலும் அவர்கள் இருவர் அல்லை. மாறாக ஒரே சரீரம். ஏனென்றால் ஏவாள் ஆதாமின் ஒரு பாகம் தான். ஆக ஆவிக்குரிய மனிதனின் மனைவி அவன் சரீரத்தின் ஒரு பாகமாக இருக்கிறாள். தேவனுடைய நியமம் ஒருவனுக்கு ஒருத்தி. அந்த ஒருத்தி அவன் சரீரத்தின் பாகம். அந்த ஒரே மனைவியானவள் தன் கணவனுடைய எலும்பில் எலும்பும், அவன் மாம்சத்தில் மாம்சமாயிருக்கிறாள். அவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என அழைக்கப்பட்டாள். இதின் நிமித்தமாக புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு தன் மனைவியோடே சேர்ந்திருப்பான். அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள். (ஆதி.2:23-24) ஆக ஒருவனுடைய மனைவி அவன் சரீரத்தின் ஒரு பாகமாக, அவனது ஏற்ற துணையாக இருக்கிறாள். அந்த தன் சரீரத்தின் ஒரு பாகமாகிய, அநேகம் குணசாலியான ஸ்திரீகளுக்குள், அவள் மேற்பட்டவள், கர்த்தருக்கு பயப்படுகிற அவள் யார் என்பதை கண்டுபிடிக்க வேண்டியது அவன் சுயாதினம் / பொறுப்பு. ஒரு ஆவிக்குரிய மனுஷன் தன் சரீரத்தின் ஒரு பாகமாகிய மனைவியை தேர்ந்தெடுக்கும் போது அங்கு ஓரினசேர்க்கை, வேசித்தனம், விவாகமின்றி இல்லறவாழ்க்கை, கர்ப்பத்தடை, கருச்சிதைவு, விபசாரம் போன்ற ஈனத்தனமான செயல்களுக்கு அவர்கள் சரீரத்தில் இடமில்லை. அவர்களுடைய வாழ்க்கை அகராதியில் இச்சொற்களை காணமுடியாது. ஏனென்றால் அவர்கள் தங்கள் ஆசை இச்சைகளை ஏற்கெனவே சிலுவையில் அறைந்துவிட்டார்கள். ஆவிக்கேற்றபடி நடக்கவர்களிடத்தில் மாம்ச இச்சைக்கு இடமேயில்லை. (கலா.5:16-21) அவர்கள் பழைய மனுஷனை களைந்து புதிய மனுஷனை தரித்துக்கொண்டவர்கள். (எபே.4:22-24)

10. இப்பொழுது 1யோ.2:15-17 வசனங்களில் நாம் தியானிக்கிறது என்ன? உலகத்திலும் உலகத்தில் உள்ளவைகளிலும் அன்பு கூறாதிருங்கள். ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பு இல்லை. ஏனென்றால் மாம்சத்தின் இச்சையும் (Lust of fiesh), கண்களின் இச்சையும் (Lust of Eyes) , ஜீவனத்தின் பெறுமையும் (Pride of Life), உலகத்தில் உள்ள இவைகள் யாவும் பிதாவினால் உண்டானது அல்ல. அவைகள் உலகத்தினால் உண்டானவைகள். நம்முடைய சரீரத்தில் நாம் தேவனுக்கு எதிர்த்து நிற்கும் பாவத்திற்குரிய லௌகிக இச்சைகள் யாவும், இதனுள் அடங்கும். முற்காலத்திலே நாம் எல்லாரும் நம்முடைய மாம்ச இச்சைகளின்படியே நடந்து, நமது மாம்சமும், மனதும் விரும்பினவைகளை செய்து, அக்கிரமங்களினாலும், பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்தோம். (எபே.2:1-1) ஆனால் இப்பொழுதோ தேவன் இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்பு கூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, கிருபையினாலே இரட்சிக்கப்பட்டோம். நாம் மாம்சத்தில் இருக்கும் காலம் வரைக்கும், மேற்கண்ட இச்சைகளின்படி பிழைக்காமல் (1பேது.4:2,3) அசுத்த இச்சையோடே மாம்சத்திற்கேற்றபடி நடவாமல் (2பேது2:10) சரீர இச்சையின்படியே பாவத்திற்கு கீழ்படியாமல் (ரோ.6:12) மாம்ச

இச்சை, காம விகாரங்களுக்கு தப்பி (2பேது.2:18) பாவத்துக்குரிய இச்சைகளுக்கு விலகி ஓடி (2தீமோ.2:22) ஆத்துமாவுக்கு விரோதமாக போர் செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகி (1பேது.2:11) இப்படிபட்டவைகளை செய்கிற யாவரும் மரணத்திற்கு பாத்திரவான்களாய் இருப்பதால் (ரோ2:32) அருவருப்பான நடத்தைகளினால் யாதொன்றையும் நீங்கள் செய்து அவைகளால் உங்களை தீட்டுப்படுத்தாது, உங்களை நீங்களே காத்துக்கொள்ளுங்கள். பிரியமானவர்களே நீங்களோ புத்தியில் அந்தகாரப்பட்டு, உங்கள் இருதய கடினத்தினால் உங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிராமல், உணர்வுள்ளவர்களாய் சகலவித அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பித்து உங்களை காமவிகாரத்திற்கு ஒப்புக்கொடாதிருங்கள். நீங்களோ இவ்விதமாய் கிறிஸ்துவை கற்றுக்கொள்ளவில்லை. (எபே.4:18-20) தேசம் முழுவதும் முறைகேடான பாவங்களால் நிறைந்திருக்கிறது. அதற்கு அரசு உடந்தை, அரசியல் தலைவர்கள் உடந்தை, நீதிமன்றங்கள் உடந்தை, எல்லாவற்றிற்கும் மேலாக நீங்கள் முழுநம்பிக்கை கொண்டிருக்கும் திரித்துவ ஸ்தாபன சபைகளும், அதன் தலைவர்களும் உடந்தை.

**11. ஒரினசேர்க்கை :** ஆண்கள் பெண்களை சுபாவத்தின்படி அனுபவியாமல் அதுபோன்று பெண்களும் ஆண்களை சுபாவத்தின்படி அனுபவியாமல் உணர்வில்லாத இவர்களுடைய இருதயம் இருளடைந்ததினால், ஒருவர் மேல் ஒருவர் விரகதாபத்தினாலே (Lust) பொங்கி ஆணோடு ஆண், பெண்ணோடு பெண், சுபாவ அனுபவத்தை, சுபாவத்திற்கு விரோதமான அணுபோகமாக மாற்றி, அவலட்சணமானதை நடப்பிப்பது, அவமானத்திற்குரிய ஒரினசேர்க்கையாகும். இது லௌகிக இச்சைகளில் ஒன்று.(தீத்.2:12) இது அசுத்த இச்சைகளோடே மாம்சத்திற்கேற்றபடி நடப்பிக்கும் ஒரு தாறுமாறான செயலாகும். சரீர இச்சைகளின்படி பாவத்திற்கு கீழ்படிதல் ஆகும். இது ஒருவன், ஒருத்தி தன் சுய சரீரத்திற்கு விரோதமாக செய்யும் பாவமாகும். தேவனை அறியும் அறிவை பற்றிக்கொண்டிருக்க இவர்களுக்கு மனத்தில்லாதிருந்தபடியினால் தகாததை செய்யும்படி தேவன் இவர்களை கேடான சிந்தனைக்கு ஒப்புக்கொடுத்தார். இப்படிபட்டவைகளை செய்கிறவர்கள் மரணத்திற்கு பாத்திரவான்களாய் இருக்கிறார்கள் என்று தேவன் தீர்மானித்த நீதியான தீர்ப்பை இவர்கள் அறிந்திருந்தும், அவைகளை தாங்களே செய்கிறதல்லாமல், அவைகளை செய்கிற மற்றவர்களிடத்தில் பிரியப்படுகிறவர்களுமாயிருக்கிறார்கள். தங்கள் தப்பிதத்திற்கு தகுதியான பலனை தங்களுக்குள்ளே அடைந்தார்கள். இதுகுறித்து ரோமர்1:21-32 வசனங்களை நீங்கள் தியானிக்கலாம். அது ஆணாகிலும் சரி, பெண்ணாகிலும் சரி நமக்கு இந்த வனாந்திர வாழ்க்கையில் எல்லாவற்றிலேயும் இச்சை அடக்கம் தேவை. யோசேப்பு எகிப்துக்கு கொண்டுபோகபட்டான். கர்த்தர் அவனோடே இருந்ததால் போத்திபார் இதைக்கண்டு யோசேப்பை தனக்கு ஊழியக்காரனும், தன் வீட்டுக்கு விசாரணைக்காரனுமாக்கி தனக்கு உண்டான எல்லாவற்றையும் அவன் கையில் ஒப்புவித்தான். சிலகாலம் சென்ற பின்பு, போத்திபாரின் மனைவி யோசேப்பின் மேல் கண் போட்டு அவனை தன்னோடே சயனிக்க கேட்டுக்கொண்டாள். அதற்கு யோசேப்பு இந்த வீட்டிலே என்னிலும் பெரியவன் இல்லை. நீ என் எஜமானுடைய மனைவியாய் இருக்கிறபடியால் அவர் உன்னை தவிர வேறொன்றையும் எனக்கு விலக்கிவைக்கவில்லை. இப்படியிருக்க நான் இத்தனை பெரிய பொல்லாப்புக்கு உடன்பட்டு தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்வது எப்படி என்றான். இப்படி இருக்கும்போது ஒரு நாள் யோசேப்பு தன் வேலையை செய்வதற்கு வீட்டிற்குள் போனான். போத்திபாரின் மனைவி யோசேப்பின் வஸ்திரத்தை பற்றிப்படித்து என்னோடே சயனி என்றாள். யோசேப்பு தன் வஸ்திரத்தை அவள் கையிலே விட்டு வெளியே ஓடி போனான்.(ஆதி.39அதி) இதுதான் இச்சை அடக்கம். இந்த இச்சை அடக்கம் நமக்கு தேவை. ஆனால் கடைசி நாட்களில் வரும் கொடிய காலங்களில், நாம் வாழ்ந்துக்கொண்டிருக்கும் இக்காலத்தில் இச்சை அடக்கம் இல்லாதவர்களாய் காணப்படுவார்கள் என்று 2தீமோ.3:3 ல் வாசிக்கிறோம். அப்படியானால் இன்று அது அப்படிதான் நடக்கும். இதை யாரும் தடுக்க முடியாது. ஆதலால் தான் இந்த ஓரினசேர்க்கை மோகம் ஜனங்கள் மத்தியில் காணப்படுகிறது. அதற்கும் ஆதரவுகள். இவர்கள் மரணத்திற்கு பாத்திரவான்கள் என்பதோடு மாத்திரம் அல்ல, ஆண்புணர்ச்சிகாரர்களாகிய (Abusers of themselves with Man kind) இவர்கள் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதுமில்லை என 1கொரி.6:7 ல் வாசிக்கிறோம்.

12. தேவனுடைய சாயலாகவும், ரூபத்தின்படியேயும் உண்டாக்கப்பட்ட மனுஷன், அவ்வாறாகவே உண்டாக்கப்பட்ட மற்றொரு மனிதனோடு ஓரினசேர்க்கையில் ஈடுபடுவானாயில் அவன் தன்னை உண்டாக்கின தேவனை நிந்திக்கிறான், அவரை தூஷிக்கிறான். தன் சிருஷ்டிகரை அவமதிக்கிறான். அதோடு மாத்திரமல்ல, தேவனை எதிர்த்து நிற்கிறான். ஓரினசேர்க்கை மாம்ச இச்சையின் ஒரு கொடூரமாகும். இச்செயல் பிதாவினால் உண்டானது அல்ல, மாறாக இது பிசாசினால் உண்டானது. இது உலகத்தினால் உண்டானது. சாத்தான் யார்? தேவனுக்கடுத்த விதிமுறைகளை, நெறிமுறைகளை சீர்குலைக்கிறவன். தேவனுடைய வார்த்தை ஒன்றைக்குறித்து : நீ இதை செய்யாதே என்று கூறும்போது, சாத்தான் நீ அதை செய் என்று கூறுபவனே. அவனுடைய முயற்சிகள் எல்லாம் தேவனுடைய பிள்ளைகளை பாவத்தில் விழத்தள்ளுவதே. தேவன் ஆதாமின் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, மனுஷனிடத்தில் அவனுக்கு ஏற்ற துணையாக கொண்டுவந்தார். அவள் ஒரு பெண். அவளைத்தான் அவன் சுபாவப்படி அனுபவிக்கவேண்டும். ஒரு ஆணுக்கு, அவன் சுபபோகத்தை அனுபவிக்க ஒரு பெண். அந்த சுபபோகம் எதற்கு? தன் சந்ததியை பலுகி பெருக்க. இதுதான் தேவனுடைய ஆதி தீர்மானம். ஓரினசேர்க்கையினால் மக்கள் சந்ததி பலுகி பெருக முடியாது. அது அவலட்சணமானதை பிறப்பிக்கும் ஒர் சீர்கேடு. இன்று ஆண்கள் ஆண்களோடு, பெண்கள் பெண்களோடு சம்போகமாக இருக்கலாம் என்பது தேவனுடைய திட்டங்களை சீர்குலைப்பதாகும், சின்னாபின்னமாக்குவதாகும். மாறுபாடுள்ளவன் கர்த்தருக்கு அருவருப்பானவன். (நீதி.3:32) உன் இளவயதின் மனைவியோடு மகிழ்ந்திரு. அவளே நேசிக்கப்படத்தக்க பெண்மான். அவளுடைய

ஸ்தனங்களாலே (Breast) எப்பொழுதம் உன்னை திருப்தி செய்வதாக. அவளுடைய நேசத்தில் நீ எப்பொழுதும் மயங்கி இருப்பாயாக என்பது தாவீதின் குமாரனும், இஸ்ரவேலின் ராஜாவாகிய சாலொமோனின் நீதிமொழிகளில் ஒன்றாகும்.(நீதி.5:18,19) பாருங்கள். ஒரு ஆணும் மற்றொரு ஆணும் தன் அறையில் உல்லாசமாயிருப்பது, பிற பெண்களுக்கோ, குழந்தைகளுக்கோ எந்த தீங்கையும் இழைக்காது. இது ஆண்களின் தனிப்பட்ட விருப்புரிமை மதிக்கப்பட வேண்டும் என்பது நீதிமன்றத்தின் தீர்ப்பு. அப்படியானால் இந்த விருப்புரிமை அனைத்து காரியங்களுக்கும் பொருந்த வேண்டும் அல்லவா. அப்படியானால் நாட்டில் இதை செய், இதை செய்யாதே என்ற சட்டத்திற்கு இடமில்லாமல் போய்விடும் அல்லவா. எல்லாரும் அவரவர் தன்தன் விருப்பப்படி செய்ய நினைத்தால், தாங்கள் செய்ய நினைத்த ஒன்றும் தடைப்பட மாட்டாது என்று நினைத்தால், இப்பொழுது இருக்கிற வானங்களும், பூமியும் தேவனுடைய வார்த்தையினால் அக்கினிக்கு இறையாக்கப்படும் நாள் சமிபித்திருக்கிறது என்பது தான் உண்மை. தேவன் ஒரு ஆணையும், ஒரு பெண்ணையும் சிருஷ்டித்ததின் நோக்கத்தை சீர்குலைக்கும், சின்னாபிண்ணமாக்கும் சாத்தானின் செயல் தான் ஓரினசேர்க்கை. மனுஷன் மிருகத்தைவிட தாழ்ந்த நிலைக்கு ஓரினசேர்க்கையின் மூலமாக சாத்தானால் தள்ளப்பட்டுள்ளான்.

13. ஆக ஓரினசேர்க்கை என்பது தேவனுடைய பார்வையில் ஒரு அவலட்சணமான ஆண் மற்றும் ஆண், பெண் மற்றும் பெண் புணர்ச்சி பாலியல். ஆண், பெண் தனித்தனியே தங்களது சுயசரீரத்தை அவமானப்படுத்தும் செயல், இது ஒரு அக்கிரமச்செயல், ஒரு மதிகேடான செயல். நிச்சயமாக இதற்கு தண்டனை உண்டு. இவர்கள் மரணத்திற்கு பாத்திரவான்கள். (ரோ.1:32) இவர்கள் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை. (1கொரி.6:91,0) இந்த அக்கிரம செயலில் ஈடுபட்ட இருவரும் (ஆண் மற்றும் ஆண், பெண் மற்றும் பெண்) கொலை செய்யப்பட வேண்டும். (லேவி.20:13) ஆதலால் இப்பாவத்திற்குரிய இச்சைகளுக்கு நாம் விலகி ஓட வேண்டும். (2தீமோ.2:22) நமது ஆத்துமாவிற்கு விரோதமாக போர்செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலக வேண்டும். (1பேது.2:11) கிறிஸ்துவை ஒருவன் தன் இரட்சகராக, மீட்பராக ஏற்றுக்கொள்ளும் வரை அவன் மாம்சம் / பழைய மனுஷனால் ஆட்கொள்ளப்பட்டு பாவத்தை தவிர்க்க பலமற்றவனாயிருக்கிறான்.

14. ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார். தமது சாயலாகவும் தமது ரூபத்தின்படியும் மனுஷனை உண்டாக்கினார். ஒரே சரீரத்தில் ஆண் பெண் இரு பாலினங்கள். இவர்கள் பூமியில் பலுகி பெருக பூமியை நிரப்ப ஆசீர்வதிக்கப்பட்டார்கள். ஏற்றகாலத்தில் ஒரே சரீரத்தில் இருந்த இருவரும் வேறுபிரிக்கப்பட்டார்கள். ஆதாமாக இருபாலினத்தில் இருந்தவன் இப்பொழுது தன் மனைவியாகிய ஏவாளை தன் சரீரத்திலிருந்து பெற்றுக்கொண்டான். இவர்கள் பூமியில் பலுகி பெருகத்தொடங்கினார்கள். அவர்கள் பலுகி பெருகப்பெருக அக்கிரமங்களும் பூமியில் பெருகிற்று. ஏனென்றால் அவர்கள் இருதயத்து நினைவுகளின் தோற்றம் எல்லாம் நித்தமும் பொல்லாததாகவே இருந்தது. பூமியானது தேவனுக்கு முன்பாக சீர்கெட்டதாயிற்று. பூமி கொடுமையினால் நிறைந்திருந்தது. தேவன் பூமியை பார்த்தார். இதோ அது சீர்கெட்டதாயிருந்தது. மாம்சமான யாவும் பூமியின்மேல் தங்கள் வழிகளை கெடுத்துக்கொண்டிருந்தார்கள். (ஆதி.6:1-12) ஆதலால் கர்த்தர் பூமியை உண்டாக்கினதற்காக வருத்தப்பட்டார். அது அவரது இருதயத்திற்கு விசனமாயிருந்தது. இன்றும் விசனமாயிருக்கிறது. முடிவில் தேவன் நோவாவின் குடும்பத்தினர் எட்டு பேரைத்தவிர மற்றவர்களை ஜலத்தினால் அழித்தார். நோவாவின் குமாரர்களாகிய சேம், காம், யாப்பேத் என்பவர்களால் பூமி எங்கும் ஜனங்கள் பலுகி பெருகினார்கள். இந்நிலையில் சோதோம் கொமோராவின் கூக்குரல் பெரியதாயிருந்தது. அவைகளின் பாவம் மிகவும் கொடிதாயிருந்தது. பத்து நீதிமான்கள் கூட அந்த பட்டணத்தில் காணப்படவில்லை. பூமியில் முதன்முதலாக ஓரிணச்சேர்கை உடைய மக்கள் இந்த பட்டணத்தில்தான் காணப்பட்டதாக நாம் காண்கிறோம். ஆதலால் இந்த பட்டணத்தை அழிக்கவந்த தூதர்கள் சாயங்கால நேரத்திலே ஒரு நாள் அங்கு வந்த நிலையில் அவர்கள் லோத்தின் வீட்டில் படுக்கும் முன்பே பட்டணத்து மனிதர்களாகிய வாலிபர் முதல் கிழவர் மற்றுமுள்ள ஜனங்கள் அனைவரும் நாலா திசைகளிலிருந்து வந்து லோத்தின் வீட்டை சூழ்ந்துக் கொண்டு லோத்தை நோக்கி : உன்னிடதிற்கு வந்த மனுஷரை நாங்கள் அறியும் படிக்கு (ஓரினசேர்க்கைக்கு) அவர்களை எங்களிடத்திற்கு கொண்டு வா என்று கூறினார்கள். முடிவு என்ன? அந்த தூதர்கள், மனுஷருக்குள் அனைவரும் குருட்டாட்டம் பிடிக்கப்பண்ணினார்கள். கர்த்தர் வானத்திலிருந்து கந்தகத்தையும் அக்கினியையும் வருஷிக்கப்பண்ணி அந்த பட்டணத்தின் எல்லா குடிகளையும் அழித்துப்போட்டார். (ஆதி.19அதி) அடுத்து இஸ்ரவேலில் ராஜா இல்லாத அந்நாட்களில் எப்பிராயீம் மலைகள் அருகே பரசேதியாய் தங்கின ஒரு லேவி இருந்தான். அவன் யூதாவில் உள்ள பெத்லெகேம் ஊராளாகிய ஒரு ஸ்திரீயை தனக்கு மறுமணையாட்டியாக (Concubine) கொண்டிருந்தான். அவன் தன் மறுமணையாட்டியாகிய அந்த ஸ்திரீயை அழைத்து வர பெத்லெகேம் சென்றான். சில நாட்கள் அங்கு தங்கி தன் மறுமணையாட்டியை கூட்டிக்கொண்டு எழுந்து புறப்பட்டு எருசலேமாகிய எபூசுக்கு நேராக வந்தான். அவர்கள் பென்யமீன் நாட்டை சேர்ந்த கிபியாவின் கிட்ட வருகையில் சூரியன் அஸ்தமனமானது. அங்கு ஒரு கிழவன் அவர்களுக்கு இராத்தங்க இடம் கொடுத்தான். அவர்கள் புசித்து குடித்தார்கள். அப்பொழுது பேலியாளின் மக்களாகிய அந்த ஊர் மனுஷரில் சிலர் அந்த வீட்டை சூழ்ந்துக்கொண்டு, கதவை தட்டி, அந்த கிழவனை நோக்கி : உன் வீட்டிலே வந்த மனுஷனை நாங்கள் அறியும் படிக்கு (ஓரினசேர்க்கைக்கு) வெளியே கொண்டு வா என்றார்கள். அந்த வீட்டுக்காரனோ தன் ஜனங்களை நோக்கி : சகோதரரே இப்படிப்பட்ட பொல்லாப்பை செய்ய வேண்டாம் : இப்படிப்பட்ட மதிகேட்டை செய்யீர்களாக, இந்த மனுஷனுக்கு அப்படிப்பட்ட மதிகேடான காரியத்தை செய்யவேண்டாம் என்றாள். முடிவில் அந்த பேலியாளின் மக்கள் அந்த வழிபோக்கனுடைய மறுமணையாட்டியை அறிந்துகொண்டு, இராமுழுவதும், விடியற்காலை மட்டும் அவளை இலச்சையாய் நடத்தி அவமானப்படுத்தினார்கள் என நியாயாதிபதிகள் 19 ஆம் அதியில் காண்கிறோம்.

15. ஆக ஆணோடு ஆண் ஓரிணச்சேர்கை நூதனமாக ஒன்றாகயில்லை. இது நமக்கு முன்னே பூர்வகாலத்தில் நடந்த சம்பவங்ளாயிருக்கிறது. இந்த கேடான பொல்லாப்பான செயல் வேதவாக்கியங்களில் தடைசெய்யப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலின் குமாரர்களில் ஒருவனும் ஆண்புணர்ச்சிகாரர்களாக இருக்க கூடாது. (உபா.23:17) There shall be no sodomite of the sons of Israel இங்கு ஆண்புணர்ச்சிக்காரர்கள் Sodomite என (இங்கு முதன்முறையாக இந்த சம்பவம் நடந்ததால்) அழைக்கப்படுகிறார்கள். நீ பெண்னோடு சம்யோகம் பண்ணுகிறது போல ஆணோடே சம்யோகம் பண்ண வேண்டாம். அது அருவருப்பானது. (லேவி.18:22) ஒருவன் பெண்ணோட சம்யோகம் பண்ணுவது போல, ஆணோடு சம்யோகம் பண்ணி, அருவருப்பான காரியம் செய்ய அவ்விருவரும் (ஓரினசேர்க்கையில்) ஈடுப்பட்ட இருவரும் கொலை செய்யப்படக்கடவர்கள். அவர்கள் இரத்தபழி அவர்கள் மேல் இருப்பதாக. (லேவி.20:13) கவனியுங்கள். அந்நாட்களில் தேசத்தில் இலச்சையான புணர்ச்சிக்கார்கள் இருந்தார்கள். (1ராஜா.14:24) ஆசா யூதாவின் மேல் ராஜாவானபோது தேசத்தில் இருந்த இலச்சையான புணர்ச்சிக்காரர்களை அகற்றினான். (1ராஜா.15:12) யோசாபாத் கூட தன் தகப்பனாகிய ஆசாவின் நாட்களில் மீதியாய் விட்டிருந்த இலச்சையான புணர்ச்சிக்காரர்களை தேசத்திலிருந்து அற்றுப்போகப்பண்ணினான். (1ராஜா. 22:46) யோசியா ராஜா கூட இலச்சையான புணர்ச்சிக்காரர்களின் வீடுகளை எல்லாம் இடித்து போட்டான் (2ராஜா.23:7)

16. இப்பொழுது ஓரினசேர்க்கை குறித்து இந்தியாவின் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை காண்போம். வயதிற்கு வந்த இரண்டு பேர், அது ஆணாகிலும் சரி, பெண்ணாகிலும் சரி இருவரும் ஓரினசேர்க்கையில் ஈடுபட்டால் அது தண்டனைக்கு உரிய குற்றம் ஆகாது என்று டெல்லி ஐகோர்ட் 2001 ஆம் ஆண்டு தீர்ப்பு அளித்தது. இந்த தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்பட்டபோது, அதை சுப்ரீம்கோர்ட் விசாரித்து டெல்லி ஐகோர்ட் தீர்ப்பை ரத்து செய்தது. இது தொடர்பான மறு ஆய்வு மனுவும், சுப்ரீம்கோர்ட்டில் தள்ளுபடி செய்யப்பட்டது. நிவாரண மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்தது. இருப்பினும் பலர் சுப்ரீம்கோர்ட்டில் ரீட் மனு மூலம் வழக்கு தொடர்ந்தனர். இந்த ரீட் வழக்குகளை தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா தலைமையில், நீதிபதிகள் R.F. நாரிமன், A.M.



பெண்ணோடு பெண் ஓரினசேர்க்கை திருமணம் – தீது, இது தீது.



ஆணோடு ஆண் ஓரினசேர்க்கை திருமணம் – தீது, இது தீது.

கன்வில்கர், T.Y.சந்திரசூட், பெண் நீதிபதி இந்து மல்கோத்ரா ஆகியோர் கொண்ட அரசியல் சாசன அமர்வு விசாரித்தது. விசாரணை முடிந்த நிலையில் வயதிற்கு வந்த இரண்டு பேர் சம்மதித்து ஓரினசேர்கை கொண்டால், அது குற்றம் அல்ல என்று 06.09.2018ல் கூறப்பட்ட தீர்ப்பில் ஐந்து நீதிபதிகளின் கருத்தில் ஒற்றுமைக் காணப்பட்டது. ஆக இனி நமது நாட்டில் ஓரினசேர்க்கை, ஒத்த பாலியல் திருமணம் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகிவிட்டது. இயற்கைக்கு முரணான குற்றங்கள் யாராவது ஒருவர் பாலியல் இன்பத்திற்காக தானாக முன்வந்து இயற்கை நெறிக்கு மாறாக ஆணையோ, பெண்ணையோ அல்லது விலங்கையோ புணர்ந்தால் அது தண்டனைக்குரியது என்ற காலம் கடந்துவிட்டது. சட்டம் காலத்திற்கேற்ப தன்னை மாற்றிக்கொண்டது. ஆண்கள் ஆண்களோடும், பெண்கள் பெண்களோடும் வாழலாம் என்பது தனி மனித சுதந்திரம், இது குறித்து சமூகம் என்ன நினைக்கிறது என்றெல்லாம் கவலைப்பட தேவையில்லை. ஒற்றை மனிதனின் உரிமையில் நீதிமன்றம் தலையிட முடியாது என்கிறார்கள் கனம் பொருந்திய நீதிபதிகள். ஓரிணச்சேர்கை பாவமோ குற்றமோ இல்லை. பாலுறவு என்பது உயிரியல் நிகழ்வு. அதாவது இயல்பாக ஏற்படுகிற உடல் பசியின் தீர்வாக பாலுணர்வு அமைகிறது. இதில் பாகுபாடு பார்ப்பது என்பது அடிப்படை உரிமைகளை மீறிய செயலாகும். இரண்டு பேர் சம்மதித்து அந்தரங்கமாக மேற்கொள்கிற இயற்கைக்கு மாறான பாலுறவு சமூகத்திற்கு தீங்கானது அல்ல. பரவக்கூடியதும் அல்ல. ஓரினசேர்க்கையில் ஈடுபடும் பெண்கள் ஆண்கள் இருபால் உறவினர், திருநங்கைகள் ஆகியோர் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையில் இந்தியா கையெழுத்து போட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. எனவே ஒரே பாலின இரண்டுபேர் சம்மதித்து பாலுறவு கொள்வது அந்தரங்க செயல். அது தொடர்பாக சமூகம் கட்டளையிட முடியாது. ஓரினசேர்க்கை என்பது மனநிலை பாதிப்பு அல்ல. இது முற்றிலும் இயற்கையோடு ஒத்திசைவான ஒரு நிலைதான். இவ்வாறு தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. இதுகுறித்து அப்.பவுல் கலாத்தியருக்கு எழுதும் போது சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். இந்த சுயாதீனத்தை மாம்சத்திற்கேதுவாக அனுசரியாதீர்கள் என்கிறான். (கலா.5:13)

17. துர்இச்சைக்கு இடமாக உடலை பேணாதிருங்கள்.(ரோ.13:14) இது ஒருவனுடைய சுயசரீரத்திற்கு விரோதமான பாவம். (1கொரி.1:18) நம்முடைய சரீரமானது பரிசுத்த ஆவியின் ஆலயமாகயிருக்கிறது. (1கொரி.6:19) மாம்சத்தினால் உண்டாகும் எல்லா அசூசிகளும் நீங்க உங்களை சுத்திகரித்துக்கொள்ளுங்கள். (2கொரி.7:1) மீண்டும் கவனியுங்கள் மனிதன் படைக்கப்பட்டவன். அவன் எதற்கும் தேவனையே சார்ந்து வாழ வேண்டியவனாயிருக்கிறான். அவனால் ஒன்றும் செய்ய முடியாது. ஆனாலும் அவனுக்கு தனித்தன்மை, சுயாதீனம், உணர்வு உண்டு. இவை அனைத்திற்கும் ஒரு நாள் அவன் கணக்கு ஒப்புவிக்கவேண்டும். ஆதலால் தன் மனம்போல் வாழ முடியாது. ஆனால் மனிதனோ தேவனுடைய கட்டளைகளுக்கும் கற்பனைகளுக்கும் அடங்கி வாழும் ஒரு வாழ்க்கையை விரும்பவில்லை.

தனக்குள் உள்ள சுயாதீனத்தை தவறாக பயன்படுத்தி தன்னை தேவனிடமிருந்து பிரித்துக்கொண்டான். தன்னையே கெடுத்துக்கொண்டான். இதனால் மனுகுலம் பாவக்கறைபட்டதாயிற்று. அவன் மாம்சத்திற்கும், பாவத்திற்கும் அடிமையாகிவிட்டான். அவனிடமிருந்து தேவசாயல், ரூபம் சீர்குலைந்துவிட்டது. அதன் விளைவுதான் இந்த ஓரினசேர்க்கை. இந்த ஓரினசேர்கை வழக்கு நீதிமன்றங்களில் கடந்து வந்த பாதை:

(அ) 2001ல் இருவரின் சம்மதத்துடன் நடைப்பெறும் ஆண், ஆண் : பெண், பெண் ஓரினசேர்க்கை குற்றமாகாது என அறிவிக்க கோரி டெல்லி ஐகோர்ட்டில் பொதுநல வழக்கு.

(ஆ)ஏப்ரல் 3, 2006 இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனாலும் இந்த விவகாரத்தை தகுதி அடிப்படையில் மீண்டும் விசாரிக்குமாறு டெல்லி ஐகோர்ட்டிற்கு சுப்ரீம்கோர்ட் உத்தரவிட்டது.

(இ)செம்டம்பர் 26, 2008 ஓரினசேர்க்கை ஒழுக்ககேடு எனவும், விபரீதமான மனதின் வெளிப்பாடு எனவும் ஐகோர்ட்டில் தெரிவித்த மத்திய அரசு, ஓரினசேர்க்கை குற்றமாகாது என்று அறிவித்தால் அது சமூகத்தில் ஒழுக்க சீர்கேட்டை ஏற்படுத்திவிடும் என்று கூறியது.

(ஈ) ஜீலை 2, 2009 ஓரினசேர்க்கை மனுக்களை ஏற்றுக்கொண்ட ஐகோர்ட் இரு தரப்பின் ஆண் மற்றும் ஆண் : பெண் மற்றும் பெண் ஒப்புதலுடன் மேற்கொள்ளப்படும் ஓரினசேர்க்கை குற்றமல்ல என தீர்ப்பு கூறியது.



ஓரினசேர்க்கை அங்கீகரிக்கப்பட்டதால், அதன் ஆர்வளர்களின் மட்டற்ற மகிழ்ச்சி.

(உ)டிசம்பர் 11, 2013 டெல்லி ஐகோர்ட்டின் இந்த உத்தரவை சுப்ரீம் கோர்ட் ரத்து செய்து, ஓரினசேர்க்கை குற்றம் என அறிவித்தது.

(ஊ)பிப்ரவரி 2, 2016 சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பு ஓரினசேர்க்கையின் ஆர்வளர்களின் நிவாரண மனுக்கள் ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வுக்கு அனுப்பப்பட்டது.

(எ)செப்டம்பர் 6, 2018 இருதரப்பு சம்மதத்துடன் நடைபெறும் ஓரினசேர்க்கை குற்றமாகாது என அரசியல் சாசன அமர்வு தீர்ப்பளித்தது. நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் குறிப்பிட்ட ஜெர்மனிய பழமொழி போல "நான் என்னவாக இருக்கிறேனோ, அதுவே நான். என்னை இப்படியே ஏற்றுக்கொள்" என்பதற்கு ஏற்ப நாமும் இச்சமூகமும் அவர்களை கேலிப்பொருளாக பார்க்க கூடாது. அவர்களும் நம்மை போன்ற மனிதர்கள்தான். அனைவருக்கும் வாழ்வதற்கு இச்சரீரத்தில் உரிமை உள்ளது என்று செயல்பட்டால் அது உள்ளபடியே சரியான சமூக நீதியாயிருக்கும் என்பதே. ஆனால் **பரிசுத்த வேதாகமத்தின்படி இந்த தீர்ப்பினால் இந்திய நாடு தீட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது**. (லேவி.18:22-24)

18. ஓரினசேர்க்கைக்கு அடிப்படை, ஒத்த பாலினத்தாரிடம் ஏற்படும் ஈர்ப்பு ஆகும். மனிதர்களில் 2ல் இருந்து 11% வரை இத்தகையவர்கள் இருக்கலாம் என்று உறுதி செய்யப்படாத ஆய்வு ஒன்று கூறுகிறதாம். இதுவரை கண்ட முடிவுகளில் இன்றியமையாதது, அத்தகையவர்களின் உடல் அமைப்பில், குறிப்பாக மரபணுக்களில் உள்ள மாறுதல்களாகும். இதற்கு ஒரு காரணம், அதிக அளவில் சகோதரர்களுடன் பிறப்பவர்களுக்கு ஏற்படும் விளைவு என்று கூறப்பட்டுள்ளதாம். இன்னொரு முக்கிய காரணம் தாயின் கருவில் உருவாகும் ஆண் குழந்தை பிற பாலினத்தினரை ஈர்க்கும் தன்மைகொண்ட வேதிபொருட்களை சுரக்கும் போது, சில வேளைகளில் தாயின் உடலில் உள்ள தடுப்பு சக்தி அதை அழித்து விடுகிறது. குழந்தை வெளிவந்து இவ்வுலகில் மனிதனாக வளரும் போது கருவில் உண்டான அச்சிதைவு பிற பாலினத்தினரிடம் ஏற்படும் ஈர்ப்பினை தடுத்து ஒத்த பாலினத்தவரோடு கூடுவதற்கு வழிவகுக்கின்றது. அது அவனாக விரும்பி, ஏற்படுத்திக்கொண்ட முடிவு அல்ல. அவன் கருவில் இருக்கும் போதே அவன் விரும்பாமையே அவன் மீது திணிக்கப்பட்ட ஒன்றாகும்.

19. சென்னை, தென்னிந்திய திருச்சபை பிரதான பேராயர் டாக்டர்.வி.தேவசகாயம் அவர்கள், நீதிமன்றத்தின் தீர்ப்பை வரவேற்றுள்ளார்கள். இது இவருடைய ஆவிக்குரிய பரிதாபமான நிலையை காட்டுகிறது. இவர் தனது கருத்தில் கூறுவதாவது : மனிதன் (Man) மனுஷி (Women) , ஆண்ஓரினசேர்க்கையாளர் (Gay) ஒருபால்புணர்ச்சியில் ஈடுபடும் பெண்(Lessbian) இருபால்புணர்ச்சி உடையவர்கள் ( bisexual) திருநங்கை (Transgenders) அனைவரும் தேவனுடைய சாயல் ஆவார்கள் (Image of God) ஆதலால் அவர்களுக்கு விளையக்கூடிய அனைத்து பெருந்துயர சம்பவங்கள் யாவும் சிருஷ்டிகரை தூஷிப்பதாகும் என்கிறார். ஆதலால் மானிடர்களுக்குரிய அனைத்து உரிமைகளும், அந்தஸ்துகளும் அவர்களுக்கும் உரியதாகும் என்று ஐகோர்ட் தீர்ப்புக்குறித்து ஜீலை 2, 2009 ல் பேட்டி கொடுத்துள்ளார். இங்கு நாம் கவனிக்க வேண்டிய ஒன்று, மேற்கூறிய அனைவரும் தேவனுடைய சாயலானவர்கள் என்று கூறுகிறார். அப்படியானால் தேவன் மேற்கூறிய அனைவருடைய சாயலுக்கும் ஒப்பானவரா? இந்த மனிதன் என்ன மதிமயங்கி உள்ளாரா? யாருடைய சாயலுக்கு தேவனை இவர் ஒப்பிடுகிறார். இவர் தேவனுடைய சாயலை ஒரு ஓரினசேர்க்கைக்காரனுக்கு, ஒரு ஆண்புணர்ச்சிக்காரனுக்கு, ஒரு திருநங்கைக்கு ஒப்பிடுகிறாரா? இவர்களை



# Church forum hails verdict on LGBT

DC CORRESPONDENT

CHENNAI

July 28: The National Council for Churches in India (NCCI), a forum of protestant and orthodox churches in the country, has welcomed the recent Delhi high court's ruling to decriminalise homosexual acts between consenting adults.

"Man, woman, gay, lesbian, transgender and bisexual are all images of God. Oppression of any kind is to insult the Maker. Protecting the rights and dignity of all human beings is the true spirit of Christianity," said Rt. Reverend Dr V. Devasahayam, CSI Bishop, Chennai and chairperson, Tamil Nadu Christian Council.

போன்றவர்களால் தானே கிறிஸ்தவம் தூஷிக்கப்பட்டுவருகிறது. நான் கடந்த நிருபத்தில் எழுதியவாறு இவர்களைப் போன்றவர்கள் ஜலத்தினாலும் ஆவியினாலும் மறுபிறப்பு அடையாதவர்கள். ஆதலால் அவர்கள் தங்கள் சொந்தத்திலிருந்து எடுத்து அவர்கள் லௌகிக கருத்தை கூறுகிறார்கள். வேதவாக்கியங்ளுக்கடுத்த போதனைகளை பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனமில்லை. குருடர்களுக்கு வழிகாட்டும் குருடர்களாக இருக்கிறார்கள். சென்னை சி எஸ் ஐ பிஷப் தேவசகாயம் குறித்து நான் ஏப்ரல் 2012 ல் ஜாமக்காரனில் வாசித்ததாவது : பள்ளி ஆசிரியைகள், குருமார்களின் மனைவி மார்கள், பெண் ஆயர் ஆகியோர்கள் சிலவருடங்களாக பிஷப் தங்களை செக்ஸ் டார்ச்சர்கள் செய்வதாக புகார் கொடுத்துள்ளார்கள். ஆனால் சி.எஸ்.ஐ. சினாடு இந்த புகார்களை கண்டுக்கொள்ளவே இல்லையாம். இந்த பிஷப் மீது பண ஊழல், கிரிமினல் வழக்குகள் ஏராளமாம். ஆனால் இவர் மேல் கூறப்பட்டுள்ள பல குற்றச்சாட்டுகளை பற்றி வாராந்திர பத்திரிக்கை, தினசரி பத்திரிக்கை மேலும் பல இனைய தளங்களிலும் வெளிவந்ததாம். நிச்சயமாக இவர்களை இயேசு கிறிஸ்து பொருத்துக்கொள்ள மாட்டார். இவர்களெல்லாம் தேவசித்தத்திற்கு புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்து கொண்டு கிறிஸ்துவின் நாமத்தை தூஷிக்கும் ஓளியின் தூதனுடைய வேஷத்தை தரித்துக்கொண்ட சாத்தானின் தூதர்களாகும்.

20. இந்நிலையில் ஒரு வெட்கக்கேடான சம்பவத்தை பாருங்கள். பத்திரிக்கையில் கீழ்கண்டவாறு செய்தி "சென்னையில் அதிர்ச்சி சம்பவம். மகளை தகாத உறவுக்கு அழைத்த தாய் கைது. தந்தை புகாரின் பேரில் போலீஸ் நடவடிக்கை. சென்னை அக்டோபர் 11. தகாத உறவுக்கு அழைத்து மகளுக்கு தொல்லை கொடுத்ததுடன் அவளை கொலை செய்ய முயற்சித்தாக தாய் கைது செய்யப்பட்டாள், தனது 9வது வகுப்பு படிக்கும் 14வயது மகளிடம் தாயே தகாத உறவுக்கு அழைத்து தொல்லை கொடுத்து வந்தாள். உறவுக்கு மறுத்த மகளை கொன்று விடுவேன் என்று மிரட்டினாள்". இது என்ன? நீதிதுறையின் ஆசீர்வாதத்தினால் வந்த முறைகேடா அல்லது அக்கிரமம் பெருகி போகிறதிற்கு ஒரு எடுத்துக்காட்டா? உலகம் சோதோமுக்கு ஏற்பட்ட அழிவிற்கு நெருங்கி கொண்டிருக்கிறது என்பதிற்கு இது ஒரு முன் உதாரணமா? முடிவாக காரியத்தின் கடைத்தொகையானது : இந்த உலகமானது தேவனுக்கு முன்பாக குற்றமுள்ளதாக இருக்கிறது. அவர்களது கண்களுக்கு முன்பாக தெய்வபயம் இல்லை.

**21. வேசித்தனம் (Fornication) :** திருமணம் ஆகாத ஆண் பெண் இடையே உள்ள கூடாத, தகாத சிற்றின்ப சரீர உறவு வேசித்தனம் ஆகும்.(எசே.16:15-29) இதன் எபிரேயச் சொல் ஸானா (Zanah) ஆகும். இதன் கிரேக்கச்சொல் பார்னையா (Porneia)ஆகும். இதன் ஆங்கிலேயச்சொல் பார்னிக்கேஷன் (Fornication) ஆகும். (மத்.5:32) திருமணம் ஆகாத ஒரு ஆண் பெண் விபசாரம் செய்ய முடியாது. ஏனென்றால் விபசாரம் செய்வதற்கு அங்கு அவர்களுக்கு விரோதமாக யாருடைய மனைவியோ, கணவனோ கிடையாது. யாருக்கு விரோதமாக அவன், அவள் விபசாரம் செய்தனர்? அங்கு இருவருக்கும் திருமணம் ஆகாததால் யாருக்கும் விரோதமாக அவர்கள் விபசாரம் செய்யவில்லை. ஆக திருமணம் ஆகாத ஆண், பெண் தகாத, கூடாத சிற்றின்ப சரீர உறவு வேசித்தனம் ஆகும். Voluntary Sexual Intercource between unmarried persons. இது மாம்சத்தின் கிரியை(கலா.5:19). வேசித்தனம் ஒரு மனிதனுடைய இருதயத்திலிருந்து புறப்பட்டு வந்து அவனை தீட்டுப்படுத்துகிறது. (மத்.15:19,20, மாற்.7:21) வேசித்தனம் இல்லாதபடிக்கு அவனவன் தன்தன் சொந்த மனைவியையும், அவளவள் தன்தன் சொந்த புருஷனையும் உடையவர்களாக இருக்கவேண்டும். (1கொரி.7:2) தேவனை அறியாத அஞ்ஞானிகள் போல மோக இச்சைகளுக்குட்படாமல் வேசிமார்க்கத்திற்கு (Fornication) விலகி இருக்கவேண்டும்.(1தெச.4:3,4) இதிலிருந்து வேசித்தனம் செய்கிறவர்கள் தேவனை அறியாத அஞ்ஞானிகள் என காண்கிறோம். பாருங்கள் நம்முடைய சரீரம் வேசித்தனத்திற்கல்ல. மாறாக நம்முடைய சரீரம் கர்த்தருக்குரியது. கர்த்தரே நம்முடைய சரீரத்திற்குரியவர். (1கொரி.6:13) ஆதலால் வேசித்தனத்திற்கு விலகி ஓடுங்கள். மனுஷன் எந்த பாவமும் சரீரத்திற்கு புறம்பாயிருக்கும். வேசித்தனம் செய்கிறவனோ தன் சுய சரீரத்திற்கு விரோதமாய் பாவம் செய்கிறான். (1கொரி.6:18) ஆதலால் விபசாரம் (Fornication) இந்த பூமியில் உண்டு பண்ணுகின்ற உங்கள் அவயவத்தை அழித்துப்போடுங்கள். அவைகளின் பொருட்டே கீழ்படியாமையின் பிள்ளைகள் மேல் தேவ கோபாக்கினை வருகிறது. (கொலோ.3:5,6) ஆதலால் வேசித்தனம் பேர் முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படக்கூடாது. (எபே.5:3) வேசித்தனத்திற்கு விலகியிரு. (அப்.15:20) இஸ்ரவேல் ஜனங்கள் மோவாபின் குமாரத்திகளோடு வேசித்தனம் பண்ணினார்கள். இதனால் 24000 பேர் செத்தார்கள். கர்த்தருடைய உக்கிராண கோபத்தினால் இது நடந்தது. (எண்.25:1-9) சோதோம் கொமோரா பட்டிணத்தாரும் அவைகளை சூழ்ந்த பட்டிணத்தார்களும் விபசாரம் (Fornication) பண்ணி, அந்நிய மாம்சத்தை தொடர்ந்து நித்திய அக்கினியின் ஆக்கினையை அடைந்தது நமக்கு திருஷ்டாங்கமாக எழுதிவைக்கப்பட்டுள்ளது. (யூதா:7, ஆதி.19அதி) அக்காலத்தில் வேசித்தனத்தினால் பூமியை கெடுத்தார்கள். (வெளி.19:2) வேசித்தனம் செய்கிறவன் மரணத்திற்கு பாத்திரவான்.(ரோ.1:29,32) தேவனுடைய இராஜ்யத்தை இவர்கள் சுதந்தரிப்பதும் இல்லை.(1கொரி.6:9,10) ஆதால் உன் இருதயத்திலே அவள் அழகை இச்சையாதே. அவள் கண் இமைகளினால் உன்னை பிடிக்க விடாதே. (நீதி.6:25) ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்கிறவன் எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரம் செய்தாயிற்று. (மத்.5:28) இஸ்ரவேல் புத்திரர் முன்பாக வேசித்தனம் பண்ணுவதற்கு ஏதுவான இடறை பீலேயாம் என்ற கள்ளதீர்க்கத்தரிசி போட்டான். (வெளி.2:14) இன்று இப்படிப்பட்ட இடறலை நாம் வாழும் நாட்டின் அரசாங்கமும், நாட்டின் நீதிபதிகளும், கிறிஸ்துவின் பெயரில் இயங்கிவரும் கள்ளசபைகளின் தலைவர்களும் போட்டுவருகிறார்கள். முடிவாக இந்த விபசாரகாரர்கள் (Fornicators), இரண்டாம் மரணமாகிய அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள். (வெளி.21:8) அதோடு மட்டுமல்ல விபசாரகாரர்கள் (Fornicators) பரிசுத்த நகரத்திற்கு புறம்பே இருப்பார்கள். (வெளி.22:15)

22. எவனாகிலும் தன் மனைவியை வேசித்தனம் செய்ததின் நிமித்தமேயன்றி, அவளை தள்ளிவிட்டு வேறோருத்தியை விவாகம் பண்ணினால் அவன் விபசாரம் செய்கிறவனாய் இருப்பான். அவ்வாறாக வேசித்தனத்தினால் தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரம் செய்கிறவனாய் இருப்பான். (மத்.19:3) விவாக ஒப்பந்தம் மரணம் ஒருவரையொருவர் பிரிக்கும் வரை ஆகும். அப்படியே ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்தால் பின் அவர்களில் ஒருவர் உயிரோடு இருக்கும் வரை மற்றொருவரை மறுமணம் செய்ய முடியாது. மேலும் 1கொரி.5:1 ல் சபையிலே விபசாரகாரர்கள் (Fornicators) இருந்ததாக காண்கிறோம். அன்று நடந்ததே இந்நாட்களிலும் நமது மத்தியில் நடக்கிறது. ஒரு கன்னிகையை ஒருவன் மோசம்போக்கி அவளோடே சயனித்தால் அவன் அவளை விவாகம் பண்ண வேண்டும். (யாத்.22:16) ஒருவன் தன் மனைவியை தள்ளிவிட்டு மறுமணம் செய்துக்கொள்ள மோசே அனுமதித்தான். அது தேவனால் அங்கிகரிக்கப்பட்டது. ஆனால் ஆதியில் அது அப்படியிருக்கவில்லை. வேசித்தனத்தின் நிமித்தமாக மட்டும் ஒருவன் தன் மனைவியை தள்ளிவிடலாம். அதாவது திருமணத்திற்கு முன் ஒருத்தி வேசித்தனத்தில் ஈடுபட்டு, அதை தான் திருமணம் செய்யும் போது தன் கணவனாக போகிறவனுக்கு மறைத்து அவனை திருமணம் செய்த பின், அவளுடைய வேசித்தனம் புருஷனுக்கு தெரியவந்தால், அவன் அவளை தள்ளிவிடலாம். ஆனாலும் தள்ளிவிடுதலை நான் வெறுக்கிறேன் என இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார். அப்படிபட்டவன் கொடுமையினால் தன் வஸ்திரத்தை மூடுகிறான் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். (மல்.2:6) இந்நாட்களில் சபைகளில் எங்கு பார்த்தாலும் பெண்கள் கூட்டம் அதிகம். ஆண்களை விட பெண்கள் சபைகளில் அதிகமாக வசீகரிக்கப்படுகிறார்கள். கணவன், பிள்ளைகளை பற்றி மனைவி கவலைபடுவதேயில்லை. பாவங்களால் நிறைந்து, பற்பல இச்சைகளினால் இழுப்புண்டு, சபை போதகர்களே பெண்பிள்ளைகளை வசப்படுத்திக்கொள்கிறார்கள். 2தீமோ.3:6-7 வசனங்களை தியானிக்கலாம். அப்போது உங்களுக்கு உண்மை புலனாகும். அநேக பெண்கள் தங்கள் சபை பாஸ்டரை எங்கள் ஆவிக்குரிய புருஷன் என்று கூற கேள்விப்பட்டிருக்கிறேன். ஆதலால் அந்த ஆவிக்குரிய புருஷனுடைய அழைப்பு வேதவாக்கியங்களின் அடிப்படையில் இல்லையே என்பதுதான் பெரிதான கவலையாயிருக்கிறது. எந்த பாஸ்டர் ஒரு பெண்ணுக்கு ஆவிக்குரிய புருஷன் என்று சொல்லும் அளவிற்கு தகுதி பெற்றிருக்கிறார்? யோக்கியதை அற்றவர்களை தன் ஆவிக்குரிய புருஷன் என்று சொல்லும் அளவிற்கு பெண்கள் வசப்படுத்தப்படுகிறார்கள்.

**23. திருமணமின்றி ஆண், பெண் கூடிவாழும் இல்லற வாழ்க்கை :**

விவாகத்தின் உறவு சட்டரீதியான, நியாயமான, சரியான ஆண் பெண் சரீர உறவாகும். விபசாரம் சட்டபூர்வமான விவாக சம்பந்தமான ஆண் பெண் சரீர உறவு தாறுமாறாக்கப்படுவதாகும். அலகாபாத் 27/28, மே 2001 அன்று Hindu என்கிற ஆங்கில பத்திரிக்கையில் ஒரு செய்தி. அதன்படி ஒரு ஆண் பெண் ஒருமனப்பட்டு விரும்பினால் அவர்கள் திருமணம் செய்துக்கொள்ளாமலே சேர்ந்து வாழலாம். இது சமுதாயத்தில் ஒழுக்கமற்ற, பாவகரமான செயல் என கருதப்படலாம். ஆனால் சட்டத்தின் அடிப்படையில் அவர்கள் திருமணம் ஆகாமலே சேர்ந்து வாழலாம் என்பதாகும். இந்த தீர்ப்பை அலகாபாத் உயர்நீதிமன்றத்தின் நீதியரசர் திரு.எம்.கட்ஜூ மற்றும் நீதியரசர் திரு.ஆர்.பி.மிஸ்ரா கூறியுள்ளார்கள். In a landmark Judgment, the Alagabad High Court has ruled that a man and a women can live together with out getting married if hey wish. “This may be regarded as immortal by society but it is not illegal. There is a difference between law and morality”. A Division Bench comprising Mr.Justice M.Katju and Mr. Justice R.B.Mishra observed last week while directing authorities to set the petitioner Miss.Payel Sharma, free and allowed her to go any where and live with any one as per her wish. நாட்டின் சட்டதிட்டங்கள் இப்படி இருந்த போதிலும், உயிரோடிருக்கிறவர்களையும், மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாக ஒரு ஆண் பெண் திருமணம் ஆகாத நிலையில் கூடி வாழ்வது வேசித்தனம் ஆகும். ஆனால் இது விபசாரம் ஆகாது.



Living together without marrying legal: HC

ALLAHABAD, MAY 27. In a landmark judgment, the Allahabad High Court has ruled that a man and a woman can live together without getting married if they wish. "This may be regarded as immoral by society but it is not illegal. There is a difference between law and morality," a Division Bench comprising Mr. Justice M. Katju and Mr. Justice R. B. Mishra observed last week while directing authorities to set the petitioner, Ms. Payal Sharma, free and allow her to go anywhere and live with anyone as per her wish.

The petitioner, a resident of Kannauj district in Uttar Pradesh, produced documentary evidence, including her high school certificate, to prove that she was 21-years-old and a major. On the basis of the evidence, the court directed the authorities to set her free. The court also directed the police to provide security to Ms. Sharma following perceived threat to her life as claimed by her in the petition.

The girl had moved the court praying that she be left on her own will after being forced to live in a Nari Niketan at Agra following her arrest along with Mr. Ramendra Singh, with whom she was living for some time.

The Agra police had arrested her and Mr. Singh on the basis of an FIR lodged by her father.

In the FIR, the girl's father had alleged that Mr. Singh, who was already married, had kidnapped his daughter on October 30 last year. Police had produced the two before the Chief Judicial Magistrate who directed the girl to be sent to Nari Niketan and released Mr. Singh on bail. — PTI

24. இப்பொழுது நாம் தேவனுடைய வார்த்தைகளை கொண்ட பரிசுத்த வேதாகமம் இது குறித்து என்ன கூறுகிறது என்பதையும் சற்று ஆராய்வோம். இயேசு கிறிஸ்துவின் தெய்வீக வெளிப்பாடு – அதாவது திவ்ய வாசகனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷத்தில் 19அதி 7வது வசனத்தில் ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது : அவருடைய மனைவி தன்னை ஆயுத்தம் பண்ணினாள் என்று சொல்லக்கேட்டதாக யோவான் எழுதுகிறான். மேலும் ஒன்பதாவது வசனத்தில் ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள் என்று சொல்லக்கேட்டதையும் கூறுகிறான். இந்த இரு சம்பவங்களுக்கும் முன்பு கிறிஸ்து தமது மணவாட்டியாகிய சபையை திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறார். கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதை தமக்கு முன் நிறுத்துகிறார் என எபே.5:26,27 வசனங்களில் தியானிக்கிறோம். இயேசு நம்முடைய மணவாளன் (மாற்.2:19, யோ.3:29) நாம் (கிறிஸ்துவின் சரீரமாகிய சபை) கற்புள்ள கன்னிகையாக கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறோம். (2கொரி.11:2) அடுத்து தன் குமாரனுக்கு கலியாணம் செய்த ஒரு ராஜாவைக்குறித்து மத்.22:2ல் காண்கிறோம். கலியாணத்திற்கு அழைக்கப்பட்டவர்கள் குறித்து 3ம் வசனத்திலும்,

கலியாண விருந்துக்குறித்து 4ம் வசனத்திலும் காண்கிறோம். அடுத்து யாத்.21:9,10 வசனங்களில் திருமணத்திற்கு முன் ஒருவனுக்கு ஒருத்தி நியமிக்கப்பட்டிருப்பதையும், இதே போன்ற சம்பவத்தை மத்.1:18ல் மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருப்பதையும் காண்கிறோம். நோவா நாட்களில் பெண் கொண்டு கொடுத்தார்கள் என லூக்.17:27 ல் காண்கிறோம். இது என்ன? இது ஆங்கிலத்தில் தெளிவாக கூறப்பட்டுள்ளது. They married wives, they were given in marriage. இது மத்.24:32 பெண் கொண்டும், பெண் கொடுத்தும் என கூறப்பட்டுள்ளது. ஆனால் ஆங்கிலத்தில் marrying and given in marriage என கூறப்பட்டுள்ளது. மேலும் மத்.25:10ல் மணவாளன் வந்தபோது ஆயத்தமாய் இருந்தவர்கள் கலியாண வீட்டுக்குள் பிரவேசித்தார்கள் என காண்கிறோம். மேற்கூறப்பட்டவைகளிலிருந்து ஆண் பெண் இல்லறவாழ்க்கை திருமணத்தின் மூலமாகவே ஆரம்பமானது. மேலும் இந்த காரியம் கர்த்தரால் வந்தது என ஆதி.24:50 ல் காண்கிறோம். தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்ககடவன். (மத்.19:6) ஆக திருமணத்தின் மூலமாக ஏற்படாத ஆண் பெண் உறவு மற்றும் இல்லறவாழ்க்கை தேவனுடைய பார்வையில் ஒரு முறைகேடான, நெறி தவறிய செயலாகும். தேவனுடைய பார்வையில் ஒரு ஆண் பெண் இல்லறவாழ்க்கை திருமணத்தின் வாயிலாகத்தான் அமையவேண்டும்.

25. ஆக வேதத்தின் அடிப்படையில் ஒரு ஆண் பெண் திருமணம் ஆகாத நிலையில் கூடி இல்லற வாழ்க்கை வாழக்கூடாது. விவாகம் தேவனால் ஏற்படுத்தப்பட்டது. பாருங்கள், விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளது. எபி.13:4. (Marriage is honourable in all) அதாவது விவாகம் யாவற்றுக்குள்ளும், எல்லாவற்றிலும் கனமுள்ளதாயிருக்கிறது. இந்த உலகத்தில் அநேக காரியங்கள் கனத்துக்குரியது. நாம் நம்முடைய தகப்பனையும் தாயையும் கனம்பண்ணவேண்டும். யாத்.20:12. நாம் நம்முடைய ராஜாவைக் கனம்பண்ணவேண்டும். 1பேது.2:17. நாம் நமக்கு வயதில் மூத்தவர்களைக் கனம்பண்ணவேண்டும். லேவி.19:32. நாம் பொதுவாக எல்லா மனிதர்களையும் கனம்பண்ணவேண்டும். 1பேது. 2:17. ஆனால் கனத்துக்குரிய இவை யாவற்றுக்குள்ளும், இவை எல்லாவற்றிலும் விவாகம் மிகவும் கனத்துக்குரியதாகும். அதாவது கனத்துக்குரியது என்பவைகளில் விவாகத்துக்கு முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. ஏனென்றால் விவாகம் கிறிஸ்துவுக்கும் அவருடைய சரீரமாகிய சபைக்கும் உள்ள ஐக்கியத்தை பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது. Marriage reflects Christ and His Church. ஆவியில் மறுபிறப்பு அடைந்த ஒரு ஆண், பெண் இருவரின் விவாக உறவு, இல்லற வாழ்க்கை கிறிஸ்துவுக்கும் அவருடைய சரீரமாகிய சபைக்கும் உள்ள தொடர்புக்கு எடுத்துக்காட்டு. எபே.5:22,23. கிறிஸ்து அவருடைய மணவாட்டியின் சபையை திருமணத்தின் வாயிலாகவே மனைவியாக பெற்றுக்கொள்கிறார். இதை பிரதிபளிப்பதின் வாயிலாக நமது மத்தியில் திருமணம் அமைந்துள்ளது. பாருங்கள் இயேசு மணவாளன் மாற்.2:18-20. யோ.3:29. அவரது சரீரமாகிய சபை – மணவாட்டி 2 கொரி.11:2. ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது. வெளி.19:7. ஆதலால் ஆவிக்குரிய கிறிஸ்தவர்கள் திருமணச்சடங்கை அசட்டை செய்யக்கூடாது. திருமணம் இல்லாமல் ஒரு ஆண், பெண் கூடி இல்லற வாழ்க்கை நடத்தவும் கூடாது.

**26. மனைவியை / ஏற்ற துணையை / மணவாட்டியை தெரிந்துகொள்ளுதல் :** நமது வாழ்க்கையில் அநேக வேளைகளில் நமக்கடுத்த காரியங்களில் நமக்கு தேவையான ஒன்றை தெரிந்தெடுக்க நமக்கு தருணம் அளிக்கப்படுகிறது. நமது வாழ்க்கையே தெரிந்துகொள்ளுதலின் அடிப்படையில் தான் உள்ளது. அதன் பேரில் நாம் தவறானதையோ, சரியானதையோ தெரிந்துகொள்ளுகிறோம். மனைவிக்கடுத்த காரியத்தில் ஒரு ஆணுக்கு, புருஷனுக்கடுத்த காரியத்தில் ஒரு பெண்ணுக்கு, அவர்கள் வாழ்க்கை துணையை தெரிந்துகொள்ளும் உரிமை உண்டு. நமது படிப்பை தெரிந்துகொள்ளுதல், நமது வேலை, பணியை தெரிந்துகொள்ளுதல், எதை உண்ணலாம், எதை உண்ணக்கூடாது, இதில் மக்களால் தெரிந்துகொள்ளப்பட்ட அரசாங்கம் மக்களை கட்டுப்படுத்துமானால் மக்கள் தவறான அரசாங்கத்தை தெரிந்துக்கொண்டார்கள். அவ்வாறாகவே நாம் செல்ல இருக்கும் சபையை தெரிந்துகொள்ளுதலுமாகும். இதில் யாரும் உங்களை கட்டாயப்படுத்த முடியாது. இது நம்முடைய சுதந்தரம். எவ்வாறு உங்களது ஏற்ற துணையை தெரிந்துகொள்ளுதலில் கண்ணும்கருத்துமாக இருப்பீர்களோ, அதேபோன்று தான் நீங்கள் செல்ல இருக்கும் சபையை தெரிந்துகொள்வதாகும். நீங்கள் செல்லும் சபை உங்களை சத்தியத்திற்குள், நித்தியத்திற்குள் வழிநடத்துமா என்பதை குறித்து உறுதியாக இருக்க வேண்டும். மாறாக நாம் இது எனது உறவினர் நடத்தும் சபை, இது எனது வீட்டிற்கு பக்கத்தில் உள்ள சபை, இது கூட்டம் அதிகமாக உள்ள சபை, இது குளிர்சாதன வசதி செய்யப்பட்ட சபை, இந்த சபையில் நன்கு பாடல்கள் பாடுகிறார்கள், இந்த சபை பாஸ்டர் நன்கு கதை சொல்லி நேரம் போவது தெரியாத அளவுக்கு நன்கு நகைச்சுவையாக பிரசங்கிக்கிறார், இந்த சபைக்கு சென்றால் அங்கு மதிய உணவு உண்டு, இந்த சபைக்கு சென்றால் இந்தந்த சலுகைகள் உண்டு என பல்நோக்கு நன்மைகளுக்கு பல்நோக்குடன் சென்று வருவீர்களானால் உங்கள் ஆத்துமாவை நீங்ள் இழந்துவிடுவீர்கள். சென்னையில் ஒரு பெரிய சபை உண்டு. அதன் பாஸ்டர் எப்பொழுதுமோ ரவுண்டில் தான் இருப்பார். ஞாயிறு கூட தன் சபை ஆராதனையை மற்றவரிடம் ஒப்படைத்து விட்டு, தான் மற்றொரு சபைக்கு பிரசங்கத்திற்கு சென்று விடுவார். சபை விசுவாசிகள் மற்றும் தன் இல்ல திருமணத்தை தனது பெரிய குளிர்சாதன வசதி செய்யபட்ட சபையில் வைத்து நடத்தாமல் பொதுமக்கள் கூடும் திருமண மண்டபத்தில் வைத்து நடத்துவார். இவருக்கு ஊழியம் செய்ய என்ன தகுதி இருக்கிறது? ஆனாலும் இவரை நம்பி ஒரு கூட்டம் பாதாளத்திற்கு வீரநடை போட்டுக்கொண்டிருக்கிறது.

27. ஆக ஒரு மனிதன் தன் மனைவியை தெரிந்துகொள்வதற்கு முன்பு நன்கு ஆலோசித்து, உருக்கமாக கருத்தாய் ஜெபம் செய்ய வேண்டும். கர்த்தரை எலியேசராக கொண்டு செயல்பட வேண்டும். மற்றபடி அவன் தன் வாழ்க்கை முழுவதையும் நாசமாக்கிக்கொள்வான். ஏனென்றால் திருமண ஒப்பந்தம் “மரணம் நம்மை பிரிக்குமளவும் ”

என்பதாகும். அவன் மறுபடியும் பிறந்த ஒரு பெண்ணையே தெரிந்துகொள்ள வேண்டும். வீட்டில் தங்கி தன் குடும்பத்தை நன்கு பேணிக்காக்கும் நல்ஒழுக்கம் உள்ள ஒரு பெண்ணையே தெரிந்துகொள்ள வேண்டும். வேறுயாரோ ஒருவனுடைய அல்லது பொது ஸ்தாபனங்களுக்கு சென்று பணிபுரியும் பெண்னை அவன் மணந்தால், அவள் எத்தகைய வீட்டு பணியை செய்கிறவளாய் இருப்பாள்? நீங்கள் உங்கள் குழந்தைகளை வளர்க்க ஒரு ஆயாவை அமர்த்த வேண்டும். அதிகமாக ஹோட்டல் சாப்பாட்டை நாடுவீர்கள். நீயும் சம்பாதிக்கிறாய், நானும் சம்பாதிக்கிறேன் என்ற எண்ணத்தில் மனைவி கணவனுக்கு எல்லாவற்றிலும் கீழ்படிய மறுக்கலாம். அவளுடைய அலுவலகத்தில் வேலை என்றுக்கூறி கள்ளக்காதலனோடு நேரத்தை செலவிட நேரும். வீட்டிற்கு வந்து சற்று இளைப்பாறலாம் எனக்கூறி டி.வி. முன்பு உட்கார நேரிடும். பல பெண்கள், ஆண்கள் மத்தியில் வேலை செய்கிறேன் எனக்கூறி ஆடை அலங்காரம், மேக்கப் போன்ற காரியங்களில் அதிகமாக ஈடுபட நேரிடும். நான் அறிய சில பெந்தெகொஸ்தே பெண்கள் வீட்டில், சபைகூடும் வேளையில் நகை அணிய மாட்டார்கள். பணிகளுக்கு செல்லும் வேளை நகை அணிவார்கள். இது என்ன மாய்மாலம்? கேட்டால் : நகை போடாமல் சென்றால் வேலை கிடைப்பது இல்லை என்கிறார்கள். பெண்கள் பணிபுரியும் இந்த நாகரீக பழக்கத்தை கர்த்தருடைய வார்த்தை ஆதரிப்பது இல்லை.

28. ஒரு மனிதன் தெரிந்துகொள்ளும் மணமகள், அவனுடைய பண்புகளை பிரதிபலிக்கிறவளாய் இருக்க வேண்டும். நீங்கள் இயேசு கிறிஸ்துவின் மணவாட்டியாக வேண்டுமானால் அவரிடம் உள்ள ஏழு தெய்வீக சுபாவங்ளில் நீங்கள் பங்குகொள்ள வேண்டும். அதாவது : விசுவாசம், அத்துடன் வல்லைமை, அத்துடன் ஞானம், அத்துடன் தன்னடக்கம், அத்துடன் பொறுமை, அத்துடன் தேவபக்தி, அத்துடன் சகோதர சிநேகம் போன்ற சுபாவங்கள் ஒன்றோடு ஒன்று கூட்டி கூட்டி சேர்க்கப்பட வேண்டும். விசுவாசம் பூரணப்பட்டால் தான் அத்துடன் வல்லமை சேரும். விசுவாசமும், வல்லமையும் இணைந்து பூரணப்பட்டால் தான் அத்துடன் ஞானம் கூட்டுச்சேரும். அவ்வாறாகவே ஏழு சுாபவங்களும் ஒன்றோடுஒன்று கூட்டிச் சேர்க்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் நீ கர்த்தராகிய இயேசுவை அறிகிற அறிவில் கனியுள்ளவனாக காணப்படுவாய். கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்திற்குட்படும் பிரவேசம் உங்களுக்கு பூரணமாய் அளிக்கப்படும். இந்த சுபாவமற்றவன் ஒரு பேர் கிறிஸ்தவன்தான். அவனுக்கும் கிறிஸ்துவுக்கும் சம்பந்தம் இல்லை. பெயரளவில் அவன் ஒரு கிறிஸ்தவனாக இருக்கிறான். அவ்வளவே. இந்த உலகமானது பேர் கிறிஸ்தவர்களாலே நிறைந்திருக்கிறது. அவர்கள் அவருடைய மணவாட்டி என உரிமைகொள்ள முடியாது. இதுகுறித்து 2பேது.1:1-11 வசனங்களை தியானியுங்கள். இப்பொழுது ஆதாம் காரியத்தில் உங்களையும் என்னையும் போல அவனுக்கு தன்னுடைய மணவாட்டியை தெரிந்துகொள்ளும் வாய்ப்பு அளிக்கப்படவில்லை. அதற்காக அவன் ஜெபம் செய்யவும் இல்லை. தேவன் அவனுடைய விலாஎலும்புகளில் ஒன்றை எடுத்து, மனுஷியாக உருவாக்கினார். அவனுக்கு தெரிந்துகொள்ள வேறு எந்த ஒரு பெண்ணும் அங்கு இல்லை. ஒரு காலகட்டத்தில் அவள் அவனை தேவனுடைய வார்த்தையிலிருந்து விலகச்செய்தாள். அவன் தேவனுடைய குமாரன் என்னும் ஸ்தானத்திலிருந்து அவனை விலகச்செய்தாள். அவள் தேவனுடைய சித்தத்திலிருந்து அவனை விலகச்செய்தாள். அதன் மூலம் மானிடவர்க்கம் முழுவதுக்கும் மரணத்தை கொண்டுவந்தாள். ஆதலால் தான் அவள் தேவனுடைய வார்த்தையை எந்த விதத்திலும் கையாளவோ, போதிக்கவோ, பிரசங்கம் செய்யவோ கூடாது என தேவனுடைய வார்த்தை அவளுக்கு தடை விதித்துள்ளது.

29. ஸ்திரீ மனிதனுக்காக உண்டாக்கப்பட்டாள், மனிதன் ஸ்திரீக்காக உண்டாக்கப்படவில்லை. ஆதலால் தான் ஒரு மனுஷன் அநேகம் பெண்களை மணந்துக்கொள்வது ஆதிகாலங்களில் ஒரு சட்டபூர்வமான செயலாக இருந்தது. தாவீதுக்கு 500 மனைவிகள், சாலமோனுக்கு 1000. ஆனாலும் இவர்கள் தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவர்களாயிருந்தார்கள். ஆனால் அந்த ஸ்திரீகளில் ஒருவராவது மற்றொரு புருஷனை மணக்க முடியாது. அவர்களுக்கு ஒரே ஒரு கணவன் தான் இருக்க வேண்டும். ஏனெனில் ஸ்திரீ மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டாள். 500 ஸ்திரீகளும் தாவீது ஒருவனுக்கே மனைவி. அதேபோன்று 1000 ஸ்திரீகளும் சாலொமோன் ஒருவனுக்கே மனைவி. ஆனால் இது ஒரு முன் அடையாளமாக இருக்கிறது. எப்படியெனில் 1000 வருட அரசாட்சியில், கிறிஸ்து சிங்காசனத்தில் அமரும் போது அவருடைய மனைவி / மணவாட்டி ஒரு நபராக இருப்பது இல்லை. அது ஆயிரக்கணக்கான பேர்களை கொண்டாதாகயிருக்கும். ஆனால் அவர்கள் அனைவரும் ஒருமித்து, மணவாட்டி என ஒருமையில் அழைக்கப்படுகிறார்கள். மணவாட்டிகள் என பன்மையில் இல்லை. மாறாக மணவாட்டி என்று ஒருமையில் இருப்பாள். பாருங்கள் விசுவாசிகளாகிய நாம் அனைவரும் ஒருமித்து கிறிஸ்துவின் மணவாட்டியாக இருக்கிறோம். நாமும் கிறிஸ்துவுக்காக உண்டாக்கப்பட்டோம். கிறிஸ்து நமக்காக உண்டாக்கப்படவில்லை. இன்று நம்முடைய பிரச்சனை என்னவென்றால் நாம் கிறிஸ்துவின் வார்த்தையுடன் நம்மை பொருத்துவதற்கு பதிலாக, வார்த்தை நமக்கு பொருந்தும்படி முயற்சிக்கிறோம். பாருங்கள் சிவகாசியில் இருந்து ஒரு கிறிஸ்து பிரன்காம் விசுவாசி எனக்கு எழுதுகிறதாவது : முதலில் நீங்கள் சகோ.பிரன்காம் செய்தியை படியுங்கள், பின்பு பரிசுத்த வேதாகமத்தை படியுங்கள் என்கிறார். மக்களை திசைத்திருப்பும் கள்ளகபடமுள்ள வேலையாள்.

30. ஆதியிலே மனுக்குலம் வீழ்ச்சிக்கு ஒரு பெண், அதாவது ஏவாள் தான் காரணம். அவள் மூல சிருஷ்டிப்பில் இல்லை. மற்ற பெண் இனம் அனைத்தும் மூல சிருஷ்டிப்பில் உள்ளது. பறவைகளில் ஆண் பெண், மிருகங்களில் ஆண் பெண். நீர்வாழ் ஜந்துக்களில் ஆண் பெண் போன்றவை அனைத்தும் மூலசிருஷ்டிப்பில் இருந்தன. ஆனால் மானிட இனத்தில் தேவன் மனுஷனை மாத்திரமே சிருஷ்டித்தார். தேவன் ஏவாளை அவனிலிருந்து வெளியே எடுத்தார். ஸ்திரீ மனிதனிலிருந்து எடுக்கப்பட்ட தேவனின் உபபொருளாக (Byproduct) இருக்கிறாள். தேவன்

அவளை மூல சிருஷ்டிப்பில் கொண்டுவரவில்லை. ஆதலால் தான் அவள் மூலமாக உலகில் மரணம் பிரவேசித்தது. அவளே மனுக்குல மரணத்திற்கு காரணம் / குற்றவாளி.

31. கிறிஸ்தவ திருமணம் கிறிஸ்துவுக்கும் அவருடைய சரீரமாகிய சபைக்கும் உள்ள ஐக்கியத்தை பிரதிபலிக்கிறதாக இருக்க வேண்டும். திருமணமானது இப்பிரபஞ்சத்திற்குரியது. இந்த பிரபஞ்சத்தின் பிள்ளைகள், பெண் கொண்டும், பெண் கொடுத்தும் வருகிறார்கள். மறுமையையும் மரித்தோரிலிருந்து எழுந்திருத்தலையும் அடைய பாத்திரராக எண்ணப்படுகிவர்களோ பெண் கொள்ளுவதுமில்லை, பெண் கொடுப்பதுமில்லை. அவர்கள் இனி மரிக்கவும் மாட்டார்கள். அவர்கள் உயிர்தெழுதலின் பிள்ளைகள் ஆன படியினால் தேவ தூதர்களுக்கு ஒப்பானவர்களாய், தேவனுக்கு பிள்ளைகளுமாய் இருப்பார்கள். (லூக்.20:34-36)

**திருமணநோக்கம் / அதற்குரிய முகாந்திரங்கள் என்ன? (அ)** முதலாவது மனுஷன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல என்று கண்ட தேவன் அவனுக்கு ஏற்ற துணையை அவன் விலாஎலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த விலாஎலும்பை மனிஷியாக உருவாக்கி, அவளை அவனிடத்தில் கொண்டுவந்து, அவனுக்கு மனைவியாக கொடுத்தார். ஆதாம் தன் மனைவிக்காக எங்கும் அலய வேண்டி தேவையில்லை. பல பெண்களை பார்த்து அதில் ஒரு பெண்ணை தேர்ந்தெடுத்துக்கொள்ளப்படுதலும் தேவை இல்லாமல் போயிற்று. அவனுடைய துணை அவனது சரீரத்திலிருந்து எடுக்கப்பட்டு, அவனுக்கு மனைவியாக கொடுக்கப்பட்டாள். அதாவது ஒரு புருஷனுடைய சரீரத்தின் பாகம்தான் அவனுடைய மனைவி. ஆதலால் ஒரு புருஷன் இன்றி ஒரு ஸ்திரீ, ஒரு ஸ்திரீயின்றி ஒரு புருஷன் பூரணமாக முடியாது.

(ஆ) அடுத்து விரக்தராயிருக்க வரம் பெற்றவர்கள் வேசித்தனத்திற்கு விலகி, விபசாரத்திற்கு விலகி, காமவிகாரத்திற்கு விலகி, சொல்லப்போனால் சரீர மாம்ச இச்சைகளுக்கடுத்த பாவங்களுக்கு விலகி தங்கள் சரீரத்தில் உபத்திரவபடாதபடிக்கு வேசித்தனத்தை தடுக்க (1கொரி.7:2) தங்களை பாவ இச்சைகளிலிருந்து காத்துக்கொள்ள திருமணம் தேவையான ஒன்றாக இருக்கிறது. ஒரு கிறிஸ்துவுக்குள்ளானவர்களுடைய சரீர அவயவங்கள் அசூசி படாதபடிக்கு திருமணம் தேவையாயிருக்கிறது.

(இ) மேலும் தேவனுடைய நாமத்திற்கு மகிமை உண்டாக அவர்கள் தங்களது சரீரத்தை பயன்படுத்த அனுமதிக்கும் காலம் வரை பிள்ளைகளை பெற்றுக்கொள்ள, பலுகி பெருகி பூமியை நிரப்பவும் (ஆதி.1:28), ஜனத்தொகை அதிகமாகிவிட்டது என்றுக்கூறி பலுகி பெருவதை கட்டுப்படுத்துவதற்காக அல்ல, அதின் நிமித்தமாக கர்ப்பத்தடை செய்ய அல்ல, கருசிதைவு செய்து கொள்வதற்கு அல்ல, தங்கள் பிள்ளைகளை நல்லொழுக்கமுள்ளவர்களாகவும், கீழ்படியபண்ணுகிறவர்களாகவும்(1தீமோ.34) கர்த்தருக்கேற்ற பயபக்தியில் வளர்த்து தேவபக்தியுள்ள ஒரு சந்தததியை பெறுவதற்கு விவாகம் ஏற்படுத்தப்பட்டது. (மல்.2:15)

(ஈ) மேலும் திருமணத்தின் மூலம் ஒரு புருஷனும் ஒரு ஸ்திரீயும் தங்கள் சுகத்திலும், துக்கத்திலும் பாடு நெருக்கத்திலும், ஒருவருக்கொருவர் அன்பு பாராட்டி சிநேகத்தையும், சகாயத்தையும், ஆறுதலையும் அடைந்துக்கொள்ள விவாகம் அத்தியாவசியமாக இருந்தது. மனைவியை கண்டடைகிறவன் நன்மையானதை கண்டடைகிறான். (நீதி.18:22) புத்தியுள்ள மனையவியோ கர்த்தர் அருளும் ஈவு. (நீதி.19:16) புருஷன் மனைவி இருவராயிராமல் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள். ஆதலால் இங்கு இரு அல்லது அதற்கு மேற்பட்ட மனைவிகளுக்கு இடமில்லை. ஒருவன், ஒருத்தி.

**32. ஒருவன் தன் மணவாட்டியை / மனைவியை தெரிந்துகொள்ளும்போதும், அதன்பின்னும் தன் இல்லற வாழ்க்கையிலும் கடைப்படிக்க வேண்டிய சில காரியங்கள்:**

**(அ)விசுவாசம்:** திருமணம் செய்யப்போகிறவர்கள் தங்களுடன் விசுவாசத்தில் உள்ள ஒரு ஆணையோ, பெண்ணையோ மாத்திரமே திருமணம் செய்ய வேண்டும். ஒரே தேவன் அவருடைய நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்று விசுவாசிக்கும் ஒருவன், ஒருத்தி, ஒரே தேவன், அவர் மூவரில் ஒருவராக, ஒருவரில் மூவராக செயல்படும் மூன்று பேர் என்று விசுவாசிக்கும் ஒரு திரித்துவ காரனை / திருத்துவ காரியை எப்படி திருமணம் செய்ய முடியும்? நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழ், மனுஷர்களுக்குள்ளாக கொடுக்கப்பட்ட நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. இயேசு கிறிஸ்து நாமத்தில் மாத்திரமே பாவமன்னிப்பு. இப்படியிருக்க பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம்பெற்ற ஒருவனை / ஒருத்தியை எப்படி விவாகம் பண்ணமுடியும்? இவர்களிடம் விசவாச ஒற்றுமை இல்லையே. இப்படியிருக்க அவர்கள் எவ்வாறு ஒரே சரீரமாக இணையமுடியும்? விசுவாசத்தில் மாறுபடும் போது அந்த ஆணுடைய பாகமாக பெண் இருக்க முடியாதே. பெண்ணும் அந்த ஆணின் ஒரு பாகமாக இருக்க முடியாது. அந்நியநுகத்திலே அவிசுவாசியுடன் பிணைக்கப்படதிருபீர்களாக. (2கொரி.6:14) அவிசுவாசிகளுடனே விசுவாசிக்கு பங்கு ஏது? (2கொரி.6:15) ஒரு அவிசுவாசி கீழ்படியாமையின் பிள்ளை அல்லவா. (எபே.5:6,7) அந்நியரோடு சம்பந்தம் கொள்ளக்கூடாதே. (உபா.7:34) அந்நியரோடு சம்பந்தம் ஒரு பொல்லாப்பு அல்லவா. (நெகே.3:27) ஆக திருமணம் ஆக போகும் ஒரு ஆண் / ஒரு பெண் ஒரே விசுவாசத்தில் மறுபிறப்பு அடைந்தவர்களாக இருக்க வேண்டும். கர்த்தருக்குட்பட்டவர்களாயிருக்க வேண்டும்.(1கொரி.7:39) அப்பொழுதுதான் அவர்கள் ஒரே சரீரமாக இருப்பார்கள். மற்றபடி அவர்களுடைய திருமணம் கிறிஸ்துவுக்கும் அவருடைய சரீரமாகிய சபைக்கும் உள்ள ஐக்கியத்தை பிரதிபலிக்காது. எங்களுடைய இந்த விசுவாசத்தினால் தான் எங்களது இரு பெண்களின் திருமணத்திற்கடுத்த காரியங்கள் தடைப்பட்டுக்கொண்டே வருகிறது. கிறிஸ்துவினுடைய கரத்தில் அவர்களை ஒப்படைத்து விட்டோம். அவர்களுடைய காரியங்கள் தேவனுக்கடுத்தது. நாங்கள் எங்கள் விசுவாச போராட்டத்தை போராடிக்கொண்டிருக்கையில், ஒன்றுக்கும் உதவாத பேலியாளின் மகன் ஒருவன் சிலரை என்னுடன் அவன் இல்லத்தில் கூட்டி, சோற்றை போட்டுவிட்டு, அவர்கள் மத்தியில் என் பிள்ளைகளைப்பற்றி, அவர்களுடைய நடத்தைகளை பற்றி தவறாக கூறி என்னை அவமானப்படுத்தினான். என் பிள்ளைகளின் நடத்தை தவறு என்கிறாய்,

அதற்கு ஆதாரங்கள் எதுவும் வைத்திருக்கிறாயா என்றால், இதுகுறித்து மற்றொருவர் என்னிடம் கூறினார், நான் கொடுப்பது இரண்டாம் கட்ட தகவல் என்றான். அந்த மற்றொரு நபர் யார் என்றால், சொல்ல முடியாது என்றான் இந்த கேட்டின் மகன். இவன் ஒரு பக்கா ஏமாற்றுக்காரன், நுங்கம்பாக்கம் பாஸ்டருடன் ஒரே குட்டையில் ஊறிய மற்றொரு மட்டைதான் என்று அறிந்திருந்தும், என் நேசக்கரத்தை நீட்டினேன். ஆனால் முடிவில் இவன் யார் என்பதை வெளிப்படுத்தி விட்டான். கூடா நட்பு கேடாய் முடிந்தது. இவன் செய்தி செய்தி என்று கூறிகொண்டு இளம் விசுவாசிகளை வஞ்சித்து, செய்தியை தகாத விதமாக பிரசங்கித்து, செய்திதான் முக்கியம் செய்தியை பிரசங்கிப்பவன் நடத்தையை கண்டுகொள்ளாதீர்கள் என்று கூறி அநேகரை பாதாளத்தில் தள்ளிக்கொண்டு வருகிறான்.

**(ஆ) வயது :** ஆண் பெண்ணைவிட கூடுதல் வயது உடையவனாகயிருக்க வேண்டும். பெண் ஆணைவிட குறைந்த வயது உடையவளாகயிருக்க வேண்டும். பெண் ஆணைவிட ஒரு மணிநேரம் கூட முன்பாக பிறந்தவளாக இருக்ககூடாது. ஆனால் ஆண் பெண்ணைவிட ஒருமணி நேரம் முன்பாக பிறந்திருந்தாலும் அந்த விவாக ஒப்பந்தத்தில் தவறில்லை. பெண் ஆணைவிட கூடுதல் வயதுள்ளவளாக இருப்பாளாகில் அது தேவனுடைய பிரமாணத்தை சீர்குலைக்கும். ஏனென்றால் ஆணிடமிருந்து தான் பெண் எடுக்கப்பட்டாள். பெண்ணிலிருந்து ஆண் எடுக்கப்படவில்லை. ஆணின் ஒரு பாகம்தான் பெண். பெண்ணின் ஒரு பாகம் ஆண் இல்லை. பெண் ஆணைவிட கூடுதல் வயதுள்ளவளாக இருப்பாளாகில், ஆண் பெண்ணிடமிருந்து உருவாக்கப்பட்டவனாகிவிடுவான். அப்படியானால் இந்த விவாகம் கிறிஸ்துவுக்கும் அவருடைய சரீரமாகிய சபைக்கும் உள்ள ஐக்கியத்தை பிரதிபலிக்காது. பாருங்கள், நாம் கிறிஸ்துவுக்குள் உலகத்தோற்றத்திற்கு முன்னே. நமக்குள் கிறிஸ்து அல்ல. மாறாக நாம் கிறிஸ்துவுக்குள். இந்நாட்களில் பெண் எவ்வளவுதான் தன்னைவிட கூடுதல் வயது உடையவர்களாகயிருந்தாலும் பரவாயில்லை, அவளிடம் பணம், நகை, படிப்பு, உத்தியோகம் இருக்கிறதா என்பது தான் ஆண்களின் பெற்றோர்கள் குறிக்கோளாக இருக்கிறது. இது ஒரு கிறிஸ்துவ குடும்பமே அல்ல.

**(இ) அழகு :** அநேகர் தங்கள் துணையை தேர்ந்தெடுக்கும்போது அழகுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அந்த பெண் நன்கு கலராக, அழகாக இருப்பாளா என்று தான் கேட்கிறார்கள். ஆனால் அழகானது வஞ்சனையுள்ளது என நீதி.31:30 ல் வாசிக்கிறோம். மேலும் அழகை கண்டு அதை இச்சிக்க கூடாது எனவும் காண்கிறோம்.(நீதி.6:25) கவனியுங்கள். பாவம் அழகாகத்தான் இருக்கும். சாத்தன் பூரண அழகுள்ளவன் என காண்கிறோம். (எசே.28:12) ஏவாளுக்கு அந்த கனி பார்வைக்கு இன்பமும், இச்சிக்கப்படத்தக்கதாகவும் இருந்ததினால் அதை புசித்தாள், வஞ்சிக்கப்பட்டாள். (ஆதி.3:6) பொதுவாக மிருகம், பறவை, மீன் அனைத்திலும் ஆண் தான் அழகுள்ளது. ஆனால் மானிட வர்க்கத்தில் மாத்திரம் பெண் அழகுள்ளவள். ஏன்? மிருகம், பறவை, மீன் போன்றவைகளில் பெண்ணுக்கு கற்பு என்பது கிடையது. ஆனால் மனுகுலத்தில் பெண்ணுக்கு மாத்திரம் கற்பு உள்ளது. பூரண அழகுள்ள சாத்தான் தேவதூதர்களை வஞ்சித்தான். வானத்திலிருந்து தள்ளப்பட்டான்.(ஏசா.16:12) ஏவாளையும் அவ்வாறாகவே வஞ்சித்தான். (2கொரி.11:3) ஆதியில் கர்த்தருடைய சந்நிதியை விட்டு ஆதாம் விலக ஏவாள் என்ற ஒரு பெண் தான் காரணம். அது உலக முடிவிலும் அப்படியே இருக்கும். ஏனென்றால் பெண்கள் எப்போதும் கற்றாலும் ஒரு போதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாய் இருக்கிறார்கள். (2தீமோ.3:7) ஆதலால்தான் பெண் மூல சிருஷ்டிப்பில் (Original Creation) இல்லை. இவள் தேவனுடைய ஒரு பக்க சிருஷ்டிப்பு (By product).

**(ஈ) பொருளாசை :** அடுத்து நாம் ஒரு பெண்ணை தேர்ந்தெடுக்கும் போது பணத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம். பெண் பிடிக்கிறதோ இல்லையோ ரொக்கம் எவ்வளவு கொடுப்பார்கள். தங்க ஆபரணங்கள் எவ்வளவு போடுவார்கள் என்றுதான் கேட்கிறார்கள். இதுவும் தவறு. பண ஆசை ஒரு அக்கிரமம். (ஏசா.37:17) பண ஆசை எல்லா தீமைக்கும் வேர்.(1தீமோ.6:10) சிலர் பண ஆசையை இச்சித்து விசுவாசத்தை விட்டு விலகிப்போனார்கள்.(1தீமோ.6:10) சிலர் ஐசுவரியத்தினாலும், சிற்றின்பத்தினாலும் நெருக்கப்பட்டு பலன் கொடாமல் போனார்கள். (லூக்.8:14) சிலர் பொருளாசையை இச்சித்து அநேக சோதனைகளினாலே தங்களை உருவக்குத்திகொள்கிறார்கள். (1தீமோ.6:10) நாம் நிலையற்ற இந்த ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வைக்க கூடாது. (1தீமோ.6:17) பொதுவாக ஐசுவரியத்தை உடையவனுக்கு அதை அனுபவிக்கும் சக்தியை தேவன் அவனுக்கு கொடுப்பதில்லை. (பிரச.6:2) பொருள் பெருக பெருக ஒருவன் அதை காண்பதேயன்றி அவனுக்கு அதினால் பிரயோஜனம் இல்லை. (பிரச.5:10,11) எனக்கு தெரிந்த ஒரு குடும்பம் தகப்பன் பிள்ளைகளுக்கு இலட்சக்கணக்கில் பணம் சேகரித்து அதை பங்கிட்டு கொடுத்தார். ஆனால் அந்த மனிதன் நாபாளைப்போன்று மிக்க நப்பி, கஞ்சன். முடிவு என்ன? மருமகள் சாப்பாட்டை வீட்டு காம்பவுண்டு சுவர் மீது ஒரு தட்டில் வைத்துவிட்டு சென்று விடுவாள். அவள் வைக்கும் வேளையை பார்த்து இந்த நப்பி அதை எடுத்துக்கொண்டு வந்து சாப்பிட்டு விட்டு, மீண்டும் தட்டை அந்த காம்பவுண்டு சுவரிலே வைத்து விடவேண்டும். மகன் வீட்டிற்கும் இவர் வீட்டிற்கும் இடையில் ஒரு காம்பவுண்ட் சுவர். ஆக அவர் படும்பாடு ஒரு நாய் படும் பாடைவிட மட்டமானது. காரணம் என்ன? பொருளாசை. அதை அனுபவிக்க கர்த்தர் அந்த மனுஷனை அனுமதிக்கவில்லை. ஆக ஐசுவரியத்தினால் கேடேயன்றி வேறொன்றும் இல்லை. (பிரச.5:13) கவனியுங்கள் பொருளாசை விக்கிரகாராதனை. அதை இச்சிப்பவன் கீழ்படியாமையின் பிள்ளை.(கொலோ.3:5,6) பொருளாசைக்காரனாகிய விக்கிரகாராதனைக்காரன் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிப்பது இல்லை. (எபே.5:5, 1கொரி.6:10) பொருளாசைக்காரர்கள் இம்மையில் தங்கள் பங்கை பெற்ற பிள்ளைகள் (சங்.17:14) மறுமையில் இவர்களுக்கு இடமில்லை. இவர்கள் மரணத்திற்கு பாத்திரவான்கள். (ரோ.1:29,32) சற்று சிந்தியுங்கள் : இந்த உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டுவந்ததுமில்லை, ஒன்றும் கொண்டுபோவதுமில்லை.(1தீமோ.6:7) எந்த நிலையில் பிறந்தோமோ அதே நிலையில் சரீரம் மட்டும் ஒரு துண்டு துணியினால் மறைக்கப்பட்ட நிலையில் பூமிக்குள் செல்கிறோம். பிரியமானவர்களே இந்த உலகில் நமக்கு உண்ணவும், உடுக்கவும் உண்டாயிருந்தால் போதும் என இருப்பது நலம்.(1தீமோ.6:8) ஆதலால் நீயோ தேவனுடைய மனுஷனே, தேவனுடைய பிள்ளையே பண ஆசையை

விட்டு ஒடு. (1தீமோ.6:11) உன்னிடம் இருக்கும் ஐசுவரியம் உனக்கு இருமாப்பான சிந்தையை உண்டாக்கும்.(1தீமோ.6:17) ஆணவத்தை உண்டாக்கும். வேதனையை உண்டாக்கும். பின் அதன் முடிவு அழிவாகயிருக்கும். தேவன் நமக்கு செல்வத்தை / ஐசுவரியத்தை கொடுத்தது எதற்கு? அது கர்த்தருடைய ஊழியத்திற்கு (லூக்.8:3). பூமியில் உள்ள சகலபரிசுத்தவான்களுக்கு(2கொரி.8:14, சங்.16:3)

**(உ) அன்பு :** கிறிஸ்து தம்முடைய சரீரமாகிய சபையில் அன்பு கூறுவது போன்று, புருஷனும் தன் சரீரத்தின் ஒரு பாகமாகிய தன் மனைவியிடம் அன்பு கூற வேண்டும்.(எபே.5:25) புருஷனுடைய சரீரத்தின் ஒருபாகம் தான் அவனுடைய மனைவி. அவன் சரீரத்திலிருந்து தான் அவள் எடுக்கப்பட்டாள். (ஆதி.2:21,22) தன் சொந்த மாம்சத்தை பகைத்தவன் ஒருவனும் இல்லை. (எபே.5:29) பாருங்கள் ஏவாள் செய்த தவறை, ஆதாம் தன் மீது ஏற்றுக்கொண்டு, அவள் செய்த தவறுக்கு அவளுடன் பங்காளி ஆனான். அது தான் அன்பு. பாருங்கள் மனைவி தன் புருஷனுடன் நித்திய ஜீவனை கிருபையால் சுதந்தரித்துக்கொள்ள உடன் பங்காளியாய் இருக்கிறாள். (1பேது.3:7) அன்பு சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் சகிக்கும், சகலத்தையும் நம்பும். (1கொரி.13:7)

**(ஊ) அலங்கரிப்பு :** மயிரை பின்னி, பொன் ஆபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாக இருக்க வேண்டாம். பரிசுத்த வேதாகமத்தில் தன் கண்களுக்கு மையிட்டு, தன் தலையை சிங்காரித்துக்கொண்டவள் யேசபேல் என்னும் சபிக்கப்பட்ட ஸ்திரீ.(2ராஜா.9:30,34) அழியாத அலங்கரிப்பாய் இருக்கிற சாந்தமும், அமைதலும் ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாய் இருக்க கடவது. அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது. (1பேது.3:3,4) ஒரு காலக்கட்டத்தில் இஸ்ரவேல் ஜனங்களை நோக்கி தேவன் : நீங்கள் போட்டிருக்கிற உங்கள் ஆபரணங்களை கழற்றிப் போடுங்கள். அப்பொழுது நான் உங்களுக்கு செய்யவேண்டியதை அறிவேன் என்றார். (யாத்.33:5) தேவன் நமக்கு கொடுத்த புறம்பான இயற்கை அழகு போதும். இந்த அழகை மேலும் நாம் பொன் ஆபரணங்களினால் அழகுபடுத்தக்கூடாது. அது தேவையற்றது.

**(எ) அடையாளச்சின்னம் :** திருமணத்தில் அடையாளச்சின்னம் (நம்முடைய கலாசாரத்தின்படி தாலி / மோதிரம்) ஒன்று வேண்டும். அது திருமணத்தில் ஆண் பெண் செய்யும் ஒப்பந்தத்திற்கு அடையாளம். பாருங்கள் ஞானஸ்நானம், இது தேவனோடு நாம் செய்யும் நல்மனசாட்சிக்கு அடையாளம் (1பேது.3:20). வானவில், இதுவும் தேவனுடைய உடன்படிக்கையின் அடையாளம். (ஆதி.9:12,13) 10 வெள்ளிக்காசுகள், இது ஒரு பெண் கொண்டுள்ள பத்து கற்புகளுக்கு அடையாளம். (லூக்.15:8) அந்நாட்களில் திருமணத்தின் அடையாளமாக 10 வெள்ளிகாசுக்களை கொண்ட ஒரு வட்ட வடிவமான ஆபரணத்தை பெண்ணின் தலைமேல் அணிவது வழக்கம். ஆண் அணிகிறான். தனது மனைவி பத்து கற்புக்களைக் கொண்ட ஒரு புனிதமான பெண் என்பதை உறுதிப்படுத்த அதை அணிகிறான். விருத்தசேதனம், இது அவன் ஒரு யூதன் என்பதற்கு அவனின் சரீரத்தில் காணப்படும் ஒரு அடையாளம். (ஆதி.17:10) கால்களை கழுவுதல், விசுவாசிகளில் ஒருவர் மேல் ஒருவருக்கு பங்கு உண்டு என்பதை எடுத்துக்காட்ட. (யோ.13:8,14) இராப்போஜனம், கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தை தெரிவிக்க ஆசரிக்கிறோம். (1கொரி.11:25) இது கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியம். கிறிஸ்துவினுடைய சரீரதத்தின் ஐக்கியம். (1கொரி.10 :16,17) ஆக உடன்படிக்கை ஒன்று என்று வருமாகில் அங்கு அடையாளம் ஒன்று இருக்க வேண்டும். ஆக திருமணத்தில் ஏற்படும் ஒப்பந்தத்திற்கு அடையாளமாக தாலி / மோதிரம் நம் நாட்டு வழக்கத்தின்படி அணியப்படுகிறது. ஆக இந்த அடையாளம் என்பது பழைய புதிய ஏற்பாடுகளில் காணப்படும் உபதேசங்களில் ஒன்றாகயிருக்கிறது. ஒருவருக்கொருவர் பரிசுத்த வேதாகமத்தை மாற்றுவது அடையாளமாகாது. வேதாகமத்தை ஒருவருக்கொருவர் மாற்றுவது தேவனுடைய வார்த்தையை / தேவனை ஒருவருக்கொருவர் மாற்றிக்கொள்வதாகும். அது கூடாது.

**(ஏ) திருமணம் செய்யும் இடம் :** மணமகன் கூடி வரும் சபையில் இது நடைபெற வேண்டும். (Marriage belongs to the house of God Q&A.342) ஏவாள் ஆதாமிடம் கொண்டுவரப்பட்டாள். ரெபெக்காள் ஈசாக்கிடம் வந்தாள். மணவாட்டி ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு பரலோகத்தில் அவளது திருமணம். பொது ஸ்தானங்களில், திருமண மண்டபங்களில் திருமணம் நடத்துவது தேவனுடைய பார்வையில் அருவருப்பானது. ஆனால் இது சென்னை பாஸ்டர் ஐசக் வசந்தகுமாருக்கு அருவருப்பாகாது. அவரை எங்கு கூப்பிட்டாலும் அங்கு கலியாணத்தை நடத்தி வைக்க வருவார். அது திருமணமண்டபமாக இருந்தாலும் சரி, சினிமா தியோட்டராக இருந்தாலும் சரி, அது சாராயக்கூடமாக இருந்தாலும் சரி, அவருக்கு அதில் வித்தியாசம் கிடையாது. பையனையும், பெண்ணையும் கைபிடித்து இணைத்து வைக்க வேண்டும். மேடையில் அவர்களை ஒருவருக்கொருவர் முத்தமிட செய்ய வேண்டும். அது ஒன்றே போதும் அவருக்கு . அதில் மகிழ்ச்சி. தங்களை முற்றிலுமாக செய்தியை அறிந்தவர்கள், அதோடு மாத்திரமல்ல அதை முழுவதுமாக கடைப்படிக்கிறவர்கள் என்று கூறுகிறவர்கள் வசூல் வேட்டைக்காக தங்கள் சபைகூடும் இடத்தில் தங்கள் குடும்ப திருமணத்தை நடத்தாது, சமுதாய கூடத்தில் திருமணத்தை நடத்தும் காலம் இது. எல்லாம் மாயையும் மனதுக்கு சஞ்சலுமாய் இருக்கிறது. ஊர்சூற்றும் இவர் ஒரு பாஸ்டர் ஊழியத்திற்கு தகுதியற்றவர். ஆவிக்குரியவர்கள் அவர் காரியத்தை நிதானித்து பார்த்தால், ஒருவரும் அவருடைய சபையில் அங்கம் வகிக்க மாட்டார்கள்.

**(ஒ) கலப்புத்திருமணம் :** கலப்பு விவாகத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஒரு பூந்தோட்டத்தில் ரோஜா பூவை எடுத்துக்கொண்டால் அதில் பலவிதமான வகைகள் உண்டு. வெள்ளை ரோஜா, சிகப்பு ரோஜா, மஞ்சள் ரோஜா என உள்ளது. அதேபோன்று நாயை எடுத்துக்கொண்டால் பல வகையான ரகங்கள். இவைகள் ஒன்றோடு ஒன்று இனச்சேர்க்கையில் பங்குகொள்வது இல்லை. அவ்வாறாகவே மனுகுலத்திலும் வெள்ளை நிறத்தினர், கருப்பு நிறத்தினர், பழுப்பு நிறத்தினர் போன்று கலர்களில் வித்தியாசம். மேலும் ஆகாரங்களில் வித்தியாசம். வாழ்க்கை நடைமுறைகளில் வித்தியாசம். இவ்வாறாக ஒவ்வொரு காரியத்திலும் ஒரு பிரிவினர்களோடு மற்றோரு பிரிவினிர் மாறுபாடான கருத்து, பழக்கவழக்கங்களை உடையவர்களாக இருக்கிறார்கள். ஒவ்வொரு வகையான கூட்டத்தாரும்

தங்களுக்கென ஒரு சமுதாயத்தை ஏற்படுத்துக்கொண்டார்கள். அவர்களில் ஒருவருக்கொருவர் பெண் கொண்டு கொடுப்பது இல்லை. தேவன் அவர்களை எந்தவிதமான இந்த பூமியில் வைத்திருக்கிறாரோ, அதே விதமாக அவர்கள் வாழ விரும்புகிறார்கள். என் சிருஷ்டிகர் என்னை எந்த நாட்டிலும், எத்தகைய ஜனங்கள் மத்தியிலும், எந்தவித சுபாவங்களுடன், பண்பாடுகள் கொண்ட ஜனங்கள் மத்தியில், பிறக்க, வாழச்செய்தாரோ, அவர்கள் மத்தியில் நான் ஒரு வாழ்க்கை வாழ விரும்புகிறேன்.

**(ஓ)திருமணத்திற்குபின் தனிக்குடும்பம்:** இந்நாட்களில் ஒரு குடும்பத்தில் உள்ள ஆணுக்கு திருமணமானபின்பும் அவன் தனது பெற்றோரோடு, உடன்பிறந்த மற்றோரோடு கூட்டுக்குடும்பம் என்ற பேரில் குடும்பம் நடத்திவருகிறார்கள். இது தவறு. திருமணத்திற்கு பின் புருஷன் தன் தகப்பனையும், தாயையும் விட்டு இனி தன் மனைவியோடு இசைந்திருப்பான் என ஆதி.2:24ல் வாசிக்கிறோம். ஆங்கிலத்தில் Leave his father and mother என உள்ளது. அதாவது தாயையும் தகப்பனையும் விட்டு பிரிந்து வாழ்தல் என பொருள்படும். மனைவி தன் ஜனத்தையும் (Own people) தன் தகப்பன் வீட்டாரையும் (Father’s House) பிரிந்திருப்பாள் என சங்கீதக்காரன் எழுதுகிறான் (சங்.45:10). ஒரு ஸ்திரீயை விவாகம் பண்ணின ஒருவன் இல்லற வாழ்க்கையில் அவளிடம் பிரவேசித்த போது, அவளிடத்தில் கன்னிமை காணவில்லை என்று அவள் மேல் அவலாதியான விசேஷங்களை சாற்றி, அந்த பெண்ணிடத்தில் கன்னிமை காணப்படவில்லை என்றால் அவள் வேசித்தனம் பண்ணினபடியினாலே கல் எறிந்து கொல்லப்படவேண்டும். (உபா.22:13,21)

**(ஔ) கர்ப்பதடை மற்றும் கருச்சிதைவு :** நாம் பலுகி பெருகவே ஆசீர்வதிக்கப்பட்டுள்ளோம். (ஆதி1:20) தேவனுடைய பிள்ளைகள் மத்தியில் கர்ப்பம் விழுதல் இல்லை. ஆண்களிலும், பெண்களிலும் மலடு இருப்பது இல்லை. (யாத்.23:26, உபா.7:14, சங்.113:9) கருச்சிதைவு : பிறக்க இருக்கும் ஒரு சிசுவை கொலை செய்தல் ஆகும். கர்ப்பதடை மற்றும் கருச்சிதைவு போன்றவைகள் வேதவாக்கியங்களில் எங்கும் கிடையாது. இது சாத்தானின் ஏதேனில் மாத்திரம் உண்டு. எப்பொழுதுமே தேவனுடைய சித்தத்தை / பிரமாணத்தை சீர்குலைப்பது தான் சாத்தானின் பிரதான பணி. நாம் அவனுடைய திட்டங்களில் பங்கு கொண்டு நம்மை கிறிஸ்தவர்கள், மணவாட்டி என அழைத்துக்கொள்வது தேவதுஷனம். நான் அறிய மணவாட்டி என்று தங்களை அழைத்துக்கொள்ளும் குடும்பங்களில் கருச்சிதைவு, கர்ப்பத்தடை அதிகம் அதிகமாக உண்டு. இவர்களது திருமண வாழ்க்கை நிச்சயமாக கிறிஸ்துவுக்கும் அவருடைய சரீரமாகிய சபைக்கும் உள்ள ஐக்கியத்தை பிரதிபலிக்காது. நிச்சயமாக பிரதிபலிக்காது.

**(க) மனைவியை போஷித்து காப்பாற்றுதல் :** கர்த்தர் தம்முடைய சரீரமாகிய சபையை, தம்மால் ஏற்படுத்தப்பட்ட ஐந்து வகை ஊழியங்களைக் கொண்டு போஷிக்கிறார். (எபே.4:13) அதேபோன்று புருஷனும், தன் சரீரத்தின் ஒரு பாகமாகிய மனைவியை போஷித்து காப்பாற்ற வேண்டும். (எபே.5:29) சரீரத்தின் ஒரு பாகம், சரீரத்தை போஷித்து காப்பாற்ற கூடாது. ஆதலால் தேவவசனம் தூஷிக்கப்படாதபடிக்கு, பாலியஸ்திரீ (Young women) விட்டில் தரித்திருக்க வேண்டும்.(Keepers at Home) தீத்.2:5. Young women என்பது ஒரு திருமணம் ஆன பாலிய ஸ்திரீ. அவள் வீட்டில் தரித்திருக்க வேண்டும். பொது ஸ்தாபன அலுவலகங்களில் தரித்திருக்க கூடாது. இது குறித்து இக்காலத்திற்குரிய செய்தி கூறுகிறதாவது : அவள் சமையல் அறையில் இருக்க வேண்டியவள். அவள் இரட்சிக்கப்பட்டாலொழிய அப்படி செய்யமாட்டாள். (அதாவது ஒரு பெண் இரட்சிக்கப்பட்டவளாய் இருப்பாளாயில் சமையல் அறையில் இருப்பாள், மற்றபடி இருக்கமாட்டாள் என கூறப்பட்டுள்ளது). இப்பொழுது நீங்கள் இதைக்குறித்து அவளிடம் சொல்ல வேண்டிய தேவை இல்லை. அவள் தன் இடத்தை அறிந்துக்கொள்வாள். பரிசுத்த ஆவி உங்களை வழிநடத்துகிறது என்று நினைக்கிறாயா? வசனத்திற்கு முரணான ஒன்றை பரிசுத்த ஆவி என அழைக்காதே. (இன்னும் ஒரு விசை கர்த்தாவே, பக்கம்.38, பத்தி.114, நாள்.20.01.1963) விட்டில் இருந்த ஸ்திரீ கொள்ளைப்பொருளை பங்கிட்டாள். ஆனால் அவள் வீட்டில் எங்கே இருந்தாள்? அடுப்பறையில். (சங்.68:12) அவள் (மனைவி) உங்களை பார்த்து புண்முறுதல் செய்துவிட்டு வேறு ஒருவனுடைய அலுவலகத்திற்கு சென்று வேலை பார்த்து, வீடு திரும்பி வந்து என் கணவனே என்றாள். ஓ! அதில் எனக்கு நம்பிக்கை இல்லை. (அவருடைய வருகையின் அடையாளமாக பிரகாசிக்கும் சிவப்பு விளக்கு. பக்கம்.51, பத்தி.155) அவள் தன் வீட்டில் தரித்திருந்து, தன் பிள்ளைகளை பராமரிக்கும் ஒரு குடும்ப பெண்ணாக இருக்க வேண்டும். (கே.ப.288) நீ உன்னை முற்றிலுமாக இக்காலத்திற்குரிய செய்தியை, வேதவாக்கியங்களை கற்று அறிந்தவன் என்று மார்பு தட்டிக்கொள்கிறாய். செய்தியில் உனக்கு நிகர் யாருமில்லை என பெருமை பாராட்டுகிறாய். ஒவ்வொரு நாளும் உன்னை பற்பல விதத்தில் விளம்பரப்படுத்தி கொண்டிருக்கிறாய். எதற்காக? பெயர், புகழ் மூலம் பணம் கிடைக்காதா என்ற நம்பாசையேயன்றி வேறல்ல உன்னிடத்தில், ஆனால் உன் மனைவியை வேலைக்கு நீ அனுப்புகிறாய், செய்தியின் படி உன்னிடம் பரிசுத்த ஆவி உள்ளதா? என்பதை நீயே உன்னைக்குறித்து சோதித்துக்கொள். சகோதரரே ஊருக்கு உபதேசம் பண்ணுவது எளிது, ஆனால் அதை ஒருவன் தன் வாழ்க்கையில் கடைபிடிப்பது கடினம். ஊழியக்காரன் தன் வாழ்க்கையில் எழுதப்பட்ட நிருபமாக இருக்க வேண்டும். மனைவியானவள் வீட்டில் தரித்திருந்து, பிள்ளைகளை பெற்று தன் குடும்பத்தை கர்த்தருக்கு பயப்படுகிற பயத்தில் நடத்தி பிள்ளைகளை கர்த்தருக்கென்று போதனைகளினாலும், சிட்சைகளினாலும் வளர்க்கிற தாயாக இருக்க வேண்டும். (எபே.4:4) வேதவசனம் தூஷிக்கப்படாதபடிக்கு பாலிய ஸ்திரீகள் (Young Women) தங்கள் புருஷரித்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் என்று கூறப்பட்டிருப்பதால் பாலிய ஸ்திரீ ஒரு திருமணமானவள் என்பதை எடுத்துரைக்கிறது. இதற்கு திருமணம் ஆகாத பெண் விலக்கு. அவள் திருமணம் ஆகும் வரை பணி செய்யலாம் என்பது வேதவாக்கியங்களுக்கடுத்த என் கருத்து. எனக்குள்ளும் தேவனுடைய ஆவி உண்டு என்று எண்ணுகிறேன். நான் கணவன் மனைவி ஓரிரு பிள்ளைகள் உள்ள ஒரு குடும்பத்தை அறிவேன். என்னை பொருத்த அளவில் அங்கே மனைவியின் ஆதிக்கம் தான் உண்டு. புருஷன் நாள் முழுவதும் உழைத்து சம்பாதிக்கிறான். மனைவி அதை எந்தெந்த வகையில் செலவு செய்யலாம் என

திட்டமிடுகிறாள். சற்று ஆடம்பரமான வாழ்க்கை. சாப்பாட்டில் ஆடம்பரம் இல்லை. இதர காரியங்களில் ஆடம்பரம். பேர் கிறிஸ்தவ குடும்பம். ஒழுங்கான ஜெபம் கிடையாது. வேதவாசிப்பு கிடையாது. பிள்ளைகள் எழுந்தவுன் டாப்டாப்பில் அல்லது செல்போனில் தான் முடங்கி கிடக்கிறார்கள். இதை வாசிக்கும்போது அவர்கள் உள்ளத்தில் குத்தப்பட்டு திருந்துவார்கள் என கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன்.

**(கா) கணவனும் மனைவியும் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்திருக்கக்கூடாது.** கணவனோ அல்லது மனைவியோ உபவாசத்திற்கும், ஜெபத்திற்கும் தடையிராதபடிக்கு இருவரும் சிலகாலம் பிரிந்திருக்க வேண்டும் என்று சம்மதித்தாலன்றி ஒருவரைவிட்டு ஒருவர் பிரியக்கூடாது. (1கொரி.7:5) பணம் சம்பாதிப்பதற்காக ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்திருக்க கூடாது. இன்றைய சமுதாயத்தில் பணம் சம்பாதிப்பதற்காக கணவன் மனைவி ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்திருக்கிறார்கள். இவர்கள் இல்லற வாழ்க்கை நிச்சயமாக கிறிஸ்துவுக்கும் அவருடைய சரீரமாகிய சபைக்கும் உள்ள ஐக்கியத்தை பிரதிபலிக்காது. பிரிந்திருந்தால் அவர்கள் ஒரே சரீரமாக இருக்க மாட்டார்கள். பிரிந்திருத்தல் விபசார வாழ்க்கையை ஊக்குவிக்கும். அவன் வேலை செய்யும் இடத்தில் ஒருத்தியுடன் குடும்பம் நடத்துவான். இவள் பக்கத்து வீட்டுக்காரரிடம் மனமகிழ்ச்சியாய் இருப்பாள். இந்த வெட்க கேடு தான் முடிவில் நடக்கும். கணவன் மனைவி மாம்ச இச்சைக்குட்பட்டவர்களே. பகல் வேஷம் போடும் பிஷப்களிடமும், பாஸ்டர்களிடமும் மாம்ச இச்சை இல்லையா? இதை நான் அனுதினமும் தினசரி பத்திரிக்கைகளில் வாசிக்கிறேன். சமீபகாலத்தில் சென்னை வாழ் பாஸ்டர் ஒருவன் தன் சபையில் உள்ள ஒரு பெண்ணை கர்ப்பமாக்கி, காவல் நிலையத்தில் அடிப்பட்டு, அவனுடைய பாஸ்டர் ஊழியம் சீரழிந்ததை சென்னை, நுங்கம்பாக்கம் விசுவாசிகள் அறிவார்கள். இந்த ஊழியக்காரன் ஊழியத்திற்கு தகுதியற்றவன் என நான் பலமுறை மக்களை எச்சரித்தேன். ஆனால் அனைவரும் என்னை அசட்டை பண்ணினார்கள். இவனுடன் ஒரே குட்டையில் ஊறிய மற்றொரு மட்டையும் கோவையில் உண்டு. ஒருகாலத்தில் அவனுடைய அநாகரீக செயல்கள் வெளிப்படுத்தப்பட்டது. ஆண் பெண் பாலியப்பருவம் அடைந்தது முதல் சாகும் வரை மாம்ச இச்சை, கண்களின் இச்சைகள் இருந்து கொண்டுதான் இருக்கும். ஆதலால் கணவன் மனைவி பிரிந்திருக்ககூடாது என தேவனுடைய வார்த்தை கூறுகிறது. கணவன் மனைவி ஒன்றாக இருந்தாலும் கூட மாம்ச இச்சை ஆண் பெண் மத்தியில் காணப்படுவது உண்டு. இந்நாட்களில் ஊழியம் என்றுகூறி உள்நாட்டில், வெளிநாட்டில் பல மாதங்களாக சுற்றித்திரிகிறவர்கள் அனைவரும் யோக்கியமானவர்கள் என்று கூற முடியாது.

**(கி) பெண் தன் தலையை சேலை முந்தானி, கைக்குட்டை போன்றவைகளைக் கொண்டு முக்காடிடக்கூடாது.** அவளது நீண்ட தலைமயிரே அவளுக்கு தலை முக்காடாக கொடுக்கப்பட்டிருக்கிறது. பெண்கள் தங்கள் தலைமயிரை நீளமாக வளர்க்க வேண்டும். எக்காரணம் கொண்டும் அதை கத்தரிக்ககூடாது. அவள் தன் தலைமயிரை கத்தரிப்பது, அவள் தன் தலையை மொட்டையிட்டு கொண்டதற்கு சமானம். ஒரு பெண் தன் தலையை மொட்டையிட்டு கொள்ளுதல் அவளுக்கு வெட்கம். ஆதலால் அவள் தன் தலைமயிரை மொட்டையிடக்கூடாது, கத்தரிக்ககூடாது. மாறாக நீளமாக வளர்க்க வேண்டும். அவளது நீண்ட தலைமயிர் அவளுக்கு தலைமுக்காடாக கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு ஸ்திரீக்கு நீண்ட தலைமயிர் எதற்கு? ஸ்திரீ புருஷனுக்காக சிருஷ்டிக்கப்பட்டவள். அவள் புருஷனுடைய சரீரத்தின் ஒரு பாகம். ஆதால் ஸ்திரீ புருஷனுக்கு எல்லாவற்றிலும் கீழ்படிந்திருக்க வேண்டும். அவனுடைய அதிகாரத்திற்குட்பட்டவளாயிருக்க வேண்டும். இதற்கு வெளிப்புற அடையாளமாக அவள் தன் தலைமயிரே நீளமாக வளர்க்க வேண்டும். அது அவளுடைய தலைமுக்காடு. அது அவளுக்கு மகிமை. மாறாக புருஷன் தன் தலைமயிரை நீளமாக வளர்க்க கூடாது. வளர்ப்பது அவனுக்கு கனவீனம். ஒரு ஸ்திரீ நீண்ட தலைமயிரை உடையவளாக காணப்படாமல், தன் தலைமயிரை கத்தரித்து, மொட்டையிட்டு அவளது தலையை ஏதோ ஒன்றைக்கொண்டு மூடி, மறைத்து ஜெபம் செய்வாளாகில், தீர்க்கதரிசனம் சொல்வாளாகில் அவள் தன் புருஷனை கனவீனப்படுத்துகிறாள். Every women that prayeth or prophesieth with her hair uncovered or prayeth or prophesieth without long hair or with short hair dishonoureth her head that is her husband.

**(கீ) மனைவிக்கு புருஷன் தலை :** சபையானது கிறிஸ்துவுக்கு கீழ்படிந்திருக்கிறது போல, (எபே.5:23,24) மனைவி எல்லா காரியத்திலும் தன் புருஷனுக்கு கீழ்படிந்திருக்க வேண்டும். சபைக்கு கிறிஸ்து தலை, மனைவிக்கு புருஷன் தலை. (1பேது.3:1) Wives subject to their own husband in everything. ஸ்திரீ மனிதனுடன் சமமானவளாக ஆதியில் இருந்தாள். அவள் பாவம் செய்த போது மனிதனுடன் அவளுக்கிருந்த சமநிலையை அவள் இழந்துவிட்டாள். அதாவது அவள் தேவனுடைய வார்த்தையை சாத்தானுடைய உபதேசத்தை கேட்டு மீறின போது (இந்நாட்களில் ஜனங்கள் ஸ்தாபன சபைகோட்பாடுகளையும் மனுஷருடைய கற்பனைகளையும் கேட்டு வேதவாக்கியங்களில் காணப்படும் உபதேசங்களுக்கு மீறுவது போல்) அவள் தன் சமநிலையை இழந்து மனிதனுடைய ஆளுகைக்குட்பட்டாள். (ஆதி.3:16) நமது உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா அவர்களும், அத்துடன் நீதிபதி A.M.கன்வில்கரும் தங்களது தீர்ப்பில் : அரசியல் சாசனத்தின் அழகே நானும், நீயும் சமத்துவம் என்பதில் அடங்கியிருக்கிறது. பெண்களை சமமாக நடத்தாவிட்டால், அது அரசியல் சாசனத்தின் கடும் கோபத்திற்கு ஆளாக்கும். அரசியல் சாசனத்தின் முக்கிய அம்சம் சமத்துவம் தான். பெண்களை சமமாக நடத்தாத எந்த சட்டப்பிரிவும் அரசியல் சாசனத்திற்கு எதிரானதுதான், கணவன் என்பவன் மனைவியின் எஜமான் அல்ல என்று தீர்ப்பு கூறியுள்ளார்கள். இந்த தீர்ப்பை நாம் வேதவாக்கியங்களோடு ஆராய்ந்து பார்த்தால் :

(அ) புருஷனானவன் தேவனுடைய சாயலும், மகிமையுமாய் இருக்கிறான். ஆனால் ஸ்திரீயோ புருஷனுடைய மகிமையாயிருக்கிறாள்.

(ஆ) புருஷன் ஸ்திரீயிலிருந்து தோன்றியவன் அல்ல. மாறாக ஸ்திரீயே புருஷனிலிருந்து தோன்றினாள்.

(இ) புருஷன் ஸ்திரீக்காக சிருஷ்டிக்கப்பட்டவன் அல்ல. மாறாக ஸ்திரீயே புருஷனுக்காக சிருஷ்டிக்கப்பட்டவள்.

இதுகுறித்து நீங்கள் 1கொரி.11:7-9 வசனங்களில் தியானிக்கலாம். மேலும் எபே.5 அதியையும் தியானிக்கலாம். இங்கு மனைவிகளே, கர்த்தருக்கு கீழ்படிகிறது போல உங்கள் சொந்த புருஷருக்கு கீழ்படியுங்கள். கிறிஸ்து சபைக்கு தலையாய் இருக்கிறது போல, புருஷனும் மனைவிக்கு தலையாய் இருக்கிறான். புருஷன் மனைவிக்கு தலை என்றும், மனைவி புருஷனுக்கு கீழ்படிந்திருக்க வேண்டும் என்று வேதவாக்கியங்களில் கூறியிருக்கிறதினால், நமது நீதி அரசர்களின் தீர்ப்பின்படி அங்கு கணவன் மனைவி சமத்துவத்துக்கு இடமேயில்லை. சபையானது கிறிஸ்துவுக்கு கீழ்படிகிறது போல, மனைவிகளும் தங்கள் சொந்த புருஷருக்கு (பாஸ்டர்களுக்கு அல்ல, சபை ஊழியர்களுக்கு அல்ல) எந்த காரியத்திலேயும் / எல்லாவற்றிலும் கீழ்படிந்திருக்க வேண்டும். அதே நேரத்தில் மனைவி புருஷனின் சரீரத்தின் ஒரு பாகம். அவள் அவனுக்கு ஏற்ற துணை. ஆதலால் அவன் அவளிடத்தில் அன்பு கூற வேண்டும். அவள் அவனுடைய சொந்த மாம்சம். ஆதலால் அவள் அவனுக்கு அடிமையில்லை. இந்த இரகசியம் பெரியது. இதனால் தான் சாராய் ஆபிராமை நோக்கி எனக்கு நேரிட்ட அநியாயம் உமது மேல் சுமரும் என்றாள். (ஆதி.16:6)

**33. மேலும் சற்று கவனியுங்கள்:** இந்து தேசம் (India – இந்தியா) முதல் எத்தியோப்பியா தேசம் வரைக்கும் உள்ள 127 நாடுகளையும் அரசாண்டவர் ஆகாஸ்வேரு ராஜா. ராஜா தன்னுடைய சூசான் அரண்மனையில் உள்ள சிங்கார தோட்டத்தின் மண்டபத்தில் விருந்து ஒன்று செய்தான். மகா ரூபவதியாகிய ராஜஸ்திரீயை விருந்திற்கு வந்திருந்த ஜனங்களுக்கும், பிரபுக்களுக்கும் காண்பிக்க விரும்பி, அவளை அழைத்தான். அவள் வர மறுத்தாள். ராஜாவின் கட்டளைக்கு ராஜஸ்திரீயாகிய வஸ்தி கீழ்படியவில்லை. முடிவு : வஸ்தி இனி ராஜாவாகிய ஆகாஸ்வேருக்கு முன்பாக வரக்கூடாது. அவள் தன் ராஜமேன்மையை இழந்தாள். இதின் நிமித்தமாக எந்த புருஷனும் தன் வீட்டிற்கு தானே அதிகாரி. பெரியோர் முதல் சிறியோர் மட்டுள்ள எல்லா ஸ்திரீகளும் தங்கள் புருஷரை கனம் பண்ணவேண்டும். வேதவாக்கியங்களுக்கடுத்த காரியங்கள் இப்படி இருக்கும் பொழுது, எவ்வாறு மனைவி தன் புருஷருடன் சமத்துவம் கொண்டாட முடியும். இதுகுறித்து நீங்கள் எஸ்தர் புத்தகம் முதலாம் அதிகாரத்தை வாசிக்கலாம். ஆக முடிவாக மனைவிக்கு புருஷன் தலை, அதேவேளையில் மனைவி புருஷனுக்கு அடிமை இல்லை. அவள் அவன் சரீரத்தின் ஒரு பாகம். இது பல அவயவங்களைக்கொண்ட சரீரத்திற்கு தலையாக ஒன்று இருப்பதை போன்று.

**34. விபசாரம் - Adultery :** விபசாரம் எபிரேய பாஷையில் நா-அப் (Naaph) என்றும், கிரேக்க மொழியில் மாய்க்கையா (Moicheiai) என்றும், ஆங்கிலத்தில் அடெல்டரி (Adultery) என்றும் அழைக்கப்படுகிறது. விபசாரம் இருதயத்திலிருந்து பிறக்கிறது. (மத்.5:28, மாற்.5:21,22) ஒருவன் தன் விவாக சம்பந்தமான மனைவிக்கு உண்மையும் உத்தமமாயிராமல், தன் சொந்த சரீரமாகிய தன் மனைவிக்கு விரோதமாக மற்றொரு ஸ்திரீயோடு, அல்லது ஒருத்தி தன் விவாக சம்பந்தமுள்ள புருஷனுக்கு உண்மையும் உத்தமமாயிராமல், தன் சொந்த சரீரமாகிய தன் புருஷனுக்கு விரோதமாக மற்றொரு புருஷனோடு கொள்ளும் கூடா ஒழுக்கம், சட்ட விரோதமான, தகாத சரீர உறவு விபசாரம் ஆகும். எசே.16:32. Adultery means a voluntary sexual intercourse between a married person and another not the spouse. ஆக விபசாரம் ஒரு கற்பு நெறிதவறிய செயலாகும். இந்த நெறி தவறிய செயலினால் ஒருவனுடைய, ஒருத்தியினுடைய சரீரத்துக்கு தீங்கு விளைவிக்கப்படுகிறது. எப்படியென்றால் மனுஷன் செய்கிற எந்த பாவமும் சரீரத்துக்கு புறம்பாய் இருக்கும். ஆனால் விபசாரம் செய்கிறவன் தன் சுயசரீரத்துக்கு விரோதமாய் பாவம் செய்கிறான். எபே.5:28 அதாவது புருஷன் தன் சுயசரீரமாகிய தன் மனைவிக்கு விரோதமாகவும், மனைவி தன் சுயசரீரமாகிய தன் புருஷனுக்கு விரோதமாகவும் பாவம் செய்கிறார்கள். ஏனென்றால் கணவனும் மனைவியும் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள். எபே.5:31. ஒருவனுடைய மனைவி பிறர் முகம் பார்த்து தன் புருஷனுக்கு செய்யும் துரோகம் விபசாரம். அது ஒரு அக்கிரமம். (எண்.5:12) ஒரு ஸ்திரீ தன் புருஷனோடேயன்றி அந்நிய புருஷனோடு சேர்வது, தன்னை தீட்டுப்படுத்துவதாகும். (எண்.5:29) திருமணத்திற்கு வாக்கு கொடுத்துவிட்டு பின் அதிலிருந்து மாறுவது


Breach of promise to marry is cheating: court

ஏமாற்று வித்தையாகும் என டெல்லியில் உள்ள மெட்ரோ போலிடிஷியன் மேஜிஸ்ரேட் Ms.காமினி அவர்கள் 04.07.2001 அன்று ஒரு தீர்ப்பு கூறினார்கள். அதாவது ஒரு ஆணோ அல்லது பெண்ணோ திருமணம் ஆகாத நிலையில் தங்களுடைய மாம்ச ஆசை இச்சைகளை நிறைவேற்றியபின், திருமணத்தை நிராகரிப்பது ஏமாற்று வித்தையாகும்( Guilty of Cheating) என தீர்ப்பு கூறியுள்ளார்கள். இது ஒரு நியாயமான வேதவாக்கியங்களுக்கடுத்த தீர்ப்பு. என்று நீ என் மனைவி, நான் உன் கணவன் என்று ஒருவருக்கொருவர் வாக்கு கொடுத்தார்களோ, அன்றே தேவனுடைய பார்வையில் அவர்கள் கணவன் மனைவி ஆகிவிட்டார்கள். பின் அந்த வாக்கை புறக்கணித்து ஒருவரை விட்டு ஒருவர் விலகி, மீண்டும் அவர்கள் மற்றொருவரை திருமணம் செய்தால் அவர்களது வாழ்க்கை விபசார வாழ்க்கையாகும். நான் அறிய ஒரு வீட்டில், ஆண் பெண் திருமணம் நடந்தபின், கலியாண மண்டபத்தில் ஏற்பட்ட விபரீதத்தினால் ஆண் பெண் ஒருவரைவிட்டு ஒருவர் விலக வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்பொழுது தேவன் அவர்களுக்கு உணர்த்தினார். என்று உனக்கு நான், எனக்கு நீ என்ற ஒப்பந்தம் ஏற்பட்டதோ, அன்றே அவர்கள் கணவன் மனைவி ஆகிவிட்டார்கள். இனி விவாகரத்து ஏற்படுமாயின், அவர்கள் மீண்டும் மற்றொருவரை விவாகம் செய்யமுடியாது. விவாகம் பண்ணினால் அது விபசார வாழ்க்கையாகும் என்பதை உணர்ந்த மணமகன் வீட்டார், தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிந்து அந்த பெண்ணை ஏற்றுக்கொண்டார்கள். தேவனுடைய கற்பனைகளில் ஒன்று விபசாரம் செய்யாதிருப்பாயாக. யாத்.20:14. நியாயப்பிரமாணத்தை மீறுவது பாவம். 1யோ.3:4 விசுவாசத்தினாலே வராத யாவும் பாவம். ரோ.14:23 ஆக, தேவனுடைய வார்த்தையின் மேல் உள்ள அவிசுவாசமே

பாவம். தேவனுடைய கற்பனைகளில் சில கொலை செய்யாதிருப்பாயாக. விபசாரம் செய்யாதிருப்பாயாக, களவுசெய்யாதிருப்பாயாக. யாத்.20:13-15. ஒருவன் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்தால் கொலை, விபசாரம், களவு செய்யமாட்டான். தேவனுடைய வார்த்தை மீது விசுவாசம் இல்லாததினால், அந்த அவிசுவாசி கொலை, விபசாரம், களவு செய்கிறான். ஆக கொலை, விபசாரம், களவு இவைகள் யாவும் பாவத்தில் தன்மைகளே. (Attributes of sin) இரு அங்கிகள் மாத்திரமே உண்டு. ஒன்று விசுவாசம் மற்றொன்று அவிசுவாசம். இந்த இரண்டில் ஒன்று மாத்திரமே உங்கள் மேல் அதிகாரம் செலுத்த முடியும். இரண்டும் உங்கள் மேல் அதிகாரம் செலுத்த முடியாது. விசுவாசம் இருக்கும் இடத்தில் அவிசுவாசத்துக்கு இடமே இல்லை. அவ்வாறாகவே அவிசுவாசம் உள்ள இடத்தில் விசுவாசத்துக்கு இடமே இல்லை. ஆதியிலே வார்த்தை இருந்தது அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது. தேவன் உங்களுக்குள் வாசம் செய்யும் போது, தேவனுடைய வார்த்தை உங்களுக்குள் வாசம் செய்கிறது. அப்பொழுது நீங்கள் தேவனுடைய வார்த்தை ஒவ்வொன்றுக்கும்**ஆமென்** என்று கூறுகிறீர்கள். அது உங்களுக்குள் தேவன் வாசம் செய்வதை காட்டுகிறது. அப்பொழுது தேவனுடைய வார்த்தை மீது உங்களில் அவிசுவாசத்துக்கு இடமே இல்லை. உள்ளத்திலே புதிதான ஆவியை உடையவன் தேவனுடைய சாயலாய் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொண்டவன். ஆதலால் அங்கு அவிசுவாசத்துக்கு இடமில்லை. அங்கு மாம்சத்தின் கிரியைகளுக்கு இடமில்லை. அவன் ஆவிக்குரியவனானதால் அங்கு ஆவியின் கனிகள், கிரியைகள் காணப்படும். ஒருவன் ஆவியில் மறுபிறப்பு அடையாததால் தான் அவனை அவிசுவாசம், அதன் கிரியைகள் மேற்கொள்ளுகிறது.

35. இந்த அண்டசராசரத்தில் இரு வல்லமைகள் உண்டு. ஒன்று தேவனுடைய வல்லமை (God’s power) மற்றொன்று பிசாசினுடைய வல்லமை (Satan’s Power) தேவனுடைய வல்லமை – ஜீவனின் வல்லமை (Power of Life) அது ஜீவன். பிசாசின் வல்லமை (Power of Death) அது மரணம். மரணம் என்பது ஜீவன் தாறுமாறாக்கப்படுவதாகும். என்னை கண்டடைகிறவன் ஜீவனை கண்டடைகிறான் என்னை வெறுக்கிறவர்கள் யாவரும் மரணத்தை விரும்புகிறார்கள். நீதி 8:35,36. இந்த உலகத்தில் உள்ள அனைத்து செயல்களும் தேவனுடைய வல்லமை அல்லது பிசாசினுடைய வல்லமைக்கு உட்பட்டது, ஆதிக்கத்துக்குட்பட்டது. பிசாசு பெற்ற வல்லமை என்ன? அது தாறுமாறாக்கப்பட்ட தேவனுடைய வல்லமை ஆகும். (Perverted powers of God) தேவனில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ்செய்கிறதில்லை. பாவம் செய்கிற எவனும் தேவனைக் காணவுமில்லை, தேவனை அறியவுமில்லை. பாவம் செய்கிறவன் பிசாசினால் உண்டாயிருக்கிறான். ஏனென்றால் பிசாசானவன் ஆதிமுதல் பாவம் செய்கிறான். தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்யான், ஏனென்றால் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது. அவன் தேவனால் பிறந்தபடியால் பாவம் செய்ய மாட்டான். இதினாலே தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும் பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும் வெளிப்படும். (1யோ.3:4-11). திரித்துவ ஸ்தாபன சபை மக்கள் யாவரும் பிசாசுக்கு அடிமைகளாயிருக்கிறார்கள் என்பது ஏழாம் சபைக்கால செய்தியில் எனக்கு கிடைத்த வெளிப்பாடு. தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார். அவனை தேவசாயலாகவே சிருஷ்டித்தார். ஆதி.1:27. இவ்வாறாக தேவன் மனுஷனை சிருஷ்டித்தப்போது அவனை மரிப்பதற்காக சிருஷ்டிக்கவில்லை. அவன் நித்தியமாக தன்னைப்போல் ஜீவித்திருக்கவே சிருஷ்டித்தார். ஆனால் அது சாத்தானால் தாறுமாறாக்கப்பட்டு மரணத்தைக் கொண்டு வந்தது.

**36. விபசாரம் சர்ப்பத்தின் வித்து:** தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின் சகல காட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. ஆதி.3:1. இந்த காட்டு ஜீவன் தேவனால் சபிக்கப்பட்ட பின்பு தான் சர்ப்பமானது. ஆதி.3:14. மனிதனைப்போல் நிமிர்ந்து நடந்து சென்ற இந்த காட்டு ஜீவன், சபிக்கப்பட்ட பின்பு தான் ஊர்ந்து செல்லும் சர்ப்பமானது. மனிதனைப்போல் நிமிர்ந்து நடந்து சென்ற, மனுஷனுடைய சுபாவத்துக்கு ஒத்ததாயிருந்த இந்த காட்டு ஜீவனின் தந்திரத்தினால் தான் ஏவாள் வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்குட்பட்டாள் (1தீமோ.2:14). இந்தக் காட்டு ஜீவன் மனித குரங்குக்கும், மனுஷனுக்கும் இடைய உள்ள ஒரு உருவத்தைப் பெற்று, மனுஷனைப்போன்று நிமிர்ந்து நடக்கும் ஜீவனாய் இருந்தது. இதனுடைய சுபாவம் மனுஷனுடைய சுபாவத்துக்கு இணையாகவே இருந்தது. இதினுடைய உடலமைப்பு, உருவமைப்பு அனைத்தும் மனுஷனோடு ஒற்றுமையுடையதாகவே இருந்தது. இது ஏவாளிடம் சென்று கண்களின் இச்சையையும், மாம்சத்தின் இச்சையையும் தூண்டி அவளை வஞ்சித்தது. (2கொரி.11:3) மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும் நம்முடைய பிதாவினால் உண்டானவைகள் அல்ல.(1யோ.2:16).

**37. ஏதேனில் ஏவாள் வஞ்சிக்கப்பட்டாள்:** வஞ்சிக்கப்படுதல் என்பது ஒரு நபர் மனப்பூர்வமாகச் செய்யும் செயல் ஆகாது. ஆதியில் ஏதேன் தோட்டத்தில் சாத்தானால் ஏவாள் வஞ்சிக்கப்பட்டு, அவனால் கற்பழிக்கப்பட்டாள் அதினால் ஏவாள் கர்பிணியாகி, அதன் மூலமாக சாத்தானின் வித்து ஆதி.3:15, ஸ்திரீயின் வயிற்றில் உருவெடுத்து, வளர்ந்து உலகத்தில் பிரவேசித்து. ஆக விபசாரத்தின் ஆரம்பமே ஏதேன் தோட்டத்தில் தான் உண்டானது. ஒரு மிருகத்தின் விந்துவினால் ஒரு ஸ்திரீ கருத்தரிக்கவே முடியாது. இது நூற்றுக்குநூறு சதவீதம் உண்மை. ஆனால் இது ஏதேன் தோட்டத்தில் சாத்தியமாயிற்று. சாத்தியமாகாது சாத்தியமாயிற்று. ஏனென்றால் தேவனே அதை அனுமதித்தார். தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. சாத்தானின் வித்து இந்த உலகத்தில் பிரவேசிக்க இது ஒன்றே வழி. ஆதலால் இது தேவனுடைய திட்டமாயிருந்தது. ஏதேனில் முதல் விபசாரம்: சாத்தான் மனிதகுரங்கிற்கும், மனுஷனுக்கும் இடையே வேறு ஒரு இரத்தம் இருந்ததையும், அந்த இரத்தம் தான் மனுஷ இரத்தத்துடன் கலக்கும் என்பதையும் அறிந்திருந்தான். இரகசியமானது சாத்தானுக்கு மறைபொருள் அல்ல. எசே.28:3. தேவனே இந்த

ஜீவனை சிருஷ்டித்தார். ஏனென்றால் சாத்தானின் வித்து இந்த பூமியில் பிரவேசிக்க அது ஒன்றே வழி. ஆதலால் தான் சாத்தான் ஏதேன் தோட்டத்தில் வேறு எந்த மிருகத்தோடும் இடைபடாது இந்த காட்டு ஜீவனோடு மட்டும் இடைபட்டு, தன் வித்தை இந்த உலகத்தில் பிரவேசிக்கச்செய்தான். இந்தக் காட்டு ஜீவன் தான் மனுஷக்குரங்கிற்கும், மனுஷனுக்கும் இடையே இருந்ததும், இப்பொழுது இல்லாமற்போனதுமான இணைப்பு. சாத்தானின் வித்து இந்த உலகத்தில் பிரவேசிக்க ஏவாளின் கர்ப்பபை அதற்கு இடம் கொடுத்தவுடன் தேவன் அந்த இணைப்பை துண்டிக்க, அந்தக் காட்டு ஜீவனை சபிக்க, அது முற்றிலுமாக மாறின ஒரு உருவமைப்பைப் பெற்றது. ஆக இங்கு சாத்தான், ஆதாமின் மனைவியாகிய ஏவாளிடத்தில் பிரவேசித்து தனது சந்ததியை இந்த உலகத்தில் பிரவேசிக்கச்செய்தான். ஆக முதல் விபசாரம் ஏதேன் தோட்டத்தில் நடந்தது. பாருங்கள் ஏவாளின் முதல் பிள்ளை காயின் பொல்லாங்கானால் உண்டானவன். அவன் கொலைபாதகன். அவன் கிரியைகள் யாவும் பொல்லாததாகவே இருந்தது. (1யோ.3:12). விபசாரம் மாம்சத்தின் கிரியைகளில் ஒன்று. (கலா.5:19) ஒருவனுடைய கண்கள் விபசார மயக்கத்தினால் நிறைந்திருக்கிறது. (2பேது.2:14) ஒருவனுடைய இருதயம் விபசாரத்தின் ஊற்று. விபசாரம் ஒருவனுடைய இருதயத்தில் இருந்து புறப்பட்டுவருகிறது. பொல்லாப்பானதாகிய இது ஒருவனுடைய உள்ளத்தில் இருந்து புறப்பட்டு அவனை தீட்டுப்படுத்துகிறது. (மத்.5:28) (மாற்.7:21-23) ஆக விபசாரத்தில் கண்களின் இச்சையும், மாம்சத்தின் இச்சையும் அடங்கியுள்ளது. இவைகள் உலகத்தினால் உண்டானவைகள். இவைகள் பிதாவினால் உண்டானவைகள் அல்ல. (1யோ.2:16). மனுஷன் தேவனுடைய ஆலயமாகிய தன் சரீரத்திற்கு தீங்கு விளைவிக்கிறான். (1கொரி.6:18,20) லவோதிக்கேயா சபை தூதனும், தீர்க்கதரிசியுமாகிய சகோ.வில்லியம் மாரியன் பிரன்காம் தன்னுடைய கேள்வி பதில்.308ல் விபசாரம் தேவனால் முன் தெரிந்துகொள்ளப்பட்ட வித்து என தன்னால் நம்பமுடியாது என கூறுகிறார். And I can't believe that adultery was a predestinated seed. ஸ்திரீயுடனே விபசாரம் பண்ணுகிறவன் மதிகெட்டவன். அப்படி செய்கிறவன் தன் ஆத்துமாவை கெடுத்துப்போடுகிறான். (நீதி.6:32) அவன் தன் சரீரத்துக்கு தீங்கு விளைவிக்கிறான். (1கொரி.3:16,17) அநீதியெல்லாம் பாவம். (1யோ.5:17) நீதியின் செயல் விவாகமஞ்சம். அதின் அநீதியின் செயல் விபசாரம். நமது உச்ச நீதிமன்றம் நீதியின் செயலை அநீதியாக பாவித்து, அநீதியின் செயலை நீதியின் செயலாக மாற்றியுள்ளது. பிறனுடைய மனைவியை இச்சியாதே. (யாத்.20:17, உபா.5:21) பிறனுடைய மனைவியிடத்தில் பிரவேசிக்கிறவன், அவளை தொடுகிறவன் ஆக்கினைக்குத் தப்பான். (நீதி.6:29) அவன் வாதையையும் இலட்சையையும் அடைவான். அவன் நிந்தை ஒழியாது. (நீதி.6:33) ஒருவன் பிறனுடைய மனைவியோடே விபசாரம் செய்தால், அந்த விபசாரக்காரனும், அந்த விபசாரக்காரியும் கொலை செய்யப்பட வேண்டும். (லேவி.20:10) விபசாரக்காரன் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை. (1கொரி.6:9,10)

38. ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருயத்தில் அவளோடே விபசாரம் செய்ததாயிற்று. (மத்.5:28) இருதயத்தில் இருந்துதான் விபசாரம் ஊற்றெடுக்கிறது, புறப்பட்டு வருகிறது. (மத்.15:19) ஒரு பெண்ணை, ஒருவன் பார்த்தவுடன் அவனின் பால் உணர்வைத் தூண்டக்கூடிய அளவுக்கு அவள் தன் மயிரை பிண்ணி, பொன் ஆபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்தி, தன்னை புறம்பாக அலங்கரித்து வெளியே செல்லுகிறாள். ஆதலால் ஒரு ஆண் அவளை இச்சையுடன் பார்த்து உணர்ச்சிவசப்படுகிறான். அவ்வாறாகவே பலர் அவளை கண்டவுடன் பால்உணர்ச்சிவசப்படுகின்றனர். ஆக உணர்ச்சிவசப்பட்டு அவளைப் பார்க்கும் ஒவ்வொரு ஆணும் தங்கள் இருதயத்தில் அவளோடே விபசாரம் செய்கிறார்கள். ஆம், ஒரே நாளில் அவள் பல நூற்றுக்கணக்கானவரோடு இருதயத்தில் விபசாரம் செய்கிறாள். அப்படியானால் இந்த விபசாரக்குற்றத்திற்கு யார் காரணம்? யேசபேலை போன்று உன் கண்களுக்கு மையிட்டு, உன் தலையை சிங்காரித்து, அதில் ஒரு கூடை பூச்சூடி, கட்டை குட்டை உடல் இறுக்க ஆடையுடன் நீ உல்லாசமாக பவனி வந்து அநேகரை நீ வசீகரிப்பதினால் நீயே அந்த விபசாரக் குற்றத்திற்கு காரணம், ஆதலால் நீயே குற்றவாளி. நீ உன்னை பிறர் உள்ளத்தில் இச்சை உருவாக்கும்படி காண்பித்ததினால் நீயே அந்தக் குற்றவாளி. பெண்ணே நீயே அந்த விபசாரத்திற்கு குற்றவாளி. யேசபேலைப் போன்று வெளிப்புற அலங்காரத்துடன் வெளியே செல்லும் பெண்கள், நாங்கள் எங்கள் கணவனுக்கு உண்மையும், உத்தமுமாய் இருக்கிறோம், நாங்கள் பேதைகள், மாசற்றவர்கள் எனக் கூறலாம். உண்மையாகவே நீங்கள் உங்கள் கணவனுக்கு உண்மையும், உத்தமுமான மனைவிதான். அதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் அதே வேளையில் நீ உன் அலங்காரத்தினால் ஒரு பாவி அவன் தன் இருதயத்தில் உன்னோடு உபசாரம் செய்ய இடம் கொடுக்கிறாயே? அவன் தன் இருதயத்தில் உன்னோடு விபசாரம் செய்வதற்கு யார் காரணம்? யார் குற்றவாளி? நீதானே! நீதானே!! ஏனென்றால் அவ்வாறாக நீதானே உன்னை காண்பித்தாய். அவன் மட்டுமல்ல, உன்னை பல நூற்றுக்கணக்கான பாவிகள் கண்டு, உன் அழகில், உன் இறுக்கமான லெக்ஹின்ஸ் ஆடை அலங்காரத்தில் உன்னை இச்சித்து, தங்கள் இருதயத்தில் உன்னோடு விபசாரம் செய்தார்கள். நியாயதீர்ப்பின் நாளில் அந்த பாவி தன் விபசார குற்றத்திற்காக பதில் கூறும் பொழுது அவன் யாரை குற்றப்படுத்துவான்? உன்னைத்தானே! நீயே அந்த விபசார குற்றத்திற்கு காரணம் என்பான். அது தான் உண்மை, சத்தியம். நீ மறுத்து வாதாடமுடியாது.

39. புறம்பான அலங்கரிப்பு கிறிஸ்தவ பெண்களுக்கு அலங்காரம் இல்லை. இது வீண் அழகு. (எரே.4:30) இதை அவர்கள் அறியாதிருக்கிறார்கள். அவர்களுடைய போதகர் இது குறித்து அவர்களுக்கு போதிப்பதில்லை. ஆக அவள் உடலோடு ஒட்டும் லெக்கின்ஸ் ஆடைகளை அணிந்து, தனது சரீரகட்டை காட்டுவது, முட்டுக்குமேல் இடுப்பு வரை குட்டையான இறுக்கமான ஆடைகளை அணிந்து தன்னை அலங்கரித்து, அது நாகரீகம், பண்பாடு, தனக்கு கௌரவம், தனக்கு மேன்மை என்றெல்லாம் கருதுகிறாள். ஆனால் உண்மையிலே அவள் பிசாசின் கையில் ஒரு கருவியாக இருக்கிறாள். பிசாசு ஒருவனுடைய உள்ளத்தில் கண்களின் இச்சையையும், மாம்சத்தின் இச்சையையும்

உருவாக்க அவளை ஒரு கருவியாக உபயோகிக்கிறான். இதை நமது பெண்கள் என்றுதான் தங்கள் உள்ளத்தில் உணர்வார்களோ? கள்ள, கபடமுள்ள வேலையாட்களை அடையாளம் கண்டுகொள்ளும்வரை அவர்கள் உணரமாட்டார்கள். ஏனென்றால் சபை போதகர்கள்தானே அவர்களை அந்த நிலைக்கு கொண்டு வந்து விட்டார்கள். சபையில் சரியான போதனை இல்லை. போதகர் கடிந்து கண்டனம் பண்ணி புத்தி சொல்வது இல்லை. ஏனென்றால் அவன் கூலிக்காக மாறடிக்கிறவனாக இருக்கின்றான். உறுதியில்லாத ஆத்துமாக்களை தந்திரமாய்ப்பிடித்து, தங்கள் வஞ்சனைகளில் உல்லாசமாய் வாழ்கிறார்கள். ஆதலால் அவன் தன் சபையில் தவறுகளை கண்டு கொள்வதுமில்லை, அதை கண்டிப்பதுமில்லை. நீ எக்கேடும் கெட்டுப்போ எனக்கு காணிக்கை தசமபாகம் ஒழுங்காக வந்தால் சரி, இதில் தான் உங்கள் பாஸ்டர் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். நான் என் வாலிப பருவத்தில் சிகரெட் புகைத்தேன். AG சபையில் பாஸ்டர் பிரசங்கம் செய்வார். அந்த வேளையில் நான் வெளியே சென்று சிகரெட் புகைத்துவிட்டு, திரும்ப சபைக்குள் வருவேன். என்னுடைய தவறான பழக்கவழக்கங்கள் பாஸ்டருக்கு நன்கு தெரியும். அவன் என்னை கண்டிக்க முடியவில்லை. ஏனென்றால் அவருடைய நோக்கம் எனது காணிக்கை மீதுதான். என்னை திருத்த அவர் என்றுமே முயற்சிக்கவில்லை. என் தேவனே என்னை காலப்போக்கில் திருத்தினார், அழைத்தார், பயன்படுத்தி வருகிறார். அல்லேலூயா! தேவனுக்கே மகிமை!

40. அவர்கள் தங்கள் கணவனுக்கு உண்மையாயிருக்கலாம். ஆனால் நியாயதீர்ப்பு நாளில் நூற்றுக்கணக்கான ஆண்களுடன் அவள் விபசாரம் செய்த குற்றத்திற்காக பதில் சொல்லியாக வேண்டும். அவர்கள் மேல் ஒரு ஆவி தங்கி இருக்கிறது. அவர்கள் அதை அறியாமல் இருக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் நிர்வாணியும் குருடருமாய் இருப்பதை அறியாமல் இருக்கிறார்கள். சுத்தம் என்பது என்னவென்று பெண்கள் அறியாமல் இருக்கிறார்கள். பெண்கள் அவலட்சனமான, இறுக்கமான, பகட்டான, மெல்லிய ஆடைகளை அணிகிறார்கள். தங்கள் அந்தரங்க அவயவங்களை வெளியே மறைமுகமாக காண்பிக்கிறார்கள். இதனால் ஆண்கள் அவர்களை பார்த்து இச்சிக்கிறார்கள். இது தான் நாகரீகம் என்று அவர்கள் கருதுகிறார்கள். நீ சரீரபிரகாரமாக ஒன்றும் செய்யாதிருந்தும், சகோதரியே, நீ பிசாசின் கையில் ஒரு கருவியாய் இருக்கிறாய். நியாயத்தீர்ப்பின் நாளில் நீ விபசார பாவத்திற்கு பதில் சொல்ல வேண்டும். இதை உணர்ந்து கொள். இது **கர்த்தர் உரைக்கிறதாவது** என்று தீர்க்கத்தரிசி கூறுகிறார். (**ஒரு உண்மையான தீர்க்கத்தரிசியின் பாதை** பக்கம் 44, பத்தி 3) இந்த செய்தியில் **கர்த்தர் உரைக்கிறதாவது** என்ற வார்த்தை தமிழ் மொழி பெயர்ப்பில் காணப்படவில்லை. நான் பல முறை உங்களுக்கு எழுதியபடி சாத்தானின் பிடியில் இருந்து இந்த செய்திமொழிப்பெயர்ப்பு இயங்கி வருகிறது. இவர்கள் செய்தியை தாறுமாறாக்கி வருகிறார்கள். செய்தியை கூட்டியும், குறைத்தும் மொழி பெயர்த்து வருகிறார்கள். நாம் இதன் தமிழ் மொழி பெயர்ப்பை முற்றிலுமாக நம்ப முடியவில்லை. நானும் இவர்களை குறித்து கண்டிக்காத செய்தியே இல்லை. ஆனாலும் இவர்கள் தங்கள் உள்ளத்தில் இதுவரை உணர்ந்ததே இல்லை, உணர்ச்சியற்றவளாகவே இருந்து வருகிறார்கள். நியாயத்தீர்ப்பின் நாளில் இவர்களுக்கு வரும் ஆக்கினையிலிருந்து தப்ப முடியவே முடியாது.

41. விபசாரம் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட வித்து என்று என்னால் நம்பமுடியாது என்று தீர்க்கத்தரிசி **கேள்வி பதில்** 308ல், பத்தி 186ல் கூறுகிறார். அதாவது தன்னுடைய வாழ்க்கையில் விபசாரம் செய்கிறவனை தேவன் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் தெரிந்து கொண்டார் என்று என்னால் நம்ப முடியாது என்று தீர்க்கத்தரிசி கூறுகிறார். கர்த்தர் பூமியை அஸ்திபாரப்படுத்தும் போது, விடியற்காலத்து நட்சத்திரங்கள் அதாவது தேவதூதர்கள் ஏகமாய் பாட, அந்தப் பாட்டில் கெம்பீரித்து மகிழ்ந்த தேவபுத்திரர்கள் அதாவது கிறிஸ்துவுக்குள் உலக தோற்றத்துக்கு முன்னே தெரிந்து கொள்ளப்பட்டவர்களில் ஒருவன் விபசாரக்காரனாக இருப்பான் என்பதை என்னால் நம்பமுடியாது என தீர்க்கத்தரிசி கூறுகிறார். ஆம் பிரியமானவர்களே கிறிஸ்துவுக்குள் உலக தோற்றத்துக்கு முன்னே முன் குறிக்கப்பட்டவர்கள், எடுத்துகொள்ளப்படுதலுக்காக தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் எக்காலத்திலும் விபசாரம் செய்ய முடியாது. ஸ்திரீ கரைப்படுத்தப்படக்கூடாத குணாதிசயங்களை உடையவளாயிருக்கிறாள். அவள் அதில் குறைவு கொண்டு வருவாளாயின் தன் ஜீவகாலமெல்லாம் குறைவுபட்டவளாகவே இருக்கிறாள். எவ்வளவு தான் அவளுக்கு மன்னிக்கப்பட்டாலும், அது நீதியாக்கப்படமுடியாது. கரைப்படுத்தினதற்காக மன்னிக்கப்படலாம், ஆனால் இந்த ஜீவியத்தில் நீதியாக்கப்படமுடியாது. அது எப்பொழுதும் அவளோடு இருக்கும். ஒரு வேளை அவள் மன்னிக்கப்படலாம். ஆனால் நீதியாக்கப்படமுடியாது. (**கிறிஸ்துவின் மணவாட்டியின் காணமுடியாத இணைப்பு,** பக்கம் 21, கடைசி பத்தி). அன்று விபசாரத்திலே கண்டுபிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயை வேதபாரகரும், பரிசேயரும் இயேசுவினிடத்தில் கொண்டு வந்தார்கள். நியாயப்பிரமாணத்தின்படி அவள் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும். ஆனால் இயேசு அவளை நோக்கி : நான் உன்னை ஆக்கினைக்குள்ளாக தீர்க்கிறதில்லை, நீ போ, இனி பாவம் செய்யாதே என்றார். யோ.8:3-11. இவளுடைய பாவங்கள் இவளுக்கு மன்னிக்கப்பட்டது உண்மையே. விபசாரக்காரன் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதில்லை என்று வேதம் உரைக்கிறது. இதைத்தான் என்னால் கூறமுடியும். அதை கூறுவது என்னை கொன்று விடுகிறது என்று எனக்கு தெரியும். ஆனால் வார்த்தையை உரைப்பதை தவிர வேறொன்றையும் என்னால் கூற முடியாது. நான் அதில் நிலைத்திருக்க வேண்டியவனாயிருக்கிறேன் என தீர்க்கத்தரிசி **கேள்வி பதில்** 316, பத்தி 208ல் கூறுகிறார்.

42. பாருங்கள். வேசிப்பிள்ளை (Bastard) கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது. உ.பா.23:2. ஒரு மனுஷனை விவாகம் செய்துள்ள ஸ்திரீ, அந்த ஸ்திரீயை விவாகம் செய்துள்ள ஒரு மனுஷன் தங்கள் பரிசுத்தமான விவாக இணைப்பை மீறி, முறைதவறி பிறந்த குழந்தையை தோன்ற செய்தல், கர்த்தருடைய இரத்தம் சிந்தப்படும் முன், அது பத்து தலைமுறை வரைக்கும் தேவனுடைய ராஜ்யத்தில் சேர்க்கப்படாது. பத்தை முறையே நாற்பது ஆண்டுகளால்

பெருக்கினால் அது நானூறு ஆண்டுகள் ஆகும். பாருங்கள், தேவனுடைய பார்வையில் அந்த அளவுக்கு விபசாரம் மோசமானதாயிருக்கிறது. கொடுமையுள்ளதாக இருக்கிறது.

43. தேவன் தம்முடைய மணவாட்டியை கிறிஸ்துவுக்குள் உலக தோற்றத்துக்கு முன்னே எபே.1:4. கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் எபே.5:27. கற்புள்ள கன்னிகையாக கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்காக 2கொரி.11:2. முன் அறிந்து, முன் குறித்து, அழைத்து, நீதிமானாக்கி மகிமைப்படுத்துகிறார். ரோ.8:29,30. இரட்சிக்கப்பட்டவர்கள் அனைவரும் கிறிஸ்துவினுடைய மணவாட்டி அல்ல. இரட்சிக்கப்பட்டவர்களில் இருந்தே தேவன் தம்முடைய மணவாட்டியை தேர்ந்தெடுக்கிறார். பாருங்கள், யூதாஸ் தேவனால் முன்னறிந்து, முன்குறித்து, அழைக்கப்பட்டு, நீதிமானாக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டான். யோ.17:17. ஆனால் மகிமைப்படுத்தப்படவில்லை. ஒருவன் மகிமைப்படுத்தப்படாவிட்டால் அவருடைய மணவாட்டியாக முடியாது. 1கொரி.6:9-11ல் எடுத்துக் கொள்ளப்படுதலுக்காக தேவனால் முன்தெரிந்துகொள்ளப்பட்ட வித்து உண்டா என்பது குறித்து இங்கு கவனிப்போம். 1கொரி.6:9-11ன் படி இரட்சிக்கப்பட்டவர்களில் (God saved people) சிலர் வேசிமார்க்கத்தார், விக்ரகாராதனைக்காரர், விபசாரக்காரர், சுயபுணர்ச்சிக்காரர், ஆண்புணர்ச்சிக்காரர், திருடர், பொருளாசைக்காரர், வெறியர், உதாசீனர், கொள்ளைக்காரராக இருந்தார்கள், இது உண்மையே. இவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டது (washed) உண்மைதான். இரத்தத்தினாலே, இலவசமாய் தேவனுடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான் ஆக்கப்பட்டதும் (Justified) உண்மைதான், கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டதும் (sanctified) உண்மைதான். இதை யாரும் மறுக்க முடியாது. இவர்கள் இரட்சிக்கப்பட்டவர்கள் என்பதும் உண்மைதான். 2தெச.2:13. ஆனால் இவர்கள் மகிமைப்படுத்தப்பட்டவர்களா என்பது தான் கேள்வி? அது குறித்து இங்கு எதுவும் கூறப்படவில்லை. ஒருவன் கழுவப்பட்டுவிட்டால் மட்டும் போதாது, நீதிமானாக்கப்பட்டுவிட்டால் மட்டும் போதாது. பரிசுத்தமாக்கப்பட்டுவிட்டால் மட்டும் போதாது. பரிசுத்த ஆவியின் அபிஷேகத்துக்குள் வரவேண்டும். மகிமைப்படுத்தப்படவேண்டும். இரட்சிப்பு (Salvation) வேறு, எடுத்துக்கொள்ளப்படுதலுக்காக முன் தெரிந்துகொள்ளுதல் (pre destination) வேறு. இரட்சிக்கப்பட்டவர்கள் அனைவரும் எடுத்துக் கொள்ளப்படுதலுக்கென்று தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் எனக்கூற முடியாது. இங்கு விபசாரம் குறித்து தான், அது முன் தெரிந்துகொள்ளப்பட்ட வித்தாக, எடுத்துக்கொள்ளப்படுதலில் இருக்க முடியாது என்கிறார். மற்றோர்களை குறித்து அவ்வண்ணமாக கூறவில்லை. பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் யாவரும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்துக்குள் வந்தவர்கள் அல்ல. பரிசுத்தமாக்கப்படுதல் (sanctification) இல்லாமல் ஒருவன் நீதிமானாக்கப்படலாம். (Justification) மேலும் பரிசுத்த ஆவியை பெறாமல் (Baptisum of the Holy Ghost) நீங்கள் பரிசுத்தமாக்கப்படலாம். (Santification) நீதிமானாக்கப்படுதல், பரிசுத்தமாக்கப்படுதல், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம், இந்த மூன்றும் மூன்று பிரத்தியேகமான நிலைகள். ஒருவன் இந்த மூன்று நிலைக்குள்ளும் வர வேண்டும். யூதாஸ் முந்திய இரு நிலைக்குள் வந்தான். ஆனால் மூன்றாவது நிலைக்கு அவன் வரவில்லை. 1கொரி.6:9-11ல் நாம் முதல் இரு நிலையில் உள்ளவர்ளை காண்கிறோம். அவர்கள் மூன்றாவது நிலையை அடைந்தார்கள் எனக் கூறப்படவில்லை. எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு மூன்றாவது நிலை மிக மிக அத்தியாவசியம். ஏனென்றால் அது தான் பரிசுத்த ஆவி.

44. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தன் பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்தெழுந்தார் என்று விசுவாசித்து, மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறும்போது ஒருவன் நீதிமானாக்கப் படுகிறான். பாவமன்னிப்புக்கென்று தண்ணீர் ஞானஸ்நானம் குறித்து அந்த அதிக மேதாவி பாஸ்டர் புத்தியீனமாக எழுதியுள்ளதை கவனியுங்கள். ஞானஸ்நானம் பெறுபவர் இயேவின் நாமம் தரித்து, கிறிஸ்துவை தரித்து, ஞானஸ்நானம் எடுக்க வேண்டும். (அப்.2:38) ஞானஸ்நானம் கொடுப்பவர் பிதா குமாரன் பரிசுத்த ஆவி நாமத்தினாலே கொடுக்க வேண்டும். (மத்.28:18-20) பாருங்கள் குருடர்கள், குருடர்களுக்கு வழிக்காட்டுவதை. இதுகுறித்து தேவனுடைய வார்த்தையை கவனியுங்கள். கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் தான் கிறிஸ்துவை தரித்துக்கொண்டவர்கள். (கலா.3:27) இங்கு இயேசுவின் நாமம் தரித்து, இயேவை தரித்து ஞானஸ்நானம் எடுக்க வேண்டும் என கூறப்படவில்லை. கிறிஸ்துவை தரித்துக்கொண்டவர் என்பது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தரித்துக்கொண்டவர் என்பதாகும். (ரோ.13:14) கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தரித்துக்கொண்வர்கள் கிறிஸ்துவுக்குள்ளானவர்கள். கிறிஸ்துவினுடையவர்கள். அவர் இவர்களுக்குள், இவர்கள் அவருக்குள். அவ்வாறாக நீதிமானாக்கப்பட்டவர்கள் சுத்தமாக்கப்பட்டு அதாவது விபசாரத்திலிருந்து சுத்தமாக்கப்பட்டு, வேசித்தனத்திலிருந்து சுத்தமாக்கப்பட்டு, குடியிலிருந்து, சிகரெட் புகைப்பதிலிருந்து சுத்தமாக்கப்பட்டு, சுத்தீகரிக்கப்படுகிறார்கள். இதுதான் பரிசுத்தமாக்கப்படுதல். ஆக 1கொரி.6:9-11ல் கூறப்பட்டவர்கள் இந்த இரு நிலையையும் அடைந்தது உண்மைதான். விபசாரக்காரனும் நீதிமானாக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டான். ஆனால் அவன் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றானா என்பது தான் கேள்வி? இவ்வாறாக நீதிமானாக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டவர்களை இயங்கிவைக்க பரிசுத்த ஆவி கொடுக்கப்படுகிறது. Justification is a work of the Holy Spirit. Santification is a work of the Holy Spirit. But the Baptism is the Holy Spirit. **Jusitification** believing and being baptized. **Santification** means cleaned and set aside for service. That is cleaning the vessel. Cleaned up for cigaretts and filthy women, and all kinds of life like that. **Baptism of Holy Spirit** is filling the vessel which is setaside for service. Don’t let no one tell you that sanctification and the Holy Ghost is the same thing because it is not, certainly is not. You can both be Justified and Santified and still not have the Baptism of the

Holy Ghost. For example Judas Iscariot Justified when he believe on the Lord Jesus Christ and accepted him as his personal savior. He was Santified Jn 17:17. But did not get Holy Spirit.

45. மேலும் கவனியுங்கள். ரோ.8:28-30ன் படி தேவன் ஒருவனை முன்னறிந்து, முன்குறிக்கிறார். பின் அவனை தமது அநாதி தீர்மானத்தின் படி அழைத்து நீதிமானாக்கி, மகிமைப்படுத்துகிறார் (By predestination called, justified and glorified) ஒருவனை நீதிமானாக்கி பரிசுத்தமாக்கினால் மட்டும் போதாது. அவன் மகிமைப்படுத்தப்படவேண்டும். அதாவது பரிசுத்த ஆவியின் அபிஷேகத்துக்குள் வரவேண்டும். எடுத்துக்கொள்ளப்படுதல் குறித்து கவனியுங்கள். பாருங்கள்: நல்ல மனிதர்கள், நேர்மையான மனிதர்கள், பரிசுத்தமான வாழ்க்கை வாழ்கிறவர்கள், தேவனால் இரட்சிக்கப்பட்ட ஜனங்கள் எடுத்துக்கொள்ளப்படுதலில் பங்குபெறுவார்கள் எனக் கூறமுடியாது. மேலும் நீங்கள் இயேசு கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொண்டதினால் எடுத்துக்கொள்ளப்படுதலில் பங்குபெற முடியாது. தெரிந்துகொள்ளப்பட்டவர்களே (Predistinated) எடுத்துக்கொள்ளப்படுதலில் பங்குபெறுவார்கள். Just because that you accepted Christ as personal savior that does not mean that you are going in the rapture. That is for the Elect, that will go in the rapture. Now, that will be a Elect that will go in the rapture. And there will be a group of people that is Good. Upright, Holy living, God saved people, that will not be in the rapture, and they will come up in the second resurrection. (Q&A 15, Para 51 & 56) ஆதலால் பிரியமானவர்களே 1கொரி.6:9-11ஐக் கொண்டு விபசாரகாரர்கள் எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு முன் தெரிந்துகொள்ளப்பட்ட வித்தாக இருக்க முடியும் என உபதேசிக்கிற பொய்யருடைய மாயத்தினாலே வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து உங்கள் விசுவாசத்தை விட்டு, இக்காலத்திற்குரிய செய்தியை விட்டு விலகிப் போகாதீர்கள். விபசாரம் (Adultery) தேவனால் முன்குறிக்கப்பட்ட வித்து என்று என்னால் நம்ப முடியாது என்று தீர்க்கதரிசி கூறியது பரத்திலிருந்து வந்த ஞானமாய், பாரபட்சமில்லாததாயும், மாயமற்றதாயும் இருக்கிறது. ஆதால் நீங்கள் அதிலே நிலைத்திருங்கள். ஆனால் இதில் பிறருக்கு இடறலாயிராதேயுங்கள். ஒரு ஆணும் பெண்ணும் தங்கள் விருப்பப்படி கட்டித்தழுவி, உதட்டோடு உதடு சேர்த்து முத்தமிடுகிறது மறைவான விபசாரம். எப்படியெனில் ஆண், பெண் சுரப்பிகள் உதடுகளில் உள்ளது. ஆண் சுரப்பியும், பெண் சுரப்பியும் ஒன்று சேரும் போது அது எங்கிருந்த போதிலும் நீங்கள் மறைவான விபசாரத்தில் ஈடுபடுகிறீர்கள். ஒரு ஆண், மற்றொரு ஆணுடன் உதட்டோடு உதடு சேர்த்து முத்தம் செய்வது இல்லை. ஏன்? அவர்களது ஆண் சுரப்பிகள் ஒன்றுக்கொன்று இனம் காணாது. ஆனால் ஒரு ஆண் ஒரு பெண் அவ்வாறாக முத்தமிடும் போது ஆண் பெண் சுரப்பிகள் ஒன்று சேருகின்றன. அது ஒரு மறைவான விபசாரமாகும்.

46. பழைய ஏற்பாடு பிரமாணத்தின் படி நீங்கள் ஒரு பெண்ணை மணந்துகொள்வதாக வாக்கு கொடுத்துவிட்டு மற்றொரு பெண்ணை மணந்து கொண்டால் நீங்கள் விபசாரம் செய்தவர் ஆகும். **கேள்வி பதில்**.313, பத்தி.199. எவனாகிலும் தன் மனைவியைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணினால் அவன் அவளுக்கு விரோதமாய் விபசாரம் செய்கிறவனாய் இருப்பான். மாற்.10:11, லூக்.16:18 Whosoever shall put away his wife, and marry another, committeth adultery againt her. எவனாகிலும் தன் மனைவி வேசித்தனஞ்செய்ததினிமித்தமேயன்றி அவளை தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணினால் அவன் விபசாரக்காரனாயிருப்பான். மத்.19:9. Who show ever shall put away his wife, except it be for fornication, and shall marry another committeth adultery. மனைவியும் தன் புருஷனை தள்ளிவிட்டு வேறொருவனை விவாகம் பண்ணினால், விபசாரம் செய்கிறவளாய் இருப்பாள். மத்.10:12. And if a women shall put away her husband and be married to another she committeth adultery. புருஷனுடைய ஸ்திரீ தன் புருஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணத்தின்படி அவனுடைய நிபந்தனைக்கு உட்பட்டிருக்கிறாள், புருஷன் மரித்தபின்பு புருஷனை பற்றிய பிரமாணத்திலிருந்து விடுதலையாகிறாள். ஆதலால் புருஷன் உயிரோடிருக்கும் பொழுது அவள் வேறொரு மனுஷனை விவாகம் பண்ணினால் விபசாரி எனப்படுவாள். புருஷன் மரித்த பின்பு அவள் தன் புருஷனுடைய பிரமாணத்திலிருந்து விடுதலையானபடியினால் வேறொரு மனுஷனை விவாகம் பண்ணினால் விபசாரியல்ல. ரோ.7:2,3. For the women who hath an husband is bound by the law to her husband as long as he liveth, while her husband liveth, if she be married to another man, she shall be called an adulteress. But if the husband be dead, she is loosed from the law of her husband. If the husband be dead, she is free from the law, so that she is no adulteress though she be married to another man. மேற்கண்ட பிரமாணத்திலிருந்து நாம் கற்றுக்கொண்டது என்ன? ஒரு ஆண் பெண் திருமண நிலையில், மனைவி புருஷனை விட்டு பிரிந்து மற்றொருவரை விவாகம் செய்தால் அவள் விபசாரி எனப்படுவாள். ஏனென்றால் அவளுக்கு உயிரோடிருக்கிற ஒரு புருஷன் உண்டு. அந்த புருஷன் உயிரோடிருக்கும் வரை அவள் மற்றொருவனை எக்காரணம் கொண்டும் திருமணம் செய்யக்கூடாது. அவ்வண்ணமாகவே புருஷனும், தன் மனைவியை தள்ளிவிட்டு மற்றொருத்தியை விவாகம் பண்ணக்கூடாது. விவாகம் பண்ணினால் அவன் விபசாரக்காரன். ஆதலால் அவர்கள் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்தால், ஒருவர் மரணம் அடையும் வரை மற்றொருவரை திருமணம் செய்யக்கூடாது. மனைவியானவள் தன் புருஷனைவிட்டு பிரிந்து போகக்கூடாது. பிரிந்து போனால் அவள் விவாகமில்லாதிருக்கக்கடவள் அல்லது புருஷனோடு ஒப்புரவாக்கடவள். புருஷனும் தன் மனைவியை தள்ளிவிடக்கூடாது. 1கொரி.7:10,11. Let not the wife depart from her husband but and if she depart, let she remain unmarried or be reconciled to her husband and let not the husband put away his wife. ஆகிலும் அவிசுவாசி பிரிந்து போனால் பிரிந்து போகட்டும், இப்படிப்பட்ட விஷயத்தில், சகோதரனாவது சகோதரியாவது அடிமைப்பட்டவர்கள் இல்லை. 1கொரி.7:15. If the unbelieving depart, let him / her depart. A brother or a sister is

not under bondage in such case. திருமணம் ஆனவர்கள் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்தால் இருவரும் மறுமணம் செய்யக்கூடாது. புருஷன் மரிக்கும் வரை மனைவி அடுத்தவனை திருமணம் செய்யக்கூடாது. அப்படியே புருஷன் மறுமணம் செய்யக்கூடாது. அவர்கள் மறுமணம் செய்வார்களாயின் விபசாரகாரனும், விபசாரகாரியுமாய் இருப்பார்கள். **கிறிஸ்தவ விவாகரத்து விவாகத்தை கலைப்பதில்லை. ஏனென்றால் மரணம் ஒருவரை ஒருவர் பிரிக்கும் வரை விவாகசம்பந்தம் உண்டு. விவாக சம்பந்தம் மரணத்தில் மட்டுமே நிறைவு பெறும். ஏனென்றால் விவாக சம்பந்தத்தில் கணவன் மனைவி இருவரும் இருவராயிராமல் ஒரே மாம்சமாய் இருக்கிறார்கள். தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்.**

**47. விபசாரம் இருவகைப்படும்.** ஒன்று இயல்பான மாம்சை இச்சையினால் உண்டாகும் தகாத, கூடாத, தேவனுடைய பிரமாணத்திற்கு விரோதமான ஆண் பெண் சரீர உறவு. இது மாம்சப்பிரகாரமான விபசாரம். இந்த விபசாரமாகிய தகாத உறவு கிரிமினல் குற்றம் அல்ல என்பது உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு. ஆனால் விபசாரத்தில் ஈடுபட்டு, அது கண்டுபிடிக்கப்பட்டால் விவாகரத்து கோர உரிமை உண்டு என்பதும் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு. ஆனால் இந்த இரு தீர்ப்புகளுக்கும் வேதவாக்கியங்களில் எதிர்பைத்தான் நாம் காண்கிறோம். மற்றொன்று ஆவிக்குரிய விபசாரம், இது ஆவிக்குரிய சம்பந்தமானது. ஆவிக்குரிய விபசாரம் என்னவெனில் வேதத்தில் உள்ள எந்த ஒரு வார்த்தையை புறக்கணிக்கவோ அல்லது அதற்கு சொந்த வியாக்கியானத்தைக் கொடுத்தாலோ அது உங்கள் ஆவிக்குரிய கணவனாகிய தேவனை புறக்கணித்து அவருக்கு விரோதமான விபசாரம் செய்வதாகும். தேவனே தம்முடைய வார்த்தையின் வியாக்கியானி. இந்த ஜனங்கள் தங்கள் உதடுகளினால் என்னை கனம் பண்ணுகிறார்கள். அவர்கள் இருதயமோ எனக்கு தூரமாய் விலகி இருக்கிறது. மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாய் போதித்து வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள். தேவனுடைய கட்டளைகளை தள்ளிவிட்டு, மனுஷருடைய பாரம்பரியத்தை கைக்கொள்ளுகிறார்கள். மாற்.7:6-8. ஒன்றை தேவனுடைய வார்த்தையின்படி சரியென்று அறிந்தபிறகு, அதாவது தசமபாகம் கர்த்தருக்குரியது, அதை கர்த்தருக்கு ஒவ்வொரு விசுவாசியும் கொடுக்க வேண்டும் என்று அறிந்த பிறகு அதைக் கொடுக்காமல் இருப்பதும், தசமபாகம் ஐந்து வகை ஊழியங்களுக்கு உரியது என்று அறிந்தபிறகும் அதை ஒரு ஊழியக்காரனே விழுங்குவதும், சத்தமிடுகிற உயிரில்லாத வாத்தியங்களைக் கொண்டு அல்ல, ஆவிக்குரிய நாம் தேவனை ஆவியோடும், உண்மையோடும், பரிசுத்த அலங்காரத்துடனே தொழுது கொள்ள வேண்டும் என்று அறிந்தபிறகும், பொருளாசை ஒரு விக்ரகாராதனை என்று அறிந்தபிறகும் அதை ஓடி நாடுவதும் தேடி ஓடுவதும், ஸ்திரீயின் தலைமுக்காடு அவளது நீண்ட தலைமயிர் என அறிந்த பிறகும் தன் தலையை சேலை முந்தானையினால் மூடுவதும், பெண்கள் தங்கள் தலைமயிரை பின்னி பொன் ஆபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களினால் தங்களை புறம்பாக அலங்கரிக்கக்கூடாது என்று அறிந்த பிறகும் யேசபேலை போன்று அலங்கரிப்பதும், ஆக கற்றுக்கொண்ட சத்தியத்துக்கு மாறாக, விரோதமாக பிசாசின் பொய் சிந்தனையோடு உறவு கொண்டு, அறிந்த சத்தியத்தின் படி நடக்காது, அறிந்த சத்தியத்தை மறுதலித்து, சத்தியத்துக்கு மாறாக நடப்பது ஆவிக்குரிய விபசாரம் (Spiritual Adultery) ஆகும். How Spiritual Adultery is committed? When you thinking better by the word of God, by the intercourse of the mind take in a lie of the devil against Word of God, that is exactly what Eve done. நித்தியவாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவராகிய மகத்துவமுள்ளவரும் உன்னதமுமானவரைவிட்டு ஏனைய விக்கிரக தெய்வங்களை வழிபடுதல் ஆவிக்குரிய விபசாரம் ஆகும். ஏசா.57:3-8, ஏரே.3:8-9. யேகோவாவின் இப்பூமிக்குரிய மணவாட்டி இஸ்ரவேல் ஏசா.2:16-20. ஆனால் அவர்கள் உயரமான சகல மலையின் மேலும், பச்சையான சகல மரத்தின் கீழும் போய் அங்கே வேசித்தனம் பண்ணினார்கள். ஏரே.3:6. இயேசு தம்மிடம் வந்து அடையாளம் தேடிய இஸ்ரவேல் சந்ததியை பொல்லாத விபசார சந்ததி என்று அழைக்கிறார். மத்.12:39. ஆவிக்குரிய சபையே கிறிஸ்துவின் உண்மையான மனைவி.

48. ஏகம் சத் விபரஹ பஹீதா வதந்தி (இறைவன் ஒருவனே: அவன் பல பெயர்களில் அழைக்கப்படுகிறான்) என்று கூறி லஹரி கிருஸ்ணா வந்தே ஜகத்குரும் (லஹரி கிருஸ்ணா ஒருவரே ஜகத்குரு) என்றும் ஸ்ரீகுருதேவ் லஹரி கிருஸ்ணா என்றும் பெயர் சூட்டிக்கொண்ட பாலாசீர்லாறியை மணவாளனாகக் கொண்டு அவரோடு நீ என் மணவாளன் நான் உன் மணவாட்டி என்ற ஒப்பந்தம் செய்தவர்கள் ஆவிக்குரிய விபசாரம் செய்தவர்களே. அவ்வாறாகவே லவோதிக்கேயா சபைத்தூதனை கிறிஸ்து என அழைத்து, அவரை கர்த்தராகிய பிரன்காம் கிறிஸ்து என அறிக்கைசெய்து, நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தராகிய கிறிஸ்து பிரன்காமையே சேவிப்போம் என கோஷமிட்டவர்கள் அனைவரும் ஆவிக்குரிய விபசாரம் செய்தவர்களே. இஸ்ரவேல் தேவனுடைய இப்பூமிக்குரிய மனைவி. அவளை நீ அநேக நேசரோடே வேசித்தனம் பண்ணினாலும் என்னிடத்தில் திரும்பி வா என்று கர்த்தர் கூறுகிறார். எரே.3:1. ஆனால் ஆட்டுக்குட்டியானவரின் மனைவி (சபை) கற்புள்ள கன்னிகை 2கொரி.11:2 புத்தியுள்ள கன்னிகை. மத்.25 அதி. இஸ்ரவேல் தன் கீழ்படியாமையினாலே தள்ளிவிடப்பட்டபோதிலும் அவள் மனம் திரும்பும் பட்சத்தில் கிருபையினால் சேர்த்துக்கொள்ளப்படுகிறாள். ஆனால் சபை அவ்வாறு அல்ல. சபையில், ஒருவன் மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று, பின் கிறிஸ்து அல்லாத மற்றொருவனை கிறிஸ்து என விசுவாசித்து தன் வாயினால் தன் மணவாளன் என அறிக்கை மற்றொருவனை கிறிஸ்து என விசுவாசித்து தன் வாயினால் தன் மணவாளன் என அறிக்கை செய்து, அந்த உபதேசத்தில் நிலைத்திருந்து அதாவது அவனோடு கூடி வாழ்ந்து பின் இவன் என் கணவர் அல்ல என்று கூறி வெளியே வந்த அனைவரும் வஞ்சிக்கப்பட்டவர்களே. தங்கள் கற்பை இழந்தவர்களே, ஆவிக்குரிய விபசாரம் செய்தவர்களே. இவர்கள் எடுத்துக்கொள்ளப்படுதலுக்கென்று முன் தெரிந்துகொள்ளப்பட்ட வித்தாக முடியாது. ஆதலால் தாங்கள் கிறிஸ்துவின் மணவாட்டிகளே எனக் கூறி பிறரை ஏமாற்றும் முன்னால் பாலாசீர்லாறி மணவாட்டி,

கிறிஸ்து பிரன்காம் மணவாட்டி, காக்குவ் பிலிப்பு மணவாட்டிகளை, வேலூர் தாமஸ் மணவாட்டிகளை குறித்து எச்சரிக்கையாயிருங்கள். இவர்களில் சிலர் சபையின் மேய்ப்பர்களாக இருந்துகொண்டு மக்களை ஏமாற்றுகிறார்கள். இன்று இவர்கள் தான் தீர்க்கதரிசியின் செய்திகளை மொழிபெயர்த்து அதை தாறுமாறாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களை நம்பி மோசம் போகாதீர்கள்.

49. உண்மை கிறிஸ்தவன். ஆவிக்குரியவன், மணவாட்டி இப்படியெல்லாம் நீங்கள் உங்களை வர்ணித்துக்கொண்டு, அதே நேரத்தில் ஸ்தாபன சபைகளைப்போன்று உலகப்பிரகாரமாக நடந்து கொண்டு வருகிறீர்கள். இதுவும் ஆவிக்குரிய விபசாரம் ஆகும். கத்தோலிக்க மற்றும் ஸ்தாபன சபைகள் யாவும் தேவனுடைய வார்த்தைக்கு தங்களை அர்ப்பணிக்காது, தங்களது பாரம்பரிய உபதேசங்களில் நிலைத்திருப்பதால் அவைகள் வேசிக்கு தாய் எனவும், வேசிகள் எனவும் அழைக்கப்படுகிறது. வெளி.17:5. ஒருவன் தன்னை இக்காலத்துக்குரிய செய்தியில் இருக்கிறேன் எனக் கூறிக்கொண்டு செய்தியில் இருந்து தனக்கு தேவையானவைகளை எடுத்துக்கொண்டு மற்றதை புறக்கணித்தால், அந்த நபர் தான் இருப்பதாகக் கூறும் கிறிஸ்துவின் சரீரத்துக்கு விரோதமாக விபசாரம் செய்கிறவனாய் இருக்கிறான். அது அந்திக்கிறிஸ்துவின் ஆவி, முத்திரை. ஒரு ஸ்திரீ தன் தலைமயிரை கத்தரித்துக்கொண்டால், அவள் தன் தலையாகிய புருஷனை கனவீனப்படுத்துகிறாள். ஏனென்றால் பெண்களுடைய நீண்ட தலைமயிர் அவள் தன் புருஷனுடைய அதிகாரத்துக்குட்பட்டவள் என்பதற்கு அடையாளம். அவள் தன் தலைமயிரை கத்தரிப்பாளேயானால் அவள் தன் புருஷனின் அதிகாரத்திற்கு உட்பட்டவள் அல்ல என்பதை எடுத்துக்காட்டுகிறாள். அவள் தன் புருஷனுக்கு எல்லாவற்றிலும் கீழ்படிந்து நடக்கவேண்டும். அப்படி கீழ் படிந்து நடக்கும் மனைவியாக இல்லாவிட்டால் தேவனுடைய சித்தத்துக்கு புறம்பானவள். ஆதலால் அவள் புருஷன் அவள் தவறான வாழ்க்கை வாழ்வது போல அவளை தள்ளிவிட அவனுக்கு அதிகாரம் உண்டு. எஸ்.1:22, எபே.5:24, கொலோ3:18.

**50. கிறிஸ்துவுக்குள் உலக தோற்றத்துக்கு முன்னே முன் குறிக்கப்பட்டு எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அவருடைய மணவாட்டி என்னும் ரீதியில் அவருடைய ஆவியினால் கர்ப்பந்தரிக்கப்பட்டிருக்கிறார்கள். இது குறித்து தீர்க்கதரிசி : அவருடைய மணவாட்டி என்னும் ரீதியில் அவருடைய ஆவியினால் நாம் கர்ப்பந்தரிக்கப்பட்டிருக்கிறோம்... உன்னால் விபசாரம் செய்ய முடியாது, ஏனென்றால் நீ ஏற்கெனவே கர்பம் தரித்துவிட்டாய், மகிமை! பிசாசு உன்னை அனுகமுடியாது ஏனென்றால் ஜீவனின் கர்பம் மற்றெல்லாவற்றிற்கும் அடைபட்டுவிட்டது. முன் குறிக்கப்படுதலின் மூலம் நீ ஏற்கனவே அவருடையவராகிவிட்டாய். அந்த வித்து உயிர் பெற்று விட்டது. உலகம் எதுவும் உள்ளே நுழைய முடியாது.... உலக தோற்றத்துக்கு முன்னே அவர் நம்மை நித்திய ஜீவனுக்கு முன் குறித்து விட்டார் எனக் கூறுகிறார். (கிறிஸ்து தேவனுடைய பரமஇரகசியத்தின் வெளிப்படுதலாயிருக்கிறார், பக்கம் 99, கடைசி பத்தி)** பிரியமானவர்களே இதுதான் எடுத்துக்கொள்ளப்படுதலுக்கென்று முன் தெரிந்துகொள்ளுதல். நிச்சயமாக மாம்சத்துக்குரிய, ஆவிக்குரிய விபசாரம் எடுத்துக்கொள்ளப்படுதலுக்கென்று முன் தெரிந்துகொள்ளப்பட்ட வித்தாக இருக்கமுடியாது. ஆதலால் மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே வஞ்சிக்கிற ஆவிக்கு செவிகொடுத்து, ஒருமுறை அந்நிய அக்கினிஸ்தம்பத்தையும், மேகஸ்தம்பத்தையும் உற்பத்தி செய்தவர்களை நம்பி வஞ்சிக்கப்படாதீர்கள். அவர்களின் வஞ்சிக்கிற ஆவியின் உபதேசத்திற்கு செவிகொடுத்து விசுவாசத்தை விட்டு விலகிப்போகாதீர்கள். மனம் அல்லது சிந்தனை ஆவியின் கருப்பையாயிருக்கிறது. ஏவாள் சாத்தானில் பொய்யை விசுவாசித்து, ஆவிக்குரிய உறவானது ஏவாளின் கருப்பையாகிய சிந்தனையில் முதலாவது சம்பவித்தது, பின்பு அது அவளுடைய ஆத்துமாவை கறைப்படுத்தி அங்கே மரணத்தை உண்டாக்கினது. அதன்பிறகுதான் மாம்சப்பிரகாரமான உறவு சாத்தானோடு நடந்தது. இயேசு கிறிஸ்துவின் மணவாட்டி மனிதனால் உண்டாக்கப்பட்ட கொள்கைகளையும், கோட்பாடுகளையும் தேவனுடைய வார்த்தையின் இடத்தை ஆட்கொள்ள விடும்போது அங்கே அவள் விபசாரம் செய்கிறாள். ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரம் செய்தாயிற்று. மத்.5:28. ஏன்? அவன் சிந்தனையில் அதை வளரவிடுகிறான். அதுதான் கருப்பை. அங்கேதான் அது தன் உற்பத்தியைத் தொடங்குகிறது. சாத்தான் அங்கு வந்து தன் வார்த்தையை விதைத்துவிடுகிறான். (உரைக்கப்பட்ட வார்த்தையே மூல வித்து, 2வது பக்கம், பத்தி.37)

**51.** வேதவாக்கியங்களில் சில விபசாரத்திற்கடுத்த சம்பவங்கள் மற்றும் அதன் விளைவுகளை குறித்து காணலாம்.

(அ) லேயாள் யாக்கோபுக்கு பெற்ற குமாரத்தி தீனாள். இவளை சீகேம் என்பவன் கண்டு, அவளை தன் இல்லத்திற்கு கொண்டுபோய், அவளோடே சயனித்து, அவளை தீட்டுப்படுத்தினான். அதன் விளைவு அவளுடைய சகோதரர்கள் சிமியோன், லேவி இருவரும் சேர்ந்து சீகேமை கொன்று போட்டார்கள். (ஆதி.34:1,2,26)

(ஆ) தாவீதின் குமாரன் அம்னோன், தன் சகோதரியாகிய தாமாரை பலவந்தமாய் பிடித்து, அவளோடே சயனித்து அவளை கற்பழித்தான். (2சாமு.13:14) இது ஒரு மதிகேடான செயல். இதை தாமாரின் சகோதரனாகிய அப்சலோம் தன் நெஞ்சில், அவள் கற்பழிக்கப்பட்ட நாள் முதல் வைத்திருந்தான். அதற்கான சூழ்நிலை உருவாக்கி அம்னோனை அப்சலோம் கொன்று போட்டான். (2சாமு.13:29-32)

(இ) விபசாரத்திலே கண்டுபிடிக்கப்பட்ட ஸ்தீரி. இப்படிப்பட்டவர்களை கல்லெறிந்து கொல்ல வேண்டும் என்று மோசே நியாயப்பிரமாணத்தில் கட்டளையிட்டிருந்தான். இயேசு : உங்களில் பாவமில்லாதவன் இவள் மேல் முதலாவது கல்லெறியக்கடவன் என்றார். கேட்ட ஜனங்கள் மனச்சாட்சியில் கடிந்துக்கொள்ளப்பட்டு பெரியோர்

முதல் சிறியோர் வரைக்கும் ஒவ்வொருவராய் போய் விட்டார்கள். இயேசு : நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாக்கத்தீர்க்கிறதில்லை. நீ போ, இனி பாவம் செய்யாதே என்றார். (யோ.8:1-11)

ஈ) சாத்தான், ஏவாள் ஒருவருக்கொருவர் சம்மதத்துடன் சயனித்தார்கள். சாத்தான் ஏவாளை அறிந்தான். பாருங்கள் ஏவாள் . அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியை தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமாயிருக்கிறது என்று கண்டு, அதன் கனியை பறித்து புசித்தாள். தன் புருஷனுக்கும் கொடுத்தாள். அவன் புசித்தான் (ஆதி.3.6) இதில் தேவனுடைய திட்டம் நிறைவேற வேண்டியதா யிருந்தது. சாத்தானுடை வித்து பூமியில் கொண்டுவரப்பட இது ஒன்றே சாத்தியமா யிருந்தது இது பார்வைக்கு விபசாரமாக யிருந்தாலும் இதில் தேவனுடைய நோக்கம் ஒன்று உண்டு. தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தை பார்த்து. உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும், அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன் என்றார் (ஆதி.3.15)

உ) இது போன்று தாவீது, உரியாவின் மனைவியாகிய பத்சேபாளை, அவள் குளிக்கும்போது, தன் அரண்மனை மாடியில் இருந்து கன்டான். அவள் மீது ஆசைவைத்தான். அவளை தன் அரண்மனைக்கு கொண்டுவந்து, அவளோடு சயனித்தான். பிறனுடைய மனைவியோடு சயனித்தான். இங்கு பலத்காரத்துக்கு இடமில்லை. இருவரும் சம்மதத்துடன் பாலியல் உறவு கொண்டார்கள். பிறந்த குழந்தையை கர்த்தர் அடித்தார். அது இறந்தது. இதிலும் தேவனுடைய திட்டம் ஒன்று உண்டு. தாவீது – பத்சேபாள் உறவின் மூலமாகத்தான் சாலொமோன் பிறக்கவேண்டும். மற்றொரு ஸ்திரீ மூலமாகஅல்ல. சாலொமோனே தேவனுடைய ஆலயத்தை கட்டவேண்டும். கர்த்தர் தாவீதுக்கு அநேக மணைவிகளையும், மறுமணையாட்டிகளையும் கொடுத்தார். அவர்கள் மூலமாக அநேக குமாரர்களையும் தந்தருளினார். ஆனால் உரியாவின் மணைவி பத்சேபாள் மூலமாக, கர்த்தருடைய ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தின் மேல் உட்காருகிறதற்கு அவனுடைய எல்லா குமாரர்களிலும் சாலொமோனை மாத்திரம் தெரிந்துகொண்டார். சாலொமோனை எனக்கு குமாரனாகத் தெரிந்துகொண்டேன். நான் அவனுக்கு பிதாவா யிருப்பேன் என்றார் யூதா வம்சத்தில் ஈசாய்யின் குடும்பத்தை தலைமையாக தெரிந்துகொண்டு, அவன் குமாரர்களுக்குள் தாவீதுமேல் பிரியம் வைத்து, அவனை எல்லா இஸ்ரவேலின் மேலும் ராஜாவாக அவனை தெரிந்துகொண்டேன் என்றார் (1 நாளா 28 அதி) இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாற்றில் கூட தாவீது ராஜா உரியாவின் மனைவியாயிருந்தவளிடத்தில் சாலொமோனை பெற்றான் என்று கூறப்பட்டுள்ளது. (மத் 1. 1,6) ஆக பத்சேபாள் வயிற்றிலிருந்துதான் சாலொமோனை தேவன் ஆயத்த படுத்தினார். அப்படியானால் தாவீது பத்சேபாளை முறைப்படி அறிந்து அதன் வாயிலாக சாலொமோன் பிறக்கவேண்டும். இதுவே தேவனுடைய அநாதி தீர்மாணம். ஆக இங்கு நாம் காண்பது ஒரு பக்கம் விபசாரம். மறுப்பக்கம் தேவனுடைய தெரிந்துகொள்ளுதல். இவைகள் யாவும் தேவனால்முன்அறிந்து, முன் குறிக்கப்பட்ட திட்டங்களாயிருக்கிறது. யார் இதை நிதானிக்க முடியும்?

**52. ஆண் பெண் சேர்க்கை மற்றும் இதற்கடுத்த காரியங்கள் குறித்து வேதவாக்கியங்கள் என்ன கூறுகிறது என்பதை லேவியராகமம் மற்றும் உபாகமத்தில் தியானிக்கலாம்.**

(1) ஒருவன் தனக்கு நெருங்கின இனமாகிய ஒருத்தியிடம் சேரக்கூடாது. (லேவி.18:6)

(2) தகப்பனையாவது, தாயையாவது நிர்வாணமாக்கலாகாது. (லேவி.18:7)

(3) தகப்பனுக்காவது தாய்காவது வீட்டிலிருக்கும் புறத்தியானுக்கும் பிறந்த குமாரத்தியை நிர்வாணமாக்கலாகாது. அவள் உன் சகோதரி. (லேவி.18:9)

(4) குமாரனுடைய மகளை குமாரத்தியின் மகளை நிர்வாணமாக்க கூடாது. (லேவி.18:10)

(5) தகப்பனுடைய சகோதரியை நிர்வாணமாக்கலாகாது. (லேவி.18:12)

(6) தாயினுடைய சகோதரியை நிர்வாணமாக்கலாகாது (லேவி.18:13)

(7) தகப்பனுடைய சகோதரன் மனைவியை நிர்வாணமாக்கலாகாது. (லேவி.18:14)

(8) மருமகளை நிர்வாணமாக்கலாகாது (லேவி.18:15)

(9) சகோதரனுடைய மனைவியை நிர்வாணமாக்கலாகாது. (லேவி.18:16)

(10)மனைவி உயிரோடுயிருக்கையில் அவள் சகோதரியை விவாகம் பண்ணகூடாது. அவளை நிர்வாணமாக்கலாகாது. (லேவி.18:18)

(11) பிறனுடைய மனைவியோடே சேர்ந்து, அவளை நிர்வாணமாக்காதே. அவளால் உன்னை தீட்டுப்படுத்தாதே. (லேவி.18:20)

(12)பெண்ணோடு சம்யோகம் பண்ணுகிறது போல ஆணோடு சம்யோகம் பண்ணவேண்டாம். அது அருவருப்பானது. (லேவி.18:22)

(13) மிருகத்தோடு நீ புணர்ச்சி செய்து உன்னை தீட்டுப்படுத்தாதே.(லேவி.18:23)

(14) ஸ்திரீயானவளும் மிருகத்தோடு புணரும் படிக்கு அதற்கு முன்பாக நிற்க கூடாது. (லேவி.18:23)

(15) ஒருவன் பிறனுடைய மனைவியோடே விபசாரம் செய்தால், அந்த விபசாரகாரனும் அந்த விபசாரியும் கொலை செய்யப்படவேண்டும். (லேவி.20:10)

(16)புருஷனுக்கு விவாகம் பண்ணப்பட்ட ஸ்திரீயோடு ஒருவன் சயனித்தால், இருவரும் சாக வேண்டும். (உபா.22:22)

(17)கன்னிகையான பெண் ஒருவனுக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், மற்றொருவன் அவளோடு சயனித்து, அவள் கூக்குரலிடாததினால், அவர்கள் இருவரும் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும். (உபா.22:24)

(18) ஒருவனுக்கு நியமிக்கப்பட்ட பெண்ணை, பலவந்தமாய் பிடித்து, அவளோடு ஒருவன் சயனித்தால், அவன் மாத்திரம் சாககடவன். (உபா.22:25)

(19)நியமிக்கப்படாத கன்னியாஸ்திரீயாகிய ஒரு பெண்ணை ஒருவன் கைப்படித்து அவளோடு சயனித்து, அவன் அவளை கற்பழித்தபடியினால் அவள் அவனுக்கு மனைவியாக வேண்டும். அவன் உயிரோடிருக்குமளவும் அவளை தள்ளிவிடக்கூடாது. (உபா.22:29)

(20) ஒருவன் தன் தகப்பன் மனைவியோடே சயனித்தால் இருவரும் கொலை செய்யப்படவேண்டும். இரத்தப்பழி அவர்கள் மேல். (லேவி.20:1)

(21) மருமகளோடே ஒருவன் சயனித்தால் இருவரும் கொலைசெய்யப்படவேண்டும். இது அருவருப்பான தாறுமாறு. (லேவி.20:12)

(22) பெண்ணோடு சம்யோகம் பண்ணுகிறது போல ஆணோடு சம்யோகம் பண்ணவேண்டாம். அது அருவருப்பானது. இருவரும் கொலைசெய்யப்படவேண்டும். அவர்கள் இரத்தப்பழி அவர்கள் மேல். (லேவி.20:13)
(23) ஒருவன் ஒரு ஸ்திரீயையும் அவள் தாயையும் சேர்ந்தால் அது முறைகேடு. மூவரும் அக்கினியினால் சுட்டெரிக்கப்படவேண்டும். (லேவி.20:14)
(24)மிருகத்தோடு புணர்ந்தால் அவனும் அந்த மிருகமும் கொல்லப்படவேண்டும். (லேவி.20:15)
(25) மிருகத்தோடு புணர்ந்தால் அவளும் அந்த மிருகமும் கொல்லப்பட வேண்டும். (லேவி.20:16)
(26) ஒருவன் தன் சகோதரியின் நிர்வாணத்தையும் அவள் அவனுடைய நிர்வாணத்தையும் பார்த்தால் அது பாதகம். அவர்கள் தங்கள் அக்கிரமத்தை சுமர்க்க வேண்டும். (லேவி.20:17)
(27)தகப்பனுடைய சகோதரி, தாயின் சகோதரியை நிர்வாணமாக்க கூடாது. அவன் தன் நெருங்கிய இனத்தை அவமானமாக்கினான். (லேவி.20:19)
(28)ஒருவன் தன் தகப்பனின் சகோதரனாகிய மனைவியோட சயனித்தால் அவர்கள் தங்கள் பாவத்தை சுமப்பார்கள். சந்தானம் இல்லாமல் சாவார்கள். (லேவி.20:20)
(29) ஒருவன் தன் சகோதரன் மனைவியை விவாகம் பண்ணினால் அது அசுத்தம். அவர்கள் சந்தானம் அற்றவர்களாய் இருப்பார்கள். (லேவி.20:21)
(30) நீ உன்னை தீட்டுப்படுத்துகிறாய் – உன் தேசமும் தீட்டுப்பட்டிருக்கும் (லேவி.18:24)
(31)இதை செய்யும் போது உன் ஆத்துமா ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போகும். (லேவி.18:29)
(32)அருவருப்பான முறைமைகளினால் யாதொன்றை நீ செய்து அவைகளால் உன்னை தீட்டுப்படுத்தாதே. (லேவி.18:30)
(33) தேசம் எங்கும் முறைகேடான பாவம் நிறைந்திருக்கிறது. (லேவி.19:29)
(34)நீங்கள் என்னுடையவர்களாய் இருக்கும்படிக்கு உங்களை மற்ற ஜனங்களை விட்டு பிரித்தேன். (லேவி.20:26)

**கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தை அறிவிப்பதில் : 1. டெலிவிஷன் (தொலைக்காட்சி) என்னும் ஒலி இணைப்புடன் கம்பி மூலமாகவோ, வானொளி அலை மூலமாகவோ காட்டப்படும் காட்சி. 2. வாட்ஸ்ஆப் என்னும் செய்தி பரிமாற்றும் செயலி. 3. யூடியூப் என்னும் இணையவழி இயங்கும் இணையதளம் 4. பேஸ்புக் (முகநூல்) என்னும் இணையவழி சமூக வலையமைப்பு மற்றும் 5. டூவிட்டர் 140 வரியுருக்களாலான குறுகிய செய்திகளை அனுப்பும் ஒரு தொடர்குழு வலையமைப்பு கோப்பு போன்றவைகளின் பங்கு தேவனுடைய வார்த்தைக்கு விரோதமானது.**

53. தேவன், கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கிக்க, அவருக்கென்று ஒரு திட்டத்தை வைத்துள்ளார். ஒருபோதும் அவர் அதிலிருந்து மாறுவது கிடையாது. சுவிசேஷத்தை பிரசங்கிப்பதற்கென ஆதியிலே தேவன் சூரியனையோ, சந்திரனையோ, நட்சத்திரங்களையோ, மற்றும் இதர கிரகங்களையோ, காற்றையோ, தேவதூதர்களையோ, இயந்திரங்களையோ நியமித்திருக்கலாம். ஆனால் அவர் அப்படி ஏற்படுத்தவில்லை. நியமிக்கவும் இல்லை. அதற்கென்று அவர் மனிதனை மாத்திரமே நியமித்தார். அதிலிருந்து அவர் ஒருபோதும் மாறுவது இல்லை. ஏனென்றால் அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். ஆனால் தேவனுடைய இந்த திட்டத்தை முறியடிக்கவே சாத்தான் தொலைக்காட்சி என்ற தொல்லைக்காட்சியையும், இதர வாட்ஸ்ஆப், யூடியூப், பேஸ்புக், டூவிட்டர் போன்ற இணையதளங்களை உபயோகிக்கிறான். நீங்களும் அதில் பங்கு கொள்கிறீர்கள். நீங்கள் செய்யும் இந்த நவீன மாயையான சுவிசேஷம், தேவனுடைய பார்வையில் நலமாக இருக்குமோ என்று உங்களை நீங்களே கீழ்கண்ட எனது நிருபத்திலிருந்து சோதித்து பாருங்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்.

**54. தொலைக்காட்சி :** இதுகுறித்து ஆகஸ்ட் 2000 மற்றும் டிசம்பர் 2000 ஆகிய இரு மாதங்களில் இரு நிருபங்கள் எழுதியுள்ளேன். நான் 2000 ல் எழுதிய நிருபத்தைக்கொண்டு சற்று கூடுதல் தகவல்களை கொடுத்து 2019 ல் எழுதுகிறேன். இதேபோன்று தான் டிவி காலப்போக்கில் சற்று வித்தியாசத்துடன் நம் மத்தியில் லாப்டாப் மற்றும் வாட்ஸ்ஆப், யூடியூப், பேஸ்புக், டுவிட்டர் போன்ற நவீன தொழில்நுட்பங்களை கொண்ட மொபைல் ஆனது. இதுவும் ஒரு சிறிய டிவி தானே. நமக்கு தொலைக்காட்சி ஒரு தொல்லையை கொடுக்கும் காட்சியாகவே இருக்கிறது. தொலைக்காட்சி என்ன? அது ஒரு சின்னதிரையிலான சினிமா தானே? இன்றைய ஊழியர்கள், கர்த்தர் கொடுத்த ஊழியம், கடைசிகால நற்செய்தி ஊழியம் போன்ற போர்வையின் கீழ் மக்களை ஏமாற்றி, நயவசனிப்பினாலும், வஞ்சகத்தினாலும் சேகரிக்கும் காணிக்கை தசமபாகம் மற்றும் நன்கொடை போன்றவைகளை கொண்டு தங்கள் வயிற்றுக்கே ஊழியம் செய்து, தங்கள் வீட்டிற்கு பொல்லாத ஆதாயத்தை தேடிக்கொள்கிறார்கள். தங்கள் சுயவிளம்பரத்திற்காக மேற்கண்ட இணையதளங்களை உபயோகிக்கிறார்கள். ஆனால் இதன் மூலமாக காலத்திற்குரிய செய்தி நாடு முழுவதும் செல்கிறது, ஆயிரக்கணக்கான மக்கள் காண்கிறார்கள். அவர்களுக்காகவே இந்த ஊழியத்தை செய்கிறோம். ஆதலால் நீங்கள் நன்றாக குலுக்கி, அமுக்கி பாத்திரம் நிரம்ப கொடுங்கள், கொடுங்கள் என வஞ்சித்து மக்களை ஏமாற்றி பிழைக்கும் ஒரு நூதன கூட்டமாக இவர்கள் காணப்படுகிறார்கள். இதற்காக சகோ.வில்லியம் மாரியன் பிரன்காம் பெயரை கூறிக்கொண்டு ஒரு கூட்டம் எவர்களை விழுங்கலாம் என்று ஊர்ஊராக சுற்றி திரிகிறது. ஆனால் இதுகுறித்து ஏழாம் சபைக்கால தூதன் கூறுவதாவது : மக்களே பெரும் தொகையான பணத்தை சேகரிக்கும் பொருட்டு வானொளி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கென தங்களை ஈடுபடுத்தி (இந்நாட்களில் வாட்ஸ்ஆப், யூடியூப், பேஸ்புக், டூவிட்டர் போன்றது) கொள்ளுகிறார்கள். நான் கூறுவது முற்றிலும் உண்மை. அது தேவனுக்குரியது அல்ல. இதுகுறித்து இயேசு கிறிஸ்துவை பற்றிய வெளிப்படுத்தல், இரண்டாம்

பாகம், பக்கம்.868, பத்தி.161 யை தியானியுங்கள். தன் வீட்டில் தொலைக்காட்சி பெட்டி வைத்திருக்கும் ஸ்திரீயிடம் இருந்து நாங்கள் வாடகைக்கு இருக்கிறோம். என் வீட்டில் தொலைக்காட்சி பெட்டி வைத்திருக்க எனக்கு பிரியம் இல்லை. ஐயா, அது என் வீட்டில் இருப்பது எனக்கு பிரியம் இல்லை. அந்த பொல்லாத காரியத்தோடு தொடர்பு கொள்ள எனக்கு பிரியமில்லை. செய்தி : மறுரூபப்படுத்த தேவனுடைய வல்லமை. பக்கம்.44, பத்தி.169, நாள்.11-09-1965. எங்களிடத்தில் தொலைக்காட்சி பெட்டி கிடையாது. என் வீட்டில் என்றைக்குமே ஒன்று இராது. நீங்கள் ஒன்றை வைத்துக்கொள்ள விரும்பினால் அது உங்களை பொறுத்தது. அதை வைக்க வேண்டாம் என்று தேவன் என்னிடம் கூறினார். செய்தி : மறுரூபப்படுத்த வல்லமை பக்கம்.66, பத்தி.242, நாள்.31-10-1965. சகோ. பிரன்காமே தொலைக்காட்சி உலகத்திற்கே ஒரு சாபம் என்று நான் நினைக்கிறேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அது மானிட வர்க்கத்திற்கே மிகவும் வெறுக்கப்படத்தக்க ஒன்றாக உள்ளது என்கிறார். செய்தி. பரிசுத்த ஆவியின் பேரில் கே.ப.35, பத்தி.88. நான் தொலைக்காட்சியை விரும்புவது இல்லை. உங்களுக்கு தெரிந்துள்ளபடி அதற்கு நான் விரோதம். செய்தி : அறுப்பின் நேரம் பக்கம்.6, பத்தி.17, நாள்.12-12-1964. சகோ. பிரன்காம் ஊழியகாலத்தில் அமெரிக்காவில் தொலைக்காட்சி உண்டு. ஆனால் கர்த்தர் அதன் வாயிலாக தம்முடைய செய்தியை மக்கள் மத்தியில் எடுத்து செல்லவில்லை. தொலைக்காட்சியில் கிறிஸ்தவ நிகழ்ச்சிகளை பார்க்கிற ஜனங்களை கர்த்தர் தம்முடைய செய்திகளை தொலைக்காட்சியில் கேட்க அனுமதிக்கவில்லை. செய்தியை இதுவரை ஏற்றுக்கொள்ளாத ஜனங்களுக்காகவும் கர்த்தர் அதை அனுமதிக்கவில்லை.

55. அவர், அவரால் அனுப்பப்பட்டவனிடத்தில் சுவிசேஷ பிரசங்கத்தை ஒப்புவித்தபோது, அவன் அதை பிரசங்கிக்க மற்றொரு சாதனத்தை உபயோகிக்க கூடாது. அவனே நேரடியாக மக்கள் மத்தியில் பிரசங்கிக்க வேண்டும். அவன் ஒலிபெருக்கியை (Mike) உபயோகிக்கிறான். இது பிரசங்கிப்பவரின் சத்தத்தை கேட்பவர்கள் நன்கு கேட்கத்தக்கதாக சத்தத்தை கூட்டிக் குறைக்கிறது. தேவன் தம்முடைய சுவிசேஷத்தை எடுத்து செல்ல, தம்முடைய சுயவழியை வைத்திருக்கிறார். நாம் ரோமர்.10:13-17 வசனங்களை தியானிக்கும் போது, சமாதானத்தை கூறி நற்காரியங்களை சுவிசேஷமாய் அறிவிக்க ஒருவன் அனுப்பப்படவேண்டும். கவனியுங்கள் கரங்களில் பரிசுத்த வேதாகமத்தை எடுத்தவன் எல்லாம் அனுப்பப்பட்டவன் அல்ல. ஸ்தாபன சபைகளில் ஊழியனாக இருந்துகொண்டு கூலிக்கு மாரடிக்கும் நபர்கள் எல்லாம் அனுப்பப்பட்டவர்கள் அல்ல. வேதாக கல்லூரிகளில் படித்து பட்டம் பல பெற்ற ஊழியக்காரர்கள் எல்லாம் தேவனால் அனுப்பப்பட்டவர்கள் அல்ல. மாறாக அவர்கள் அனைவரும் அவர்கள் சார்ந்திருக்கும் ஸ்தாபன சபைகளால் அனுப்பப்பட்டவர்கள். அதற்காக அவர்களுக்கு ஸ்தாபனங்களே கூலி கொடுக்கிறது. ஆனால் அனுப்பப்பட்டவன் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டு, அவரால் அனுப்பப்பட்டவனாக இருக்க வேண்டும். அவ்வாறாகவே தேவனால் அனுப்பப்பட்டவர்களே பிரசங்கிக்க முடியும். இயேசு தான் தெரிந்துக்கொண்ட சீஷர்களை இரண்டு இரண்டு பேராக அனுப்பி, ராஜ்யத்தின் நற்செய்தியை உபதேசிக்கவும், பிரசங்கிக்கவும் அனுப்பினார். (லூக்.10:1) பரிசுத்த வேதாகமத்தில் நாம் யாராவது தன் சுய இச்சையின்படியே கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தை பிரசங்கித்ததாக காணமுடியாது. ஆனாலும் ஒரு சிலர் பிரசங்கித்தார்கள், அற்புத அடையாளங்களை செய்தார்கள். ஆனால் அவர்களை அவர் அனுப்பவில்லை. ஆதலால் நான் உங்களை அறியேன் என்றார். நீர் என்னை அனுப்பினது போல் நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன் என்றார். (யோ.17:8,21,18) இவர்களுக்கு ஆதரவாக பரிசுத்த ஆவி அனுப்பப்படுகிறார். பிதா அனுப்பப்போகிற தேற்றரவாளாகிய பரிசுத்த ஆவியே எல்லாவற்றையும் உங்களுக்கு போதித்து நான் உங்களுக்கு சொன்ன எல்லாவற்றையும் நினைப்பூட்டுவார். (யோ.14:26) ஆக அனுப்பப்பட்டவர்கள் பிரசங்கித்தார்கள். தங்கள் சொந்த கருத்தை பிரசங்கிக்கவில்லை. தாங்கள் சார்ந்துள்ள ஸ்தாபன சபை கோட்பாடுகளை பிரசங்கிக்கவில்லை. ஒருவர் செய்த பிரசங்கத்தை வைத்து பிரசங்கிக்கவில்லை. கல்லூரிகளில் படித்த பாடங்களை ஜனங்கள் மத்தியில் பிரசங்கிக்கவில்லை. மாறாக அவர்களுடைய பிரசங்கங்கள் யாவும் கர்த்தருடைய வார்த்தையிலிருந்தே வந்தது. வாசலூக்கு முன் நிற்க இடம் போதாதபடிக்கு அநேகர் கூடி வந்திருந்தார்கள். அவர்களுக்கு இயேசு வசனத்தை போதித்தார். (மாற்.2:2) அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு கர்த்தருடைய வார்த்தையை / தேவவசனத்தை தைரியமாய் சொன்னார்கள். கர்த்தருக்குள் திடன் கொண்டு பயமில்லாமல் திருவசனத்தை அதிகமாய் துணிந்து சொன்னார்கள். (பிலி.1:14) தேவ வசனத்தை போதித்தார்கள். (எபே.13:7) கவனியுங்கள். கர்த்தருடைய வசனமோ என்னென்றைக்கும் நிலைத்திருக்கும். உங்களுக்கு சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் இதுவே. (1பேது.1:25) மேலும் கவனியுங்கள். பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே சுவிசேஷத்தை பிரசங்கித்தார்கள். (1பேது.1:12) இன்று யார் பரிசுத்த ஆவியினால் பிரசங்கிப்பது? பரிசுத்த ஆவியை பெறாத திரித்துவ ஸ்தாபன சபை ஊழியர்கள் எப்படி பரிசுத்த ஆவியினால் பிரசங்கிக்க முடியும்? பரிசுத்த ஆவி இவர்களிடத்தில் இருந்தால் சத்திய ஆவி இவர்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தியிருக்குமே? அப்பொழுது இவர்கள் பாவமன்னிப்பு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் என்று பிரசங்கித்திருப்பார்களே? கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாய் இருக்கிறார் என்ற வெளிப்பாடு இவர்களுக்கு கிடைத்திருக்குமே? ஆக திரித்துவ ஸ்தாபன ஊழியக்காரர்கள் யாவரும் தேவனால் / கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் அனுப்பப்படவில்லை. அவர்கள் தங்கள் ஸ்தாபன கல்லூரிகளில் கற்றுக்கொண்டு வந்து, பெற்ற ஞானத்தை சுவிசேஷமாய் பிரசங்கிக்கிறார்கள்.

56. இப்பொழுது தேவனால் அனுப்பப்பட்டவன் பிரசங்கிக்கும் போது பரிசுத்த ஆவி அவனோடு இடைபடுகிறார். தேவன் தம்முடைய வார்த்தையை அவன் வாயில் வைக்கிறார். தேவன் தம்முடைய வார்த்தையை உன் வாயில் வைக்க, நீ ஜனங்களுடைய செவிகளில் தேவனுடைய வார்த்தையை போடுகிறாய். ஆக கிறிஸ்துவின் சுவிசேஷத்தை

பிரசங்கிப்பதில் மூன்று பேர் பங்கு கொள்கிறார்கள். முதலாவது தேவன், இரண்டாவது அனுப்பப்பட்ட நபரோடு தேவன் இடைபடுகிறார். தம்முடைய வார்த்தையை அவன் வாயில் வைக்கிறார், மூன்றாவது உன்னால் பேசப்பட்ட வார்த்தையை கேட்கும் ஜனங்கள். ஆக தேவன் – நீ (ஊழியக்காரன்) - ஜனங்கள். அனுப்பப்பட்டவர்கள் தங்கள் வாயின் வார்த்தை மூலமாகவே ஜனங்களிடம் பரிமாற்றம் / தொடர்பு கொள்ளுகின்றனர். இப்பொழுது தேவனால் ஒருவன் சுவிசேஷத்தை பிரசங்கிக்க அனுப்பப்பட்டு, தேவன் அனுப்பப்பட்டவன் வாயில் வார்த்தையை வைக்க, அனுப்பப்பட்டவனாகிய அவன் பிரசங்கிக்க, அதை கேட்ட ஜனங்கள் விசுவாசத்தோடு கேட்டபடியினால் அது அவர்களுக்கு பிரயோஜனப்பட்டது. சத்தியமுள்ளவரை அறிந்துகொள்வதற்கு தேவனுடைய குமாரன் வந்தார். இந்த குமாரனாகிய இயேசு கிறிஸ்துவே சத்தியமுள்ளவர். இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாய் இருக்கிறார். அப்படியானால் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவே கர்த்தர், அவரே மெய்யான தேவன். இவர் ஜீவனுள்ள தேவன், நித்திய ராஜா என கேட்ட ஜனங்கள் புரிந்துக்கொண்டு விசுவாசித்தார்கள். (யோ.5:20, எரே.10:10) கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமேயல்லாமல் வெறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை. ஆதலால் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று பிரசங்கிக்கப்பட்டதை விசுவாசித்தவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் தங்கள் பாவமன்னிப்புக்கென்று அன்று சுமார் 3000 பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள். அவ்வாறாக இரட்சிக்கப்பட்டவர்களைத்தான் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார். அவர்கள் நித்திய ஜீவனுக்கென்று நியமிக்கப்பட்டவர்கள். (அப்.13:48) ஆனாலும் இடறுகிறதற்கென்றே ஒரு கூட்டம் இருந்தது. அவர்கள் இடறினார்கள். (1பேது.2:8) ஏன் இடறினார்கள்? பிதாவுக்கும் குமாரனுக்கும் உள்ள ஐக்கியத்தை இவர்களால் புரிந்துக்கொள்ள முடியவில்லை. பிதா ஒரு தனி நபர், குமாரன் ஒரு தனி நபர், பரிசுத்த ஆவி ஒரு தனி நபர் ஆக தேவத்துவத்தில் மூவர் உண்டு. பிதா குமாரன் பரிசுத்த ஆவி என விசுவாசித்து இடறினார்கள். ஆனால் கவனியுங்கள் : பிதா தவிர வேறொருவனும் குமாரனை அறியான். குமாரன் தவிர வெறொருவனும் பிதாவை அறியான். பிதா, சீமோன் குமாரனுக்கு, இயேசுவே ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என வெளிப்படுத்தினார். (மத்.16:16) இயேசு தன்னைக்கண்டவன் பிதாவைக்கண்டான் என பிலிப்புக்கு வெளிப்படுத்தினார். (யோ.14:9) இங்கு நாம் தியானித்ததை விசுவாசித்து, அப்படியே நான் ஏற்றுக்கொள்ளுகிறேன், தேவன் ஒருவர். அவருடைய நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. அவரே பிதா குமாரன் பரிசுத்த ஆவிக்குரியவர். தேவத்துவத்தில் மூவர் இல்லை. ஒரே நபர். தேவத்துவம் பரிபூரணமாக கிறிஸ்துவாகிய அவருக்குள் இருக்கிறது. ஆனால் திரித்துவ ஸ்தாபன மக்கள் இதில் இடறுகிறார்கள். No, No எங்களுக்கு மூவர் உண்டு. பிதா ஒருவர், குமாரன் ஒருவர், பரிசுத்த ஆவி ஒருவர் என்ற பிசாசின் வியாக்கியானத்தை முன்வைத்து அதில் இடறுகிறார்கள். திரித்துவ ஸ்தாபன சபை ஊழியர்களை நம்பி மக்கள் மோசம் போனார்கள். ஏனென்றால் அவர்கள் அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களுமாயிருக்கிறார்கள். கவனியுங்கள் பிரசங்கம் ஒன்றுதான். அது தேவனுடைய வார்த்தையிலிருந்து வந்தது. அதை ஒரு சாரார் விசுவாசித்தார்கள். மற்றொரு சாரார் விசுவாசிக்கவில்லை. ஏனென்றால் தேவபக்திக்கேதுவான சத்தியத்தை அறிகிற அறிவும், விசுவாசமும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கே உண்டாகும். (தீத்.1:3)

57. இப்பொழுது கவனியுங்கள் விசுவாசித்தவர்கள் தேவனை தொழுதுகொள்ளுகிறார்கள். மனந்திரும்புகிறார்கள். தங்களுடைய பழைய சுபாவத்திற்கு, அக்கிரமங்களுக்கு, செய்த பாவங்களுக்கு மனந்திரும்புகிறார்கள். அதன்பின் தேவனிடத்தில் பாவ அறிக்கை செய்கிறார்கள். பாவத்தினாலே பிறந்து, பாவத்திலே வளர்ந்து, நீண்ட வெள்ளை அங்கி அணிந்து தன்னை பரிசுத்தவான்களாக்கினவர்களும், வெள்ளையடிக்கப்பட்ட சுவர்களிடமும் சென்று பாவ அறிக்கை செய்யவில்லை. அவர்கள் அந்த நபர்களை அடையாளம் கண்டுக்கொண்டார்கள். ஆதலால் தேவனிடத்தில் பாவஅறிக்கை செய்து, ஒப்புரவானார்கள். அதன்பின் பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே ஞானஸ்நானம் பெறுகிறார்கள். பரிசுத்த ஆவியை பெறுகிறார்கள். ஆத்தும இரட்சிப்பை அடைகிறார்கள். (அப்.2:38) இவ்வாறாக இரட்சிக்கப்பட்டவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்.(அப்.2:47) இதுவரை சமாதானத்தைக்கூறி நற்காரியங்களை சுவிசேஷமாய் அறிவித்து இரட்சிப்பை பிரசித்தப்படுத்தின அனுப்பப்பட்டவர்கள் பணி முடிந்தது. இதுவும் சுவிசேஷகர்களுடைய பணிதான். ஆனால் சுவிசேஷத்தை பிரசிங்கிக்க இவர்கள் தேவனால் அனுப்பப்பட்டார்கள். (ஏசா.52:7, ரோ.10:15, நாகூம்.1:15)

58. அடுத்து என்ன நடக்கிறது என்று கவனியுங்கள். இப்பொழுது இவ்வாறாக இரட்சிக்கப்பட்டவர்களோடு ஐந்து வகை ஊழியத்தில் உள்ள பணியாளர்கள் இடைபடுகிறார்கள். இவ்வாறாக இரட்சிக்கப்பட்டவர்கள் அனைவரும் தேவனுடைய குமாரனை பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் ஒருமைபட்டவர்களாகி கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குதக்க பூரண புருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் பூரணப்படும் பொருட்டு அதாவது கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது இயேசு கிறிஸ்துவினுடைய ஏழு திவ்வியசுபாவத்தில் பங்கு பெற்று (விசுவாசம், வல்லமை, ஞானம், தன்னடக்கம், பொறுமை, தேவபக்தி, சகோதர சிநேகம் (2பேது.1:5-7) இவ்வாறாக சபை பூரணப்படும்வரை சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும் கர்த்தர் சிலரை அப்போஸ்தலராகவும், தீர்க்கதரிசிகளாகவும், சுவிசேஷகராகவும், மேய்பராகவும், போதகனாகவும் ஏற்படுத்தினார். (எபே.4:11-13) இப்பொழுது இந்த திருப்பணிவிடையாளர்கள் இரட்சிக்கப்பட்டவர்களோடு இடைபடுகிறார்கள், அவர்களுக்கு ஆவிக்குரிய ஆலோசனைகளை கூறுகிறார்கள். சகோதரரே நீங்கள் வார்த்தையினாலாவது (Word) நிருபத்தினாலாவது (Epistle) உங்களுக்கு உபதேசித்த முறைமைகளை கைக்கொள்ளுங்கள் என்கிறார்கள். (2தெச.2:15, 3:14) இந்த ஐந்து வகை சபைபக்திவிருத்திக்கடுத்த

ஊழியங்கள் வாயிலாக, தேவனுடைய வார்த்தை பிரசங்கிக்கப்படுகிறது. அதோடு மாத்திரமல்ல நிருபங்களும் எழுதப்படுகிறது. அதாவது சுவிசேஷ நற்செய்தி ஒருபுறம், மறுபுறம் உபதேசங்களைக் கொண்ட நிருபம். வாயின் வார்த்தைகளால் செய்தி பிரசங்கிக்கப்படுகிறது. அதன்பின் உபதேசங்களைக் கொண்டு நிருபங்கள் எழுதப்படுகிறது. இவ்வாறாகத்தான் புதிய ஏற்பாட்டில் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டதையும், அதன்பின் நிருபங்கள் எழுதப்பட்டதையும் நாம் காண்கிறோம். இந்த பணியை செய்ய காலேப் யோசுவா கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டு சுவிசேஷகனாக நியமிக்கப்பட்டு இருக்கிறார். நீங்கள் இதை புரிந்துக்கொள்வீர்கள் என நினைக்கிறேன். என்னுடைய சுவிசேஷ ஊழியம் / பிரசங்கம் மற்றும் நிருபங்கள் எழுதுவது இதனால்தான் 1978 முதல் இதுவரை தடைபடவில்லை.

**59. இப்பொழுது இங்கு சற்று கவனியுங்கள்:**
தேவன் நேரடியாக அனுப்பப்பட்ட பிரசங்கியோடு இடைப்பட்டு அவனுடைய வாயில் தம்முடைய வார்த்தையை வைக்கிறார். ஒரு பாஸ்டர் அனுப்பப்பட்டவன் அல்ல. சுவசேஷ ஊழியத்திற்கும் பாஸ்டருக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. பாஸ்டர் என்பவன் மந்தையை மேய்க்கும் ஒரு மேய்ப்பன் மாத்திரமே. நான் ஒரு பத்திரிக்கையில் "மறைந்துக்கிடக்கும் சத்தியங்கள்" குறித்து ஒரு பாஸ்டர் பேசப்போவதாக எழுதியிருந்தது. பாருங்கள் இது ஒரு மேய்ப்பனுக்கு கொடுக்கப்பட்ட பணி அல்ல. கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரர்களுக்கு தம்முடைய இரகசியங்களை வெளிப்படுத்துகிறார் என ஆமோஸ்.3:7, எரே.27:18 ல் வாசிக்கிறோம். ஆக இந்த மேய்ப்பன் தன்னுடைய அழைப்பை அறியாதவன். ஒரு கள்ளகபடமுள்ள வேலையாள். மேலும் இவர், தான் தேவனுடைய வார்த்தைகளை ஆராய்ச்சி செய்வதாக கூறுகிறார். இதுவும் தவறு. ஒருவன் தேவனுடைய வார்த்தையை ஆராய்ந்து பார்க்க மாத்திரமே செய்யலாம். தேவனுடைய வார்த்தையை ஆராய்ச்சி செய்ய முடியாது. அவ்வாறு செய்கிறவன் பிசாசு. அனுப்பப்பட்ட பிரசங்கி, தேவனிடமிருந்து பெற்ற, அவர் அவன் வாயில் வைத்த வார்த்தைகளை நேரடியாக மக்களிடம் பிரசங்கிக்கிறான். நித்திய ஜீவனுக்கென்று நியமிக்கப்பட்டவர்கள் விசுவாசிக்கிறார்கள். இடறுகிறதற்கென்று நியமிக்கப்பட்டவர்கள் இடறுகிறார்கள். ஏனென்றால் நமது மத்தியில் விசுவாசிகள், அவிசுவாசிகள், பாவனை விசுவாசிகள் உண்டு. அடுத்து உபதேசங்கள் / ஆலோசனைகள் நிருபங்கள் வாயிலாக எழுதப்படுகின்றன. இதை வாசிக்கிறவனும், கேட்கிறவனும் எழுதியிருக்கிறவைகளை கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள்.

60. மேற்கண்ட மூன்று காரியங்களில் இதன் நடைமுறைகளை / தொடர்பு முறைகளை சற்று கவனியுங்கள். Mode of Transmit. Transmit என்றால் இடை நின்று தொடர்பு படுத்துவது. தேவனுக்கும் – செய்தியை கேட்பவர்களுக்குமிடையில் – அனுப்பப்பட்டவனின் வாயின் வார்த்தை. அதாவது தேவனுக்கும் அவருடைய வார்த்தைகளை கேட்பவருக்குமிடையில் அனுப்பப்பட்டவர்கள் நின்று தொடர்புபடுத்துகிறவர்களாக இருக்கிறார்கள். தேவன் தமது வார்த்தையை அனுப்பப்பட்டவன் வாயில் போடுகிறார் தேவன் நேரடியாக கேட்பவரோடு இடைபடுவதில்லை. அனுப்பப்பட்டவன் பிரசங்கிக்கிறான். ஜனங்கள் கேட்கிறார்கள். தேவனுக்கும் – எழுதுகிறவனுக்கும்; எழுதுகிறவனுக்கும் விசுவாசிக்கிறவர்களுக்கும் இடையில் நிருபங்கள் இடம் பிடிக்கிறது. தேவன் தூண்டுகிறார். ஆவியானவர் பேனாவை பிடித்து ஊழியக்காரனை நிருபங்கள் எழுதவைக்கிறார். அவன் எழுதுகிறான். ஜனங்கள் விசுவாசிக்கிறார்கள், நிராகரிக்கவும் செய்கிறார்கள், அது அவர்களுடைய சுயாதீனம். நான் நிருபமாக எழுதுகிறவைகளை நீங்கள் விசுவாசிக்கிறீர்களோ, இல்லையோ அது குறித்து எனக்கு கவலையில்லை. ஆனால் நான் நிருபங்களை எழுதித்தான் ஆக வேண்டும். நான் வார்த்தையை விதைத்து நீர் பாய்ச்ச வேண்டும். விளைச்சலைக் கொடுப்பவர் தேவன்.

61. இப்பொழுது நீங்கள் இங்கு மிக முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவென்றால் : இந்நாட்களில் நமது மத்தியில் ஊழியக்காரர்களோ, ஆட்டுத்தோலை போர்த்திய ஓநாய்களாகவே இருக்கிறார்கள். ஆதலால் தான் தேவன் ஊழியக்காரர்களோடு இடைபடுவதில்லை. சாத்தான் மாத்திமே அவர்களோடு இடைபடுகிறான். ஒருவன் சாத்தான் குடியிருக்கும் இடத்தில் இருந்துகொண்டு நான் நல்லவன், உத்தமன், என்னை பாருங்கள், என் அழகை பாருங்கள் என் பிரசங்கத்தை பாருங்கள். ஆனால் என் கிரியைகளை மாத்திரம் பார்க்காதீர்கள். உங்களுக்கு பிரசங்கம் தான் முக்கியம் என்று கூறினால், அவன் இருக்கும் இடத்திற்கு போகாதீர்கள், அவனுக்கு செவிசாய்க்காதிருங்கள். அங்கு கொடிதான வஞ்சகம் உண்டு. இவர்கள் கள்ளகபடமுள்ள வேலையாட்களாகவே இருக்கிறார்கள். இவர் தொலைக்காட்சி, வாட்ஸ்ஆப், யூடியூப், பேஸ்புக், டுவிட்டர் போன்ற நவீன தொழில்நுட்ப இணையதளங்கள் மூலமாக சீர்கேடுகளில் ஈடுபடுகிறார்கள், பிறரை ஈடுபடவும் வைக்கிறார்கள். நீங்கள் நித்திய ராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதில்லை. பிறரையும் பிரவேசிப்பதற்கு தடை செய்கிறீர்கள். நீங்கள் இதுதான் சரி என்று நினைத்து தவறானதை பற்றிக்கொள்கிறீர்கள். ஆக நீங்கள் ஜனங்களோடு மேற்கண்ட இணையதளங்கள் வாயிலாக இடைபடுகிறீர்கள். நீங்கள் ஜனங்களோடு நேரடியாக ஈடுபடுவதற்கு பதிலாக உங்கள் ஸ்தானத்தில் மேற்கண்ட இணையதளங்களை வைத்து அதன் வாயிலாக தேவனுடைய செய்தியை அனுப்புகிறீர்கள். அதாவது தேவன் – நீங்கள் – உங்களுக்கு பதிலாக இணையதளங்கள், அதன் வாயிலாக செய்தி / தேவனுடைய வார்த்தை ஜனங்களை சென்றடைகிறது. இது தேவனுடைய பிரமாணத்திற்கு, அவர் சுவிசேஷத்தை ஜனங்களுக்கு எடுத்துச்செல்ல கொண்டுள்ள முறைமைகளுக்கு மாறானது மற்றும் விரோதமானது. நீங்கள் தேவனுடைய வார்த்தையை Modern way of Transmitting மூலம் ஜனங்களிடம் கொண்டு செல்கிறீர்கள். பாருங்கள் உங்களுக்கு பதிலாக இணையதளங்களை ஈடுபடுத்த பிசாசு உங்களை திசைதிருப்பி விட்டான். தேவன் உங்களை நீ இதை பிரசங்கி என்று சொல்லும் போது, நீங்கள் மற்றொன்றை கொண்டு, உங்களுக்கு கூறாததைக் கொண்டு பிரசங்கிக்கிறீர்கள். அங்குதான் தவறு நடக்கிறது. தேவன் உங்களிடம்

நீ இதை செய் என்று கூறினாள் நீங்கள் மற்றொருவரைக் கொண்டு தேவன் சொன்னதை செய்து நான் நீர் சொன்னதை செய்துவிட்டேன் என்று கூறுகிறீர்கள். அது கீழ்படியாமையின் பிள்ளைகளிடத்தில் கிரியை செய்யும் ஆவி. நீங்கள் நூதன சீஷனாக இருக்க கூடாது. கவனியுங்கள் தேவன் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராய் இருக்கிறார். அவர் அன்றைய முறைமைகளில்தான் இன்றும். அதிலிருந்து அவர் மாறுவதில்லை. தேவன் உங்களோடு இடைப்படுகிறார். நீங்கள் ஜனங்களோடு இடைபடுகிறீர்கள். அது வார்த்தை மற்றும் நிருபங்கள் மூலமாகத்தான் இருக்க வேண்டும். நீங்கள் புதிய முறைகளை கையாளுவது தேவனை எதிர்த்து நிற்பதாகும். நீங்கள் சாத்தானுக்கு கூட்டாளியாக இருந்துகொண்டு, அவனோடு இணைந்து அவனுக்காக ஊழியம் செய்கிறீர்கள்.

62. நீங்கள் மேற்கண்ட நவீன இணையதளங்கள் வாயிலாக செய்திகளை / வார்த்தையை Transmit செய்யும் போது உங்களுடைய ஸ்தானத்தில் அந்த நவீன இணையதளங்கள் வந்துவிடுகிறது. ஜீவனில்லாத ஒன்றைக்கொண்டு ஜீவனுடையவர்களிடம் பேசமுடியாது. ஜீவன் உள்ளவரிடம் ஜீவன் உள்ள ஒன்றே பேசவேண்டும். நீங்கள் உயிரற்ற கீதவாத்தியங்களாக இருக்கிறீர்கள். அதுகூடாது. உங்களுடைய நவீன இணையதளங்கள் யாவும் தீமையானது. இவைகள் யாவும் நவீன தொழில்நுட்ப சீர்கேடுகள். இப்படிப்பட்ட சீர்கேடுகளைக்கொண்டு தேவனுடைய வார்த்தையை மக்களிடம் எடுத்துச்செல்வதா? தேவனுடைய வார்த்தையை எடுத்துச்செல்ல ஒரு மனிதனையே மனிதனுடைய நிருபங்களையே தேவன் அங்கீகரிக்கிறார். தேவன் தம்முடைய சாயலாகமும், ரூபத்தின் படியேயும் மனுஷனை சிருஷ்டித்தார். அவனோடு தொடர்புகொள்ள, தேவன் அவரது சாயலாகவும், ரூபத்தின்படியேயும் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு மனிதனாகவே இருப்பான். இதை விட்டு, மனிதனோடு தொடர்பு கொள்ள ஒரு ஜீவனற்ற ஒன்றை தேவன் உபயோகிப்பதில்லை.

63. முடிவாக இதுகுறித்து வேதவாக்கியங்களுக்கடுத்த என் கருத்து என்னவெனில் : நீ தேவனிடத்திலிருந்து ஜனங்களுக்கு ஒரு செய்தியை கொண்டுவருவாயாகில் உனக்கும், தேவனுடைய செய்தியை உன் வாயிலிருந்து கேட்கும் ஜனங்களுக்கும் மத்தியில் உன் வாயின் வார்த்தை மாத்திரமே இருக்க வேண்டும். அத்துடன் நீ எழுதும் நிருபங்கள். இதுவே வேத பூர்வமானது. ஆக உங்கள் நவீன இணையதளங்கள் அனைத்தும் பிசாசினுடையதே. ஆதலால் எனக்கு பிரியமானவர்களே. நீங்கள் உங்கள் இணையதளங்கள் வாயிலாக பிசாசுக்கே ஊழியம் செய்கிறீர்கள். நீங்கள் பிசாசினால் எடுத்து உபயோகப்படுத்தும் கருவியாக இருக்கிறீர்கள். பிசாசு உங்களைக்கொண்டு தேவனுக்கடுத்த காரியங்களை, முறைமைகளை தாறுமாறாக்குகிறான். ஆக தேவனுடைய வார்த்தையை செய்தியை சுமர்ந்துவரும் உங்களுக்கும், செய்தியை கேட்கும் ஜனங்களுக்கும் ஒரு Transmit ஏஜென்சியாக உங்கள் இணையதளங்கள் இருக்க முடியாது. ஆனால் The seeds will goin Newspapers, Reading Materials, until every predestinated seed of God was heard it (Q & A.172, Page.724, Para.179)

64. இதுகுறித்து மோசேக்கடுத்த காரியங்களை ஒரு எடுத்துக்காட்டுக்காக இத்துடன் இணைத்து பார்ப்போம். யாத்.4அதிக்கு வருவோம். **மோசே :** நான் வாக்கு வல்லவன் அல்ல. நான் திக்குவாயும், மந்தநாவும் உள்ளவன். **தேவன் :** நீ போ, நான் உன் வாயோடேயிருந்து நீ பேச வேண்டியதை உனக்கு போதிக்கிறேன். **மோசே :** ஆண்டவரே நீர் அனுப்பச்சித்தமாய் இருக்கிற வேறுயாரையாகிலும் அனுப்பும். **தேவன்:** நான் உன் வாயிலிருந்து நீ செய்ய வேண்டியதை உனக்கு உணர்த்துவேன். நீ ஆரோனுக்கு தேவனாயிருப்பாய் அவன் உனக்கு வாயாக இருப்பான். கவனியுங்கள் : மோசேக்கு பதிலாக அவன் ஸ்தானத்தில் ஆரோன். ஆரோன் மோசேயின் வார்த்தைகளைக் கொண்டு அந்த ஜனங்களிடம் பேசுகிறான். நீங்கள் ஆரோன் ஸ்தானத்தில் உங்கள் நவீன இணையதளங்களைக்கொண்டு செயல்படுகிறீர்கள். நாம் என்ன செய்கிறோம்? தேவன் நம்மோடு இடைபடுகிறார். நாம் நவீன இணையத்தளங்களைக்கொண்டு ஜனங்களோடு இடைபடுகிறோம். ஆனால் தேவனோ மனிதர்களைக்கொண்டு மனிதர்களோடு இடைபடுகிறார்.

65. வானங்களில் உள்ளவைகள் கர்த்தரை துதித்தாலும், தூதர்களாகிய அவருடைய சேனைகள், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், வானாதி வானங்கள் ஆகாய மண்டலத்தில் உள்ள தண்ணீர்கள், பூமியில் உள்ளவைகளில் மகா மச்சங்கள், சகல ஆழங்கள், அக்கினி, கல்மழை, உறைந்த மலை, மூடுபனி, பெருங்காற்று, மலைகள் மேடுகள், கனிமரங்கள், கேதுருமரங்கள், காட்டுமிருகங்கள், நாட்டு மிருகங்கள், ஊரும் பிராணிகள், இறகுள்ள பறவைகள் போன்றவைகள் யாவும் கர்த்தரை தூதித்தாலும், சுவிசேஷகத்தை பிரசங்கிக்கும் பொறுப்பை தேவன் அவர்களிடத்தில் ஒப்புவிக்கவில்லை. மாறாக தமது சாயலாகவும், ரூபத்தின்படியேயும், சிருஷ்டிக்கப்பட்ட நித்திய ஜீவனை உடைய மனிதரிடமே ஒப்படைத்தார். ஆனால் நாமோ தேவனுடைய நியமங்களை முறியடிக்கிறோம். நீங்கள் மக்களை வஞ்சிக்கும் சாத்தானின் கருவிகளாகவே இருக்கிறீர்கள். அங்கு தேவன் – மோசே – ஆரோன் – ஜனங்கள். ஆனால் இங்கோ தேவன் – ஊழியக்காரன் (இவன் கள்ளகபடமுள்ள வேலைக்காரனாகத்தான் இருக்க முடியும்) – நவீன இணையத்தளங்கள் – ஜனங்கள். அன்று சாத்தான் ஏவாளுக்கு சற்று வித்தியாசமான ஆலோசனையைத்தான் கொடுத்தான். இன்று சாத்தான் ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்தவர்களைக்கொண்டு சற்று வித்தியாசமான ஆலோசனையைத்தான் கொடுத்துள்ளான். ஏழாம் சபைக்கால தூதன் – தீர்க்கத்தரிசி – ஏழாம் சபைக்கால தூதனுடைய செய்தி என்று கூறிக்கொண்டு சாத்தான் தன் தூதர்களைக்கொண்டு நவீன இணையதளங்கள் மூலமாக விசுவாசிகளை வஞ்சிப்பதை கண்கள் உள்ளவர்கள் காணத்தவறமாட்டார்கள். வஞ்சிப்பவனையும் அடையாளம் கண்டு கொள்வார்கள்.

66. மேற்கண்ட நவீன இணையதளங்களை தகவல் தொடர்பு, விளம்பரம் போன்றவைகளுக்கு ஓகே. ஆனால் அவைகள் தேவனுடைய வார்த்தையை சுமர்ந்து செல்லும் மனுஷனுக்கு ஈடாக முடியாது. ஆனால் இந்த ஹாலிவுட் முறைமைகளை, பிரசங்கத்தை, சுவிசேஷத்தை விட்டு விலகுங்கள். அது தீது. எழுதப்பட்ட வார்த்தைகளை எடுத்துச் செல்வதற்கு இந்த இணைய தளங்களை பயன்படுத்தலாம். அதாவது தேவனுடைய வார்த்தையைக்கொண்ட பரிசுத்த வேதாகமத்திலிருந்து அநேக உபதேசங்கள், நற்காரியங்களை நீங்கள் எடுத்து அதை இந்த இணையத்தளத்தின் மூலமாக பிரகடணப்படுத்தலாம். அதில் தவறு இல்லை. ஆனால் நேரடியாக பேசப்படும் வார்த்தைகளை நீங்கள் இந்த இணையதளத்தின் மூலமாக எடுத்துச்செல்ல முடியாது. **இயேசுவே வாரும்** எழுதப்பட்ட நிருபத்தை இந்த நவீன இணையதளங்கள் வாயிலாக நான் எடுத்துச் செல்கிறேன். அதாவது உரைக்கப்பட்ட வார்த்தை, எழுதப்பட்ட வார்த்தையாகி அந்த வார்த்தைகளை நீங்கள் மேற்கண்ட இணையதளங்களில் நீங்கள் எடுத்துசெல்லலாம். ஆனால் உரைக்கப்படும் வார்த்தையை நீங்கள் நேரடியாக உங்கள் இணையதளங்களில் எடுத்துச்செல்ல முடியாது. இன்னும் சற்று தெளிவாக கூறப்போனால் உரைக்கப்படும் வார்த்தையை மேற்கண்ட இணையதளங்களில் எடுத்து செல்லாமல், எழுதப்பட்ட வார்த்தைகளை எடுத்துச்செல்லலாம். உரைக்கப்பட்ட வார்த்தை எழதப்பட்ட வார்த்தையாகும் பொழுது நீங்கள் அதனை உங்கள் இணையதளங்களில் எடுத்துச்செல்லலாம். உரைக்கப்பட்ட வார்த்தைகளை நீங்கள் நேரடியாக எடுத்துச்செல்ல முடியாது. அது கூடாது. டிவி ஒரு சாபம் என்று நீங்கள் கூறும்போது அதனை சார்ந்த மேற்கண்ட இணையதளங்களும் சாபம் தானே.

**67. முகநூல் (Facebook) :** இதில் சுமார் 13 வயதிற்கு மேற்பட்டவர்கள் தங்கள் பெயரை பதிவு செய்துகொண்டு முகநூலில் உள்ள மற்றவர்களை நண்பர்களாக்கி கொண்டு, தங்கள் கருத்துக்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்கிறார்கள். இந்திய சட்டத்தின்படி 18 வயதிற்குட்பட்டவர்கள் இந்த சமூக வலைதளங்களில் உறுப்பினராக்க கூடாது. இதில் ஒருவருக்கொருவர் நேரடி தொடர்பு இல்லாததால், இதன் மூலம் சமூக குற்றங்கள் அதிகம் நடக்கிறதாக தெரிகிறது. அது தான் உண்மை. இதனால் தமிழகத்தில் சென்னை காவல் துறை போலீஸ் கமிஷனர் அலுவலகத்திற்கு மாதத்திற்கு குறைந்தபட்சம் பத்து புகார்கள் வருகிறதாக வாசித்தேன். இதனால் முகநூல் நிறுவனம் பலருக்கு நஷ்டஈடு வழங்க வேண்டிய நிலையில் வந்ததாகவும் அறிந்தேன். நான் என் வீட்டில் அன்று முதல் இன்று வரை தொலைக்காட்சி வைத்திருக்கவில்லை. கர்த்தர் என்னை காத்துக்கொண்டார்.

68. இன்றைய கிறிஸ்தவர்களின் தப்பிதங்களை எடுத்துக்கூறு. அப்பொழுது அவர்கள் செம்மறி ஆடா, அல்லது வெள்ளாடா என்பதை உடனே தேவனுடைய ஆவியை பெற்றவர்கள் அறிந்துகொள்வார்கள். ஒரே தடவை அவர்களை கடிந்துக்கொண்டு, கண்டனம் பண்ணி பேசு அவர்களுடைய உடன் நடவடிக்கை அவர்கள் யார் என்று பிரதிபளித்துவிடும். இன்றைய சபை குளிருமின்றி, அனலுமின்றி, வெதுவெதுப்பாய், அதனுடைய கனி சாரமற்றுப்போய் காணப்படுவதற்கு இதுவே காரணம். என்னுடைய 40 ஆண்டுகால ஊழியத்தின் பாதையில் என் தேவன் என்னோடே கூட இருக்கிறார். 1978 முதல் அவர் எனக்கு கொடுத்த உக்கிராணப் பொறுப்பை என்னாலே இயன்ற மட்டும் உண்மையோடும் உத்தம இருதயத்தோடும் செய்வதால் அவர் என்னை விட்டு விலகவுமில்லை, என்னை கைவிடவுமில்லை என்பதை நான் நன்கு அறிவேன். என் ஊழியத்தின் பாதையில் நான் சம்பாதித்தது "சத்தியத்தை சொல்லுவதினால், எழுதுவதினால் நான் அனைவருக்கும் சத்ருவானேன்" என்பதே ஆனாலும் இதில் நான் கர்த்தருக்குள் பெருமைபட்டுக்கொள்கிறேன். அல்லேலூயா! கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!!

**மார்ச் 2019.**

**கிறிஸ்துவின் அன்பில்**
**சகோ. காலேப் யோசுவா**

**If Undelivered**
**Please Return to:**

**Caleb Joshua**
**32, Jemi Ethiraj Nagar**
**Erayamangalam Road**
**Mappedu, Perambakkam (Via)**
**Thiruvallur District – 631402.**
**Mobile No. 9444701953**

**PRINTED BOOK**
**Clause No. 128 P.O. GuideRules**
**GRNP/Dlgs/16 dated @ Tambaram the 04.04.2016.**
**Rs. One per every 100 gms**
**To:Dr.Rev,Pr,Bro,Sis.,**

**This Printed Book, Yesuvae Vaarum Owned and Published by Caleb Joshua from his above address and Printed by V.R. Sermakani, Sakthi Process, 2/1F Kummalamman Kovil St, Tondiarpet, Chennai. 600 081.Ph: 044- 25956006. Editor Caleb Joshua**